ரூபா: 15.00
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது ═══ Valampurii ═══

திருவள்ளுவர் ஆண்டு 2042 சித்திரை 18 ஞாயிற்றுக்கிழமை (01.05.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 133

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# ஐ.நாவின் அறிக்கைக்கு அரசிடமிருந்து பதிலில்லை

## பேச்சாளர் தெரிவிப்பு

(நியூயோர்க்)

நிபுணர்கள் குழுவின் அறிக்கை தொடர்பில் இலங்கை அரசாங்கம் இதுவரை உத்தியோகபூர்வமாக எவ்வித பதிலையும் அளிக்கவில்லை என ஐக்கிய நாடுகள் சபை செயலாளர் நாயகம் பான் கீ மூனின் பேச்சாளர் மார்ட்டின் நெசர்கி தெரிவித்துள்ளார்.

(20ஆம் பக்கம் பார்க்க)

## ...ளிடம் பலவந்தமாக ...யெழுத்து வேட்டை

(கொழும்பு)

...நாடுகள் நிபுணர் குழு அறிக் ...க அரசாங்கம் மக்களை பல ...தி கையொப்பங்களை திரட்டி ...மிழ்த் தேசிய விடுதலைக் கூட் ...பாதுச்செயலாளர் எம்.கே.சிவாஜி

(20ஆம் பக்கம் பார்க்க)

## ... திங்கட்கிழமை ...றை தினமல்ல

(கொழும்பு)

...திங்கட்கிழமை விடுமுறை தின ...க்கப்படவில்லை என அரசாங் ...த்துள்ளது. இன்று மே தினம் ...ப்படுவதால் மேலதிக நாள் ஒன் ...றையை வழங்குவதற்கான ...டயாதென பொது நிர்வாக உள் ...மச்சர் டபிள்யூ.டி.ஏ.செனவிரத்ன ...ர்.

...ற மேதினம் விடுமுறை நாளான ...ழமை அனுஷ்டிக்கப்படுவதனால் ...மை

(20ஆம் பக்கம் பார்க்க)

# ...நாவின் அறிக்கையை நிராகரிக்க ...ழ்க் கூட்டமைப்பிடம் கோரிக்கை

(கொழும்பு)

...நாடுகள் நிபுணர் குழு அறிக்கை ...தேசியக் கூட்டமைப்பு நிராகரிக்க ... என உயர் கல்வி அமைச்சர் ...நாயக்க தெரிவித்துள்ளார். தமி ...லைப் புலிகள் தேசியவாத கொள் ...ாக போராட்டம் நடத்தியதாக நிபு ...அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள ...குறிப்பிட்டுள்ளார்.

எனினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட பல தமிழ் அரசியல் கட்சிகளின் சிரேஷ்ட தலைவர்களை படுகொலை செய்தன் மூலம் எவ்வாறான தேசியவாத கொள்கைகளை தமிழீழ விடுதலைப்புலிகள் பின்பற்றினார்கள் என அமைச்சர் கேள்வி எழுப்பியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் செயற்பாட்டா

(20ஆம் பக்கம் பார்க்க)

# 4,700 புலி உறுப்பினர்கள் மட்டுமே இன்னும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்

## சிறைச்சாலைகள் அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

நான்காயிரத்து எழுநூறு விடுதலைப் புலி உறுப்பினர்கள் மட்டுமே இன்னும் புனர்வாழ்வுக்குட்படுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் சந்திரசிறி கஜதீர தெரிவிக்கின்றார்.

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வு அமைச்சு உருவாக்கப்பட்டு ஒரு வருடம் பூர்த்தியானதை முன்னிட்டு நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

விடுதலைப்

(20ஆம் பக்கம் பார்க்க)

# ...ங்கைக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

(சென்னை)

...ம், கும்பகோணத்தில் இலங்கை ...தண்டிக்கக் கோரியும், இந்தியா ...க்கு துணை போவதை கண்டித் ...தமிழர்கட்சி சார்பாக நேற்று முன்தினம் ...ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றது. ...ஆர்ப்பாட்டத்திற்கு தஞ்சை மாவட்ட ...பாளர் வழக்கறிஞர் வீரக்குமரன் ...னோபா தலைமை வகித்தார். மாவட்ட ...பாளர் சதா முத்துகிருட்டிணன் மற்றும் நாகை மாவட்ட அமைப்பாளர் செல்வம் முன்னிலை வகித்தனர்.

கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்களால், இலங்கை அரசை தண்டிக்கக் கோரியும், இந்தியா இலங்கைக்கு துணை போவதைக் கண்டித்தும் தமிழீழ அரசை அங்கீகரிக்கக் கோரியும் முழக்கங்கள் எழுப்பப்பட்டன. இதேவேளை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் புலிக்கொடிகளை தாங்கியிருந்ததாக கூறப்பட்டது. (எ-6)



ஐ.நா. அறிக்கைக்கு எதிராக கையெழுத்து வேட்டை....

# ...அரசாங்கப் பிரதிநிதிகள் ...கைது செய்யப்படலாம்!

## ...ஐக்கிய தேசியக் கட்சி தெரிவிப்பு

(கொழும்பு)

...ய நாடுகள் சபை நிபுணர்கள் குழு ...அறிக்கையை அடிப்படையாக வைத்து ...நாடுகளுக்கு விஜயம் செய்யும் அரசாங் ...உயர் அதிகாரிகள் கைது செய்யப் ...ரிய வாய்ப்புகள் இருப்பதாக ஐக் ...கட்சி தெரிவித்துள்ளது.

...குழுவின் அறிக்கை வெளிவந்த ...நாடுகளுக்கு விஜயம் செய்யும் அரசாங்கத்தின் தலைவர்களுக்கு எதிராக அந்தந்த நாடுகளில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ள முடியும் என சர்வதேச மன்னிப்புச் சபை கூறியிருந்த நிலையில் ஐக்கிய தேசியக்கட்சி இக் கருத்தை வெளியிட்டுள்ளது.

இது குறித்து கொழும்பு ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டுள்ள ஐக்கிய தேசியக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாச ராஜபக்ஷ, நிபுணர்கள் குழுவின் அறிக்கையை அடிப்படையாக வைத்துக்கொண்டு வெளிநாடுகளுக்கு விஜயம் செய்யும் அரசாங்கத்தின் உயர் அதிகாரிகள் கைது செய்யப்பட வேண்டும் எனக்கோரி அவர்களுக்கு எதிரான பிடியாணையை பெறும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதற்கான சூழ்நிலை இருப்பதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

பாதுகாப்பு

(20ஆம் பக்கம் பார்க்க)

## தீக்குளிக்கப் போவதாக பௌத்த தேரர் எச்சரிக்கை

(கொழும்பு)

ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் தனது ஆலோசனைக் குழுவின் அறிக்கையை வாபஸ் பெறாவிட்டால் தான் தீக்குளிக்கப் போவதாக பௌத்த தேரர் ஒருவர் எச்சரித்துள்ளார்.

மாத்தறை போதிருக்கிராராமயவின் விகாராதிபதி வண. எத்ததஸ்ஸி நேற்றுக் காலை நடத்திய ஆர்ப்பாட்டமொன்றையடுத்து இவ்வாறு எச்சரித்துள்ளார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் சுமார் 5ஆயிரம் பேர் பங்குபற்றினர். வண. எத்தஸ்ஸி தேரர் உட்பட பலர் மனுவொன்றில் கையெழுத்திட்டனர். அறிக்கையை பான் கீ மூன் வாபஸ் பெறாவிட்டால்தான் தீக்குளிக்கப்போவதாக வண. எத்தஸ்ஸி தேரர் எச்சரித்தார் என மாத்தறையைச் சேர்ந்த ஆளும் கட்சி அரசியல்வாதியான அருண குணரட்ன தெரிவித்துள்ளார். (ச-5)

...வு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

**Study & Work in UK Canada and India**

Intake Get Register Now Collecting
the Application Until June 30th 2011
Start the academic on September
இறுதிச் சந்தர்ப்பம் IELTS தேவையில்லை
Administration & Documentation



என்பன வெற்றிகரமான முறையில் எங்களால் செய்து தரப்படும்.
ஐரோப்பிய நாடுகளுக்கான விசா பெறுவதற்கான Sponsorship பிரச்சினையா? உடனடியாக ஏற்பாடு செய்து தரப்படும்.
(Free Financial Sponsor for UK Visa) இதுவரை உத்தரவாதப் படுத்திய விசாக்கள் 40க்கு மேல் கிடைத்துள்ளன.
சகல தொடர்புகளுக்கும்: 0729994777



**வர்த்தகப் பெருமக்களே...**

பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை அரசு உத்தரவாதப் படுத்திய நிறுவனங்களாய் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் நம்பிக்கையையும் இலகுவாகப் பதிவு செய்து அடைந்து கொள்ள

தொடர்புகளுக்கு:-0729994777


# கடலுக்குள் பாய்ந்தது தனியார் பஸ்

# பயணிகள் மயிரிழையில் தப்பினர்

## பொன்னாலையில் நேற்று சம்பவம்

(யாழ்ப்பாணம்)

காரைநகரிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த தனியார் பஸ் ஒன்று பயணிகளுடன் பொன்னாலைக் கடலுக்குள் பாய்ந்தது.

எனினும் அனைவரும் தெய்வாதீனமாக தப்பித்துக் கொண்டனர். இச்சம்பவம் நேற்றுக் காலை 7 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

காரைநகரிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி 40இற்கும் மேற்பட்ட பயணிகளுடன் புறப்பட்ட வான் பொன்னாலை பாலத்திற்கு அருகாமையில் இயந்திரக் கோளாறு காரணமாக கட்டுப்பாட்டை இழந்து கடலுக்குள் பாய்ந்தது.

கடலுக்குள் பாய்ந்த பஸ்ஸில் பயணித்தவர்களை அப்பகுதியில் கடமையில் ஈடுபட்டிருந்த கடற்படையினர் காப்பாற்றினர்.

சம்பவ இடத்திற்கு விரைந்த ஊர்காவற்துறைப் பொலிஸார் விபத்து தொடர்பாக மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர்.

திடீரென ஏற்பட்ட இந்த விபத்தில் பஸ்ஸில் பயணித்த 15இற்கு மேற்பட்ட பயணிகளுக்கு சிறுகாயங்கள் ஏற்பட்டன.

இதேவேளை இந்த விபத்தில் காயமடைந்தவர்களில் ஒருவரான காரைநகரைச் சேர்ந்த எஸ்.திவ்விய பாரதி(வயது 18) என்பவர் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை குறித்த பாலத்தை புனரமைத்த பின்பு இடம்பெறும் மூன்றாவது விபத்துச்சம்பவம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

(எ-6,246)

# சர்வதேச குற்றவியல் நீதிமன்றில்

# இலங்கை அரசை முன்னிறுத்த வேண்டும்

## இந்திய அரசுக்கு அழுத்தம்

(புதுடெல்லி)

ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர்கள் குழுவின் அறிக்கையின் அடிப்படையில் ராஜபக்ஷ சகோதரர்களை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் முன்னிறுத்துவதற்கு இந்திய மத்திய அரசு சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என தமிழகத்தில் மனிதவுரிமை ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நாஞ்சில் நாடன் (எழுத்தாளர்), எஸ்.எஸ்.ராஜகோபாலன் (கல்வியியலாளர்), டிராஸ்க்கி மருது (ஓவியக் கலைஞர்), கௌதமன் (திரைப்பட இயக்குநர்), கீற்று நந்தன் (தொழில் நுட்பவியலாளர்), வெப்துனியா அய்யநாதன் (ஊடகவியலாளர்), விசுவநாதன் (தொழில் முனைவர்) மற்றும் கண.குறிஞ்சி (மனித உரிமையாளர்) ஆகியோரைக் கொண்ட ஒருங்கிணைப்புக் குழு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் மனித உரிமைகள் மற்றும் போர்க்குற்றங்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபை நிபுணர் குழுவின் அறிக்கை வெளியாகி இருக்கின்றது.

போரின் இறுதிக்கட்டத்தில் இலங்கை அரசாங்கம் போராளிகள் என இருதரப்பினரதும் மனித உரிமை மீறல்கள் இந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றன. இலங்கை படையினரிடம் வெள்ளைக் கொடியுடன் சரணடைய வந்தவர்கள் உட்பட போராளிகளின் தலைமையைச் சேர்ந்தவர்கள் இலங்கை அரசாங்கத்தினால் முற்றிலுமாகக் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இலங்கை அரசாங்கம் பாரிய மனித உரிமை மீறல்களையும் போர்க் குற்றங்களையும் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களையும் புரிந்திருக்கின்றது என்பதனைத் திட்டவட்டமாக ஐக்கிய நாடுகள் சபை நிபுணர் குழுவின் அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

இலங்கை ஜனாதிபதியும் பாதுகாப்பு அமைச்சருமான மகிந்த ராஜபக்ஷ, பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருக்கின்ற போதிலும் இவ்வமைச்சுக்குரிய சகல அதிகாரங்களைக் கொண்டிருக்கின்ற மகிந்தவின் சகோதரருமான கோத்தபாஜ ராஜபக்ஷ ஆகியோர் நேரடியாகவே இந்தக் குற்றங்களில் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்பதனை நிபுணர் குழுவின் அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

இந்தக் குற்றங்கள் விசாரணை செய்யப்படும் எனில் சர்வதேசியக் குற்றவியல் நீதிமன்றத்தின் முன்பாக ராஜபக்ஷ சகோதரர்கள் நிறுத்தப்படுவார்கள் என அதில் கூறப்பட்டுள்ளது. (எ-1)


# மணிவிழா நாயகன் குகதாசன் அவர்களை மனமுவந்து பாராட்டும் லாலா சோப் உரிமையாளர்



குகதாசன் அவர்கள் பண்பான அடக்கமான குணமுடையவர். பேச்சிலும் சிரிப்பிலும் மக்களின் மனதில் அசைக்கமுடியாத இடம் பிடித்தவர். இவர் தொடர்ந்தும் மாணவர்களுக்கு நல்லதையே செய்ய வேண்டுமென ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றேன்.

லாலா சோப் உரிமையாளர்,
அச்சுவேலி.

(சு-3097)



# ENGLISH LANGUAGE DEVELOPMENT PROGRAMME

St. John's College · Jaffna · Ceylon

- A three-month English course for School leavers /Job seekers.
- The Course content comprises the four skills -Listening, Speaking, Reading & Writing.
- Evaluation & Award of certificate at the end of the programme.
- Free Handouts.

Commencement 4th May 2011

Lessons on Weekdays from 3.30-5.45 p.m.

Application Forms could be obtained at the College office.

*English Language Teaching Unit*
*St. John's College, Jaffna.*

(C-3082)



# சித்தா மருத்துவம்

வாதம், பாரிசவாதம், அழல்வாதம், நீரிழிவு, சிறுநீரக அழற்சி, சூதகவலி, பாலியல் குறைபாடு, வெள்ளைபடுதல், அதி இரத்த அமுக்கம், நெஞ்சுக் குத்து, நரம்புத்தளர்ச்சி, உடற்பருமன், மெலிவு, சோரியாசிஸ், கிரந்தி, கரப்பன், கணை குளோகோமா, இளநரை, வொடுகு போன்ற நோய்களுக்கு பேரறிஞர் Dr.K.பாலசுப்பிரமணியம் சிறப்பு ஆலோசகர் அவர்களை 2ஆம், 3ஆம், 4ஆம், 5ஆம் திகதிகளில் சுன்னாகத்தில் சந்திக்கலாம்.

தொலைபேசித் தொடர்புக்கு
0777047391,0757390195,
0771005971

Dr.K.சிவானந்தன்
ஆனந்த வைத்திய நிலையம்
ஸ்ரேசன் றோட், சுன்னாகம்.

(4824)



## பராமரிப்பாளர் தேவை

வயோதிப தாயாரை (வயது 80) வீட்டிலிருந்து பராமரிப்பதற்கு நடுத்தர வயதுடைய பெண் ஒருவர் தேவை. தகுந்த ஊதியம் வழங்கப்படும்.

தொடர்பு: 0779071325

(சு-3105)



## உடன் தேவை

ஸ்கிறீன் பிறின்டிங் சுயமாகச் செய்யக் கூடிய ஆண்/பெண் தேவை.

தகுந்த ஊதியம் வழங்கப்படும்.

தொடர்பு:
0773706506, 0779985968

(இ)



## காணி விற்பனைக்கு

யாழ்.பலாலி வீதியில் திருநெல்வேலி விவசாயப் பாடசாலைக்கு அண்மையில் 10 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

பிரித்தும் கொடுக்கப்படும்.

தொடர்பு:
0777639312, 0213211503

(4821)


# மரண அறிவித்தல்

## இராசேந்திரம் செல்லம்மா

பூநகரி நல்லூரரை பிறப்பிடமாகவும் அல்லாரை வடக்கு மீசாலையை வசிப்பிடமாகவும் கொண்ட இராசேந்திரம் செல்லம்மா அவர்கள் நேற்று (30.04.2011) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா-வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகளும் காலம் சென்றவர்களான சுப்பிரமணியம்-காமாட்சி தம்பதியினரின் மருமகளும் இராசேந்திரம் (பிரபல வர்த்தகர்) அவர்களின் பாசமிகு மனைவியும், சிவயோகம், பாலசுப்பிரமணியம், இந்திராணி, பரமேஸ்வரி, இராசலிங்கம், நாகேஸ்வரி, துரைராஜா ஆகியோரின் பாசமிகு உடன்பிறப்பும், வினோதினி, விஜிதரன், பிருந்தா (யாழ்.பல்கலைக் கழகம்-விஞ்ஞான பீடம்), பிரதீபன் (வியாபாரம்), தர்சிகன் (சாவகச்சேரி இந்துக்கல்லூரி), குலராஜ் (மாணவன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பாலதீபனின் அன்பு மாமியாரும், அன்பரசனின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.05.2011) ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொற்பிலவு இந்து மயானத்தில் 10மணியளவில் தகனம் செய்யப் படவுள்ளது.

இத்தகவலை உற்றார், உறவினர் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்
சு.இராசேந்திரம் (கணவர்)

பிரிந்தா ஸ்ரோர்ஸ்
அல்லாரை

(சி-3107)

# துயர் பகிர்கின்றோம்

## அமரர் அம்பலவாணர் புவனேஸ்வரி



எமது உயர்வுக்கு வழிகாட்டிய எமது பெருமதிப்பிற்குரிய ஆசான் திரு.க.அம்பலவாணர் அவர்களின் பாசமிகு துணைவியார் **அமரர் அம்பலவாணர் புவனேஸ்வரி** அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு ஆறாத் துயரில் மூழ்கியுள்ளோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும். குடும்ப உறுப்பினர்களுக்கும் உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

திரு.வே.பாலசுப்பிரமணியம் - அச்சுவேலி
திரு. சு.கணபதிப்பிள்ளை - உடுவில்
திரு. சி.கந்தசாமி - மானிப்பாய்
திரு. கா.வல்லிபுரநாதன் - நெல்லியடி

(4825)

# அல்சர்... அவஸ்தை!

ஆண்,பெண் என வித்தியாசமின்றி அனைவரையும் தாக்கும் நோய்களில் ஒன்று அல்சர். இதனால் அடிக்கடி வயிற்றுவலியும், சாப்பிடமுடியாத பிரச்சினைகளும் நம்மை அவஸ்தைக்கு உள்ளாக்கிவிடும்.

இரப்பையும், சிறுகுடலும் சேர்ந்த செரிமான பகுதியின் உட்புறத்தில், மேற்பகுதியில் ஏற்படும் புண் அல்லது காயத்தை குடல்புண் என்கிறோம்.

செரிமானப் பகுதிகள் எப்போதும் ஈரமாகவும்,மூடப்படாமலும் இருக்கின்றன. இதனால் இரப்பையில் செரிமானத்துக்குத் தேவைப்படும் ஹைட்ரோ குளோரிக் அமிலத்தால் பாதிப்புக்கு உள்ளாகின்றன. குடல்புண் வந்துள்ள சிலருக்கு இந்த அமிலம் அதிகமாக சுரப்பதும் உண்டு. இதை அமிலகுடல்புண் என அழைக்கிறோம்.

குடல்புண் தோன்றுவதற்குரிய காரணங்கள் இதுவரை தெளிவாக அறியப்படவில்லை. இருப்பினும் புகைபிடித்தல், புகையிலையைச் சுவைத்தல், மது அருந்துதல் மற்றும் சில மருந்துகள் குடல்புண் வருவதற்கு வழி வகுக்கின்றன.

சாலிசிலேட் மருந்துகள், அஸ்பிரின் முதலான வலி நிவாரண மருந்துகள், காயங்கள் மற்றும் மூட்டு வலிகளுக்காகச் சாப்பிடும் மருந்துகள்,வீக்கத்தைக் குறைக்கச் சாப்பிடும் மருந்துகள் போன்ற மருந்துகளின் காரணமாகவும் குடல்புண் வருகிறது. செரிமானப் பகுதியில் எங்கு புண் ஏற்பட்டுள்ளது என்பதைப் பொருத்து குடல் புண்ணை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். அவையாவன,

- வாய்க்கோளாறால் ஏற்படும் குடல் புண்
- சிறுகுடலில் ஏற்படும் குடல்புண்

காரணமின்றி பற்களைக் கடித்தல், எரிச்சலோடு கூடிய கடுமையான வலி, மார்பு எலும்புக் கூட்டுக்கு கீழே வயிற்றுப் பகுதியில் எதுவுமே இல்லாதது போல் தோன்றுதல், நெஞ்செரிச்சல் ஆகியவை குடல்குபுண் இருப்பதற்கான அறிகுறிகள்.

இவற்றுக்குரிய சிகிச்சை அளிக்காவிட்டால் இரத்தக் கசிவும், சில நேரத்தில் இரத்தப் போக்கும் ஏற்படும். இரத்தக் கசிவு காரணமாக கருஞ்சிவப்பு நிறத் தில் இரத்தவாந்தி வரும். வலி நிவாரணியான அஸ்பிரின் போன்றவற்றை சாப்பிட்டால் மிகமோசமான இரத்தப் போக்கு ஏற்படும். இது மிகவும் அபாயகரமானது. இதனால் குடலில் துவாரம் விழலாம். ஆதலால் , அல்சர் இருந்தால் உடனே மருத்துவரை அணுகி சிகிச்சை பெறுவது நல்லது.




OgilvyAction

வாருங்கள்! இக்கௌரவத்தை அணிந்துக்கொள்ளுங்கள்

இலங்கையின் முதற்தர தொலைத்தொடர்பு சேவை வழங்குனர்
35 வயதிற்கு உட்பட்ட விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் துறையில் தேர்ச்சிப்பெற்ற தொழில் தகைமையுடைய பொருத்தமானவர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

பிராந்திய முகாமையாளர் - வட மாகாணம்

எமக்கு பொருத்தமானவர்களின் விபரங்களை விரிவுப்படுத்தாது, இத்துறையைக் குறிக்கோளாக கொண்டவரையே எதிர்ப்பார்க்கிறோம்.

பொருத்தமானவர் என்பதை நீங்கள் உறுதிசெய்பவராயின்,
அதுபற்றிய விபரங்களை எமக்கு எழுதி அனுப்பி வையுங்கள்.

உங்களைப்பற்றி உங்களைவிட வேறு யார் நன்கு அறிவார்.

உங்கள் விண்ணப்பங்களை gcmo@dialog.lk என்ற e-mail முகவரிக்கு அனுப்பவும்.
தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் மட்டுமே நியமனத்திற்கு அழைக்கப்படுவர்.

Dialog

www. mideamart.com

Midea Electro Mart

Authorized Dealer for Abans Ltd.

உலகத் தரம் வாய்ந்த
வீட்டு பாவனை
மின் உபகரணங்களை
Abans
நிறுவனத்தின்
உத்தரவாதத்துடன்
இலவச விநியோகத்தையும்
பெற்றிடலாம்.




No:1-1, 1-H, STANLEY ROAD, JAFFNA.
TEL: 021 222 4566, FAX: 021 222 1646
E-mail: midea21@gmail.com

லங்கா LANKA
Hyrax
CEYPETCO
Lubricants

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் அங்கீகரிக்கப்பட்ட உராய்வு நீக்கி எண்ணை வகைகள் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மாத்திரமே பெற்றுக்கொள்ள முடியும்.



இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
யாழ் ஏக விநியோகஸ்தர்
எஸ்.பி.என். மோட்டோர்ஸ்
48/1, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

# உழைக்கும் வர்க்கத்தின் உரிமைக்காக தமிழ் மக்கள் போராட வேண்டும்!

## மாவை எம்.பி. அழைப்பு



(யாழ்ப்பாணம்)

இன அடையாளத்தையே நிலைநாட்டப் போராடவேண்டிய நிலையில் தொழிலாளர், விவசாயிகள் உழைக்கும் வர்க்கத்தின் உரிமைகளுக்காகவும் போராடவேண்டிய கடப்பாடுடைய தமிழ் மக்களும் எழுச்சி பெற்றே ஆகவேண்டும். உழைப்பே இல்லாத அகதி வாழ்க்கையில் வீழ்ந்து கிடக்கும் பல இலட்சக்கணக்கான மக்களும் எழுந்து வாழ்வுரிமைக்காகவே போராடவேண்டியுள்ளனர். இன்றைய மே நாளில் ஒட்டுமொத்தமாக தொழிலாளர், விவசாயிகள் உழைக்கும் வர்க்கத்தின் உரிமைகளையும் அதற்கும் மேலாக மனித உரிமை வாழ்வுரிமைக்காகவும் தமிழ் இன அடையாளத்தையும் பாதுகாக்கவும் நாம் உழைக்கவேண்டும் என அழைப்பு விடுகின்றோம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா தெரிவித்தார். மே தினத்தை முன்னிட்டு அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பிலேயே இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இன்று தரணி முழுவதிலும் மே தினக் கொண்டாட்டங்கள் இடம்பெறும் நாளாகும். அமெரிக்க நாட்டில் தொழிற்சாலைகளில் நாளும் பொழுதும் உழைத்த மக்கள் எட்டு மணிநேரம் வேலைகேட்டுப் போராடி வெற்றி பெற்ற நாளாக இந்த நாள் கொண்டாப்படுகிறது.

உலக நாடுகளில் முதலாளித்துவம் செல்வாக்கும், ஆதிக்கமும், ஆட்சியும் கொண்டிருந்த காலத்தில் தொழில் புரட்சியும் ஏற்பட்டதிலிருந்து உழைக்கும் வர்க்கம் தொழிலாளர் உரிமைக்காகப் போராடவேண்டியிருந்தது. குறிப்பாக இரண்டாவது உலக மகாயுத்தத்தின் பின் முதலாளித்துவ ஆட்சிகளுக்கெதிராகப் பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகளினால் ஆட்சி பீடங்களே மாற்றியமைக்கப்பட்டன. தொழிலாளர்கள், விவசாயிகள் உரிமைகள் அனைத்து நாடுகளிலும் சட்டபூர்வமாகவும் ஏற்கப்பட்டன. ஐ.நா. மன்றத்தினாலும் தொழிலாளர் உரிமைச் சாசனங்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்தன.

நவீன பொருளாதாரக் கட்டமைப்பில் அரசியற் கட்சிகளும் ஆட்சிக்கு வந்தபின்னர், தொழிலாளர் உரிமைச் சாசனங்களும், ஆளும் கட்சிகளின் நலன்களுக்காகப் பயன்படுத்திவருவது மட்டுமல்ல; தொழிற்சங்களும் ஆளும் கட்சிகளுக்கு துதிபாடவும் அல்லது அடக்குமுறைக்கு உள்ளாக்கப்படுவதும் ஆன சூழ்நிலைகள் வளர்ந்து விட்டமையையும் பார்க்கலாம். தொழிற் துறைகளும் பெருமளவில் தனியார் மயப்படுத்தப்பட்டு வருவதாலும் தொழிலாளர் உரிமைப் போராட்டங்களும் பலமிழந்து வருகின்றன.

இந்த நிலைமைகளை இலங்கையில் நன்றாகவே அனுபவத்திலும் அறிந்துகொள்ளலாம். பேரினவாதக் கொள்கையுடன் இலங்கையில் இன ரீதியாகவே தொழிலாளர் வர்க்கம் பிளவு படுத்தப்பட்டு, தமிழ் மக்களும் உழைக்கும் வர்க்கமும் ஒடுக்கு முறைக்கு அரசியலமைப்பு மூலமாகவே ஆளாக்கப்பட்டு, தமிழ் இன அடையாளத்தையே இழந்து நிற்கும் நிலை மட்டுமல்ல, அரசியல் அடிப்படை உரிமைகளை இழந்து மனித உரிமைகளை இழந்து, வாழும் உரிமை கூட இல்லாத, அந்த உரிமைக்குப் போராடுவதற்கே உரிமையற்ற அடக்குமுறைக்கும் இன ஒடுக்குமுறைக்கும் உள்ளான ஒரு நிலையே தமிழ்த் தேசிய மக்களுக்கு இன்று இலங்கையில் ஏற்பட்டுள்ளது.

மனித குலத்தின் மனித உரிமை, வாழும் உரிமை, அடிப்படை அரசியல் உரிமை ஐ.நா. மன்றத்தின் அடிப்படை சாசனமாக இருக்கும் போது அந்த உரிமைகளை நிலைநாட்டுவதற்கு இலங்கையில் நாம் போராடவேண்டியுள்ளோம். (எ)

## தேர் திருவிழா

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி சிவன்கோவில் வருடாந்த மகோற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி திருவிழா நடைபெற்று வருகின்றது.

இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு தேர்த்திருவிழாவும் நாளை திங்கட்கிழமை காலை 8.00 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் இடம்பெற்று பூங்காவனத் திருவிழா எதிர்வரும் 3ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு 7.00 மணிக்கு நடைபெறவுள்ளது. (ஸ்ரீ-2)

## மைதானம் திறப்புவிழா

நவாலி சென். பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகத்திற்கான புதிய விளையாட்டு மைதானத் திறப்புவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நவாலி கல்லுண்டாயில் சென் ஜோன்ஸ் கல்லூரி ஆசிரியர் ஞா.க. அன்றூட் கிறேசியன் தலைமையில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக நவாலி பங்குத்தந்தை அருட்திரு ஜெ.சோதிநாதனும் சிறப்புவிருந்தினர்களாக வலிகாமம் உதைபந்தாட்ட லீக் தலைவர் நா.நவரத்தினராசா, யாழ்ப்பாணம் உதைபந்தாட்ட லீக் தலைவர் எஸ்.அன்ரனிப்பிள்ளை, நல்லூர் பிரதேச சபை செயலாளர் றே.மே.சாந்தசீலன், நவாலி கிழக்கு கிராம அலுவலர் ரி.நித்தியானந்தம் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளார்கள். (எ-5)

## கட்டடப் பொறியியலாளர் விண்ணப்பம் கோரல்

NEHRP, திட்டத்திற்கு B.S.Enginee[r] (Civil) தகைமையுடைய பொறியியலாள[ர்]கள் தேவைப்படுகிறார்கள். எனவே இத் தகைமையுடையவர்கள் உரிய அத்தாட்சிப் பத்திரங்களுடன் எதிர்வரும் 5ஆம் திகதி காலை 9.00 மணியளவில் NEHRP, இலக்கம் 156, A-9 வீதி, பரந்தன் என்ற முகவரிக்கு நேர்முகப் பரீட்சைக்காக சமுகமளிக்குமாறு NEHRP திட்டப்பணிப்பாளர் கேட்டுக்கொள்கிறார். (எ)

## மரண அறிவித்தல்

### நடராஜா பார்த்தீபன் (பார்த்தி)




உடுப்பிட்டி, இமையாணன் மேற்கைப் பிறப்பிடமாகவும் இந்தியாவை (திருச்சி) வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா பார்த்தீபன் கடந்த 28.04.2011 வியாழக்கிழமை திருச்சியில் அகாலமரணமானார்.

அன்னார் நடராஜா-கிருஷ்ணவேணி தம்பதிகளின் அன்பு மகனும் மதிவண்ணன் (மதி- ஜேர்மனி), ராகவன் (ரகு) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (01.05.2011) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரின் இல்லத்தில் (திருச்சி) நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.

தகவல்:
குடும்பத்தினர்.

தொடர்புக்கு:
ஜேர்மனி- 00491764532179, இலங்கை- 0778733727 (சி-3106)

## தமிழ் அரசியல் கைதியின் உண்ணாவிரதம் தொடர்கிறது

(கொழும்பு)

புதிய மகசின் சிறைச்சாலையில் தனது விடுதலையை வலியுறுத்தி உண்ணாவிரதம் இருந்துவரும் அன்ரனி மரியதாஸ் அஞ்சலோ நேற்று ஆறாவது நாளாகவும் தனது உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டார்.

உடல்நிலை தளர்வடைந்த நிலையிலும் எதுவித ஆகாரமும் இன்றி தனது போராட்டத்தில் உறுதியாக இருப்பதாகவும், நீதியமைச்சு அல்லது சட்டமா அதிபர் தன்னை நேரில் வந்து சந்தித்து தனது விடுதலை தொடர்பான கோரிக்கையை ஆராயவேண்டும் என தான் விரும்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவரது உண்ணாவிரதப் போராட்டத்தை பலாத்காரமாக முடிவுக்குக் கொண்டுவர நேற்று முன்தினம் சிறைச்சாலை அதிகாரிகள் முயற்சித்த போதிலும் கைதிகளின் எதிர்ப்பை அடுத்து அது கைவிடப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது.

2009ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 23ஆம் திகதி பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு எவ்வித குற்றமும் சுமத்தப்படாமல் புதிய மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இவரை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி இவரின் தாயார், நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீமுக்கு கடிதம் அனுப்பியுள்ளார். (ச-5)



அமைச்சர் மேர்வின் சில்வா துட்டகைமுனு மன்னரின் பாத்திரத்துக்கு உயிரூட்டத் தொடங்கியுள்ளார். எல்லாளன் என்னும் தமிழ் மன்னனை வென்று இலங்கையை ஒரு குடையின்கீழ் ஆண்ட துட்டகைமுனு மன்னனின் கதையை மையமாக வைத்து சுரங்கனா லொவின் என்ற சிங்களத் திரைப்படம் தயாரிக்கப்பட்டு வருகிறது. அதில் துட்டகைமுனு மன்னனின் வேடத்தில் அமைச்சர் மேர்வின் சில்வா நடிக்கிறார். சிகிரியாவின் காட்டுப் பிரதேசத்தில் பிரஸ்தாப சுரங்கனா லொவின் திரைப்படத்திற்கான ஒளிப்பதிவு வேலைகள் நேற்று ஆரம்பமாகியுள்ளன. எல்லாள மன்னனுடன் சண்டையிடுவதற்காக துட்கைமுனு மன்னன் யானை மீதேறி இராட்சதர்கள் புடைசூழ யுத்தகளத்திற்கு செல்லும் காட்சி நேற்று ஆரம்ப காட்சியாக படமாக்கப்பட்டுள்ளது.

# விமானங்களை கடத்தி ஆசியாவில் தாக்குதல் நடத்த ஒசாமா திட்டம்

## விக்கிலீக்ஸ் தகவல் வெளியீடு

அமெரிக்க விமானங்களை கடத்தி சென்று ஆசியாவில் தாக்குதல் நடத்த ஒசாமா பில்லேடன் திட்டமிட்டிருந்ததாக விக்கிலீக்ஸ் பரபரப்புத் தகவலை வெளியிட்டுள்ளது.

கடந்த 2001-ஆம் ஆண்டு அமெரிக்காவில் இரட்டை கோபுரங்கள் மற்றும் இராணுவ தலைமையகம் மீது விமானங்களால் மோதி பின்லேடனின் அல்கொய்தா தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர்.

இதை தொடர்ந்து அமெரிக்கா தேடத் தொடங்கியது. அதன்பின் ஆப்கான்-பாகிஸ்தான் எல்லையில் ஏமனை சேர்ந்த அப்தால் மாலிக்,அப்தால்வகாகப் உள்ளிட்ட 31அல்கொய்தா தீவிரவாதிகள் பாகிஸ்தான் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடம் நடத்திய விசாரணையில் அங்குள்ள தோரா போரா மலைப்பகுதியில் பின்லேடன் பதுங்கிருப்பது தெரியவந்தது.

இதை தொடர்ந்து அங்கு அமெரிக்க இராணுவம் குண்டு வீசி தாக்குதல் நடத்தியது.

பாகிஸ்தான் இராணுவத்திடம் பிடிபட்ட அப்தால் மாலிக் உள்ளிட்ட 31 பேரும் அமெரிக்க உளவுத் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டனர். அவர்களிடம் நடத்திய விசாரணையின் போது தென்கிழக்கு ஆசிய நாடுகளில் தாக்குதல் நடத்த திட்டமிட்டிருந்து தெரியவந்தது.

அதாவது அமெரிக்க பயணிகள் விமானத்தை கடத்தி தென்கிழக்கு ஆசிய நாடுகளில் இருக்கும் அமெரிக்க இராணுவ முகாம்களின் மீது மோதச்செய்து அழிவை ஏற்படுத்த சதித் திட்டம் தீட்டியிருந்தான்.

இவர்கள் கொடுத்த தகவலின் பேரில் பின்லேடனின் அந்த திட்டம் முறியடிக்கப்பட்டது. இந்த தகவல்கள் விக்கிலீக்ஸ் இணையத்தளம் வெளியிட்ட அமெரிக்க தூதரகங்களின் இரகசிய ஆவணங்கள் மூலம் தெரியவந்துள்ளது. (2)

# அமெரிக்காவின் குவான்டனாமோ சிறையில் பயங்கரவாதிகளுடன் அப்பாவிகளும் சிறைவைப்பு

## விக்கிலீக்ஸ் அதிர்ச்சித் தகவல்

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் புகழ்பெற்ற குவான்டனாமோ சிறைச்சாலையில் பயங்கவாதிகளோடு அப்பாவிகளும் பல ஆண்டுகளாக சிறை வைக்கப்பட்டுள்ளது உள்ளிட்ட பல்வேறு அதிர்ச்சித் தகவல்களை விக்கிலீக்ஸ் வெளியிட்டுள்ள 700 இரகசிய ஆவணங்கள் தெரிவிக்கின்றன.

கியூபா நாட்டின் தென்பகுதியில் அமைந்துள்ள குவான்டனாமோ சிறைச்சாலையில் உள்ள உலகின் முக்கிய குற்றவாளிகள் பலரை அமெரிக்கா அடைத்து வைத்துள்ளது. அவர்கள் பற்றிய தகவல்களை விக்கிலீக்ஸ் இணையத்தளம் வெளியிட்டது. மேலும் தி கார்டியன் , தி நியூயோர்க் டைம்ஸ் உள்ளிட்ட சில பத்திரிகைகளும் 700 இரகசிய ஆவணங்களை வெளியிட்டன.

அத்தகவலின்படி தற்போது அச்சிறையில் 172 பேர் வைக்கப்பட்டுள்ளனர். 2002- 2009 காலகட்டத்தில் இங்கு சிறை வைக்கப்பட்டிருந்த 780 பேரில் 20 பேர் மிக மோசமான பயங்கரவாதிகள். 150 பேர் அப்பாவி ஆப்கான் மற்றும் பாகிஸ்தானியர்கள். இவர்கள் தவறான அடையாளம் அல்லது தவறான இடத்தில் தவறான நேரத்தில் இருந்ததற்காக பிடிபட்டவர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

மேலும் இரட்டைக் கோபுரத் தகர்ப்பு குறித்த விசாரணையின் போது பிடிபட்டவர்கள் பல ஆண்டுகளாக குவான்டனாமோ சிறையில் வைக்கப்பட்டுள்ளனர். ஆனால் கைதிகளிடம் உண்மையை வரவழைக்க எந்தவிதமான விசாரணைகள் நடத்தப்பட்டன என்பது பற்றி இந்த ஆவணங்கள் மௌனம் சாதிக்கின்றன.

அதேநேரம் பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ., ஈரானின் உளவுத்துறை, எகிப்தின் முஸ்லிம் சகோதரத்துவக் கட்சியையும் அமெரிக்க அதிகாரிகள் சேர்த்திருந்ததாக விக்கிலீக்ஸ் ஆவணங்கள் தெரிவிக்கின்றன. (ஸ்ரீ-2)

# கடாபியின் ஆட்சி முடியவேண்டும்

## பழங்குடியினர் அதிக ஆவல்

லிபியாவில் 61 பழங்குடியினத் தலைவர்களும் இணைந்து கடாபியின் ஆட்சி உடனடியாக முடிவுக்கு கொண்டு வரப்படவேண்டும் என அறிவித்துள்ளனர். லிபியாவில் கடாபி மற்றும் நேட்டோ ஆதரவுள்ள எதிர்தரப்புக்கு இடையிலான போர் ஒரு முடிவுக்கு வராமல் இழுத்தடித்துக்கொண்டே இருக்கிறது. இதனால் அந்நாட்டின் அப்பாவி மக்கள் எந்நேரமும் உயிருக்குப் போராடிக்கொண்டிருக்கின்றனர்.

இந்நிலையில் லிபியா முழுவதிலுமான 61 பழங்குடியினத் தலைவர்களும் பிரான்ஸ் எழுத்தாளர் பெர்னார்ட் ஹென்றி லெவியும் இணைந்து வெளியிட்ட கூட்டறிக்கையில் ஆபத்துக்கள், சவால்கள், சர்வாதிகார ஆட்சி என இத்தனை பிரச்சினைகளுக்கு மத்தியிலும் நாங்கள் ஒன்றுபட்டு நிற்கிறோம். சுதந்திர ஜனநாயக லிபியாவையே நாங்களும் விரும்புகின்றோம். கடாபியின் ஆட்சி உடனடியாக முடிக்கப்பட வேண்டும் என தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையில் மிஸ்ரட்டா நகரின் மையப் பகுதியில் முகாமிட்டிருந்த கடாபிப் படைகள்மீது நேட்டோ படைகள் நடத்திய தாக்குதலில் 37 போர் வாகனங்கள் சேதமடைந்தன. இதனால் கடாபிப் படைகள் நகரின் மையப் பகுதியை விட்டு வெளியேறிவிட்டதாக எதிர்த்தரப்பு கூறியுள்ளது. (ஸ்ரீ-2)

# சிரியா கலவரத்தில் 48 பேர் சுட்டுக்கொலை

சிரியாவில் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் பாதுகாப்புப் படையினருக்குமிடையே நடந்த கலவரத்தில் 48 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். சிரியாவில் ஜனாதிபதி பஷீர் ஆசாத் பதவி விலகக் கோரி பொதுமக்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில் சிரியாவின் ரஸ்தான், ஹோம்ஸ் ஆகிய நகரங்களில் நேற்று முன்தினம் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் ஜனாதிபதியை பதவி விலகக் கோரி கோஷம் எழுப்பியவாறு சென்றனர்.

இதனால் பாதுகாப்புப் படையினரிடையே நடந்த கலவரத்தில் 48 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். 13 பேர் காயமடைந்தனர். கடந்த மார்ச் மாதம் முதல் நாடு முழுவதும் தொடங்கிய இந்த மக்கள் கிளர்ச்சியினால் இதுவரை 450க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதாக மனித உரிமை அமைப்பு ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது. (2)


நெஞ்சை விட்டகலா

3 ஆம் ஆண்டு நினைவலைகள்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 27.04.1947 | 30.04.2008 |

அமரர் தேவகி துரைராஜா

(ஓய்வுபெற்ற தொலைக்கல்வி போதனாசிரியையும்
யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அதிபரும்)



நீண்டகாலம் நோய் நொடியில்லாமல் வாழ்வாய்
என எண்ணிய எமக்கு சில மணிநேரத்தில்
சென்று வருகிறேன் என்றாய் அம்மா தாயே
பாசத்தால் கட்டுண்ட நாம் கலங்குகின்றோம்
ஆண்டுகள் மூன்றுதான் சென்றாலும் அருகிருக்கிறாய்
தேவா தேவா எனப்பலரும் கூப்பிடுவது கேட்குதம்மா
நீ அணைத்து அணைத்து வளர்த்தாயே அம்மா
எத்தனை பேர் உன்னை மறந்தாலும்
உன் நாமம், உன் பண்பு, உன் உபசரணை,
அறிவூட்டிய திறமை, அரவணைத்து ஆறுதல்
சொல்ல எத்தனை ஆயிரம் பேர் அம்மா,
தாங்கள் வாழ்ந்த காலம் எம்மை
அடிமைப்படுத்திய காலம் அம்மா, நினைக்கின்றோம்
உன் நாமம் நிலைக்குமம்மா சாந்தி! சாந்தி!

புறாடி லேன் (முன் ஒழுங்கை),
அரியாலை, யாழ்ப்பாணம்

கணவர்

(4643)

# மிதிவெடிகளை அகற்றும் பணியாளர் வேலைத்திட்டத்திற்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் மிதி வெடிகளை அகற்றும் பணிகளில் ஈடுபடுத்த ஏற்கனவே மிதி வெடிகளை அகற்றும் பணிகளில் ஈடுபட்டிருந்தவர்களையும் புதியவர்களையும் இணைத்துக் கொள்ளும் வேலைத்திட்டமொன்றை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா மகேஸ்வரி நிதியத்தினூடாக முன்னெடுத்துள்ளார்.

யாழ். குடாநாட்டில் இன்னமும் மீளக் குடியமர்த்தப்படாதிருக்கும் இடம் பெயர்ந்த நிலையிலுள்ள மக்களை துரிதகதியில் மீளக் குடியமர்த்துவதற்கும் விளைநிலங்கள் மற்றும் காணிகளில் இன்னமும் அகற்றப்படாதிருக்கும் மதி வெடிகளை விரைவில் அகற்றி இக்காணிகளை உரியவர்களிடம் ஒப்படைக்கும் நோக்கிலும் அமைச்சர் இந்நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

தற்போது சில தொண்டு நிறுவனங்களும் இராணுவத்தினரும் மிதிவெடிகளை அகற்றும் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்ற போதிலும் அவை போதுமானதாக இல்லாத காரணத்தினால் மக்களது மீள்குடியேற்றங்களில் தொடர்ந்து தாமதநிலை காணப்படுவதை அவதானத்தில் கொண்டதன் பிரகாரமே அமைச்சர் மிதிவெடிகளை அகற்றும் பணியில் ஈடுபடுத்தவென மேலும் பணியாளர்களை இணைத்துக் கொள்வதற்கு முன் வ[illegible]துள்ளார்.

இதன் பிரகாரம் மேற்படி பணியில் இணைந்து கொள்ள விரும்புபவர்கள் எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்பதாக மிதிவெடிகளை அகற்றும் பணி, மகேஸ்வரி நிதியம், இல.110, 4 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் எனும்முகவரிக்கு தங்களது விண்ணப்பங்களை அனுப்பி வைக்கவும். (2)

# சுற்றுலாத்துறை விடுதி முகாமைத்துவ துறைக்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் சுற்றுலாத்துறையும் விடுதிமுகாமைத்துவமும் உயர்கல்விச் சான்றிதல் கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அதிக வேலைவாய்ப்பையும் வருமானத்தையும் ஈட்டித்தரக்கூடிய இவ்வழிவரு கற்கைநெறிக்கான விண்ணப்பப் படிவங்களை இம்மாதம் 31ஆம் திகதி வரை பிறவுண்வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாம் என இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

அத்துடன் இலங்கை திறந்த பல்கலைக் கழக மானுடவியல் சமூக விஞ்ஞான பீடத்தின் மட்டம் 2 கற்கை நெறிகளில் ஒன்றையேனும் பூர்த்தி செய்தவர்கள் அல்லது க.பொ.த(சா/த) இல் ஆங்கிலம், கணிதம் உட்பட ஆறு பாடச்சித்தியுடன் பொருத்தமான இருவருட வேலை அனுபவம் உள்ளவர்களும் இக்கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க தகுதியுடையோரென அவர் தெரிவித்துள்ளார். (2)

# கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

''பார்லீட் மலோரி ஸ்ரோக் புறோகேஸ் (பிறைவேட்) லிமிட்டெட்'' மற்றும் ''யூரோவில் இன்வெஸ்மன்ட்(பிறைவேட்) லிமிட்டெட்'' அனுசரணையுடன்''எக்ஸ்போ லங்கா பொது பங்கு வழங்கலும் பங்குச் சந்தையின் முதலீடு தொடர்பான நடைமுறைப் போக்கும்'' பற்றிய கருத்தரங்கு நாளை திங்கட்கிழமை மாலை 4 மணி தொடக்கம் 5.30 மணிவரை யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் யூரோவில் நிறைவேற்று பணிப்பாளர் ம.இராமதாசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் இளைப்பாறிய யாழ். மாநாகரசபை ஆணையாளரும் பட்டம்பெற்ற கம்பனி செயலாளருமாகிய சி.வி.கே.சிவஞானம், யாழ்.உயர் தொழில்நுட்ப கல்லூரியின் விரிவுரையாளர் சி.சிறிசேதுபரன், பார்லீட் மலோரி ஸ்ரோக் புறோகேஸ் (பிறைவேட்) ஆசிரியர் நி.சரவணபவன், லிமிட்டெட் ஆலோசகர் வி.நிரஞ்சன் ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொண்டு கருத்துரை வழங்கவுள்ளனர். (2-3)

# கணனி கற்கை நெறிக்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

உயர்கல்வி அமைச்சின் தேசிய வழிவரு தொலைக்கல்விச் சேவையினால் நடத்தப்படும் கணனிக்கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பப் படிவங்களை மேமாதம் 22 ஆம் திகதி வரை பிறவுண்வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்.பிராந்திய நிலையத்தில் இயங்கும் தேசிய வழிவரு தொலைக்கல்விச் சேவை மத்திய நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாம் என யாழ்.பிராந்திய நிலைய இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (2)

# இராசி பலன்

01.05.2011
சித்திரை 18 ,ஞாயிற்றுக்கிழமை
சூரிய உதயம் காலை 5.57 மணிக்கு
திரயோதசி முற்பகல் 9.37 மணிவரை
ரேவதி பின்னிரவு 12.37 மணிவரை
இராகுகாலம் 4.27-5.57 மணிவரை
சுபநேரம் 8.57-10.27 மணிவரை
தொழிலாளர் தினம்

**மேடம்** வெளியூர்த் தொடர்புகள் விரிவடையும், காரிய அலைச்சல் உண்டு, சுப செலவுகள் செய்து மகிழ்வீர்கள், அமைதிக் குறைவுண்டு.

**இடபம்** மனதிற்கினிய தகவல்கள் வந்து சேரலாம், உற்றார், உறவினர்களின் வருகையுண்டு, பணப்புழக்கம் அதிகரிக்கும், விருந்துபசாரத்தில் கலந்து மகிழ்வீர்கள்.

**மிதுனம்** உற்சாகமான நாள், நண்பர்களின் மூலம் உதவிகள் கிடைக்கலாம், தூரதேச செய்திகள் வந்து சேரலாம், தெய்வ சிந்தனை மேலோங்கும்.

**கடகம்** புதிய திருப்பங்கள் ஏற்படலாம், திடீர் பயணங்களால் அனுகூலமுண்டு, குடும்பத்தில் ஏற்பட்ட மனச்சஞ்சலங்கள் அகலும், தந்தை வழி உறவினர்களால் நன்மையுண்டு.

**சிங்கம்** எதிர்பாராத வகையில் மனக் குழப்பங்கள் ஏற்படலாம், உடல் நலனில் கூடிய அக்கறை காட்ட வேண்டிய நாள், போசன சுகமுண்டு.

**கன்னி** சென்ற இடத்தில் செல்வாக்கு அதிகரிக்கும், குடும்ப சுகமுண்டு, சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், குதூகலப் பயணமொன்றை மேற்கொள்வீர்கள்.

**துலாம்** நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள், பகையொன்று நட்பாகலாம், தொழிலில் புதிய திட்டங்களைத் தீட்டுவீர்கள், கௌரவமான நாள்.

**விருச்சிகம்** வியாபார விருத்தியுண்டு, சுபகாரியப் பேச்சுக்கள் சுமுகமாக முடியும், வரவு எதிர்பார்த்தபடியே வந்து சேரும், தொலைபேசி வழித்தகவல் தொழில் வளர்ச்சிக்கு உதவும்.

**தனுசு** நல்ல நண்பர்களால் நம்பிக்கைகள் நடைபெறலாம், பெற்றோர் மீது பிரியம் கூடும், சுபகாரியச் செலவுகள் இடம்பெறலாம்.

**மகரம்** புதிய தகவல்கள் வந்து சேரலாம், பிரயாண நன்மையுண்டு, விருந்து விழாக்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, பிற இனத்தவரால் நன்மையுண்டு

**கும்பம்** கோரிக்கைகள் நிறைவேறும் நாள், பொருளாதார நிலை உயரும், வாக்கு மேன்மையுண்டு, சொத்துக்களால் நன்மையுண்டு, பிறர் உதவி கிடைக்கலாம்.

**மீனம்** தெய்வ சிந்தனை மேலோங்கும் நாள், சிந்தனை மிகுதியுண்டு, புத்தி சாதுரியத்தால் சாதிக்க வேண்டிய நாள், போசன சுகமுண்டு.

வளவன்

# வாரம் ஒரு தகவல்

## சிரிப்பின் இரகசியம்

"என்ன...தனியாக உட்கார்ந்து சிரிக்கிறீங்க?"

"சிந்தித்துப் பார்த்தா சிரிப்பு வருது சேர்!"

"உங்களுக்கு ஒரு விடயம் தெரியுமா? கடவுள் இரண்டு சந்தர்ப்பத்திலே சிரிக்கிறார் என்று சொல்லுவார்கள்...!"

"எப்போ?"

"ஒரு டாக்டர்... நோயாளியின் சொந்தக்காரர்களைப் பார்த்து,'கவலைப்படாதீங்க... இவரை நான் காப்பாற்றுகிறேன்' என்று சொல்கிறார். அந்தச் சமயத்தில் கடவுளுக்கு சிரிப்பு வருமாம்...'அந்த உயிரை இன்னும் கொஞ்ச் நேரத்திலே நாம் எடுக்கப் போகிறோம்...டாக்டர் இப்படிச் சொல்கிறாரே...!' என்று நினைத்து சிரிப்பாராம்!"

"நியாயம்தானே!"

"அதேமாதிரி கடவுள் இன்னொரு சந்தர்ப்பத்திலேயும் சிரிக்கிறார்...!"

"எப்போ...?"

"அண்ணன்-தம்பி இரண்டு பேரும் பாகப் பிரிவினை காட்டும் போது... இது என்னுடையது-அது உன்னுடையது என்று சொல்லும் போது கடவுள் நினைப்பாராம்... இந்தப் பிரபஞ்சமே எனக்குச் சொந்தம்... அப்படி இருக்கும்போது இந்தத் துண்டு நிலங்களுக்கு இவர்கள் சொந்தம் கொண்டாடுறாங்களே என்று நினைத்து சிரிப்பாராம்!"

"இப்போது நான் சிரித்துக்கொண்டிருப்பதும் கிட்டத்தட்ட அதுமாதிரி சிரிப்புத் தான்!"

"அப்படியா சொல்றீங்கள்!"

"ஆமாம்... ஒரு அண்ணன் - தம்பி இரண்டு பேருக்குள்ளே சொத்துத் தகராறு. உண்மையிலேயே அந்த சொத்து பூராகவும் எனக்கு வந்து சேர வேண்டியது. ஆனா அவர்கள் இரண்டு பேரும் சண்டை பிடிக்கிறார்கள்...!"

"அப்படியானால்... நீங்கள்...?"

"வக்கீல்!"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 60-70 | 50 |
| உருளைக்கிழங்கு | 70 | 70 | 710 |
| பச்சைமிளகாய் | 80 | 70 | 90 |
| தக்காளி | 100 | 60 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 50 |
| கோவா | 40 | 40 | 60 |
| கரட் | 80 | 60 | 60 |
| பூசணி | 50 | 30 | 40 |
| புடோல் | 30 | 30 | 30 |
| வாழைக்காய் | 30 | 25 | 40 |
| சின்ன வெங்காயம் | 140 | 140-150 | 140 |
| பெரிய வெங்காயம் | 60 | 50 | 80 |
| பாகற்காய் | 80 | -- | 70 |
| வெண்டிக்காய் | 30 | 25-30 | 25 |
| கரணைக்கிழங்கு | 80 | -- | -- |
| பயிற்றங்காய் | 80 | 60 | 50 |
| லீக்ஸ் | 60 | 70 | 70 |
| பீற்றூட் | 60 | 40 | 60 |
| கறிமிளகாய் | 60 | 80 | 80 |
| முருங்கைக்காய் | 300 | 450 | 350 |
| போஞ்சி | 100 | -- | 80 |
| கத்தரி தம்புள்ள | 60 | -- | 40 |
| கீரை - 1 பிடி | 30 | 15 | 20 |
| தேசிக்காய் | 100 | 100 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 30-60 | 60 |

# வியாழமாற்றம் உங்களுக்கு எப்படி?




**(கார்த்திகை 2, 3, 4 பாதங்கள், ரோகிணி, மிருகஷீரிடம் 1, 2 பாதங்கள் வரை)**

**"குருப் பார்வையினால், பரபரப்போடு செயல்படுவீர்!"**

களைப்பை மறந்து உழைப்பையே மூலதனமாக்கிச் செயல்படும் இடப இராசி நேயர்களே!

இறைவனைச் சுமக்கும் வாகனமான நந்தி உங்கள் ராசியின் சின்னமாக அமைவதால், மற்றவர்களது மனப்பாரங்களைச் சுமப்பீர்கள். பிறருக்காகவே பாடுபடும் இராசிகளில் முதன்மை ஸ்தானம் வகிப்பது உங்கள் ராசிதான்.

உங்களின் கவர்ச்சியான தோற்றமும், பேச்சாற்றலும் தான் காரிய வெற்றிக்கு காரணமாக அமைகிறது. உங்களைச் சார்ந்தவர்களுக்கு ஏதேனும் பிரச்சினை என்று வந்துவிட்டால், அதை எதிர்த்து சமாளிப்பதில் முதன்மையாக நீங்கள் இருப்பீர்கள். வாழ்க்கையில் ஏற்றமும், இறக்கமும், இன்பமும், துன்பமும், வீழ்ச்சியும், எழுச்சியும் கலந்து வந்து கொண்டே இருக்கும்.

உங்களுக்கு நிரந்தரமான யோகம் செயல்பட வேண்டுமானால், சந்திரன் பலம் பொருந்திய நாளில் தெசாபுத்திக்கேற்ற தெய்வங்களைத் தேர்ந்தெடுத்து வழிபட்டு வந்தால், தித்திக்கும் விதத்தில் தேனான வாழ்க்கை அமையும். உங்கள் ராசியில் தான் சந்திரன் உச்சம் பெறுகிறார். சிந்தனைக்கு முக்கியத்துவம் கொடுக்கும் சந்திரன் உச்சம் பெறும் இராசியாக உங்கள் ராசி இருப்பதால், உங்கள் யோசனைகளைக் கேட்டு நடந்தவர்கள் வெற்றி பெறுகிறார்கள்.

**குருப்பெயர்ச்சி விரயத்தை தருமா?**

இத்தனை மகத்துவம் வாய்ந்த உங்கள் இராசிக்கு இதுவரை 11ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த குரு பகவான், 08.05.2011 முதல் விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போகிறார். விரய ஸ்தானத்தில் சஞ்சரித்தால் விரயம் அதிகம் வந்து விடுமோ என்று நீங்கள் கவலைப்பட வேண்டாம். அதன் ஆதிபத்திய அடிப்படையில் பலன்கள் மாறுபடும்.

பொதுவாக, உங்கள் இராசிநாதன் சுக்ரனுக்கு குரு பகைவன். எதிரியாக இருந்தாலும், எதிரில் வரும்பொழுது கும்பிட்டால் உதிரியாக ஆக்காமல், ஒன்று சேர்ந்து வாழ வழி வகுப்பவர் குருபகவான் தான். அந்த குருவை முறையாக வழிபட்டால், குறைகள் அகலும். குதூகலம் கூடும்.

ரேவதி நட்சத்திரம் வரும் நாட்களில் குரு ப்ரீத்தி செய்வதன் மூலமும், அன்றைய தினம் நடைபெறும் ஹோமங்களில் கலந்து கொள்வதன் மூலமும் உங்கள் ஆவல்கள் பூர்த்தியாகும். அன்றாட வாழ்க்கை நன்றாக அமையும்.

குரு உங்கள் ராசிக்கு 8, 11க்கு அதிபதியாவார். 8க்கு அதிபதியான குரு, பன்னிரெண்டாம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது, விபரீத ராஜயோகத்தை செயல்படுத்துவார். "கெட்டவன், கெட்டிடில் கிட்டிடும் ராஜயோகம்" என்று முன்னோர்கள் சொல்லி வைத்திருக்கிறார்கள் அல்லவா? எனவே, திட்டமிடாது செய்யும் காரியங்களில் வெற்றி கிடைக்கும்.

வெற்றிக்கனியை நீங்கள் எட்டிப்பிடிப்பதற்கு இடையூறாக இருந்தவர்கள் இனி விலகுவர். அதன் பலன் முழுமையாக உங்களுக்கு கிடைக்க குருப்பெயர்ச்சிக்கு முன்னதாகவே, குரு சந்நிதிக்குச் சென்று, "வானவர்க்கு அரனான வளம் தரும் குருவே" என்ற கவசத்தைப் பாடுங்கள். கவசம் பாடினால், உங்கள் கவலைகள் அகலும்.

தேவகுருவிற்கு பிடித்த தித்திப்பான 'சர்க்கரைப் பொங்கலை நைவேத்தியமாக்கி, குருவுக்கு முல்லைப்பூ மாலை சூட்டி, பொன்னிற மஞ்சள் வஸ்திரம் அணிவித்து, கண்ணோடு கண் பார்க்கும் விதத்தில் நின்று கைகூப்பி, தொழுது வழிபட்டு வாருங்கள்.

*"இடமது பன்னிரெண்டில்,*
*இயல்பாகக் குருவும் வந்தால்,*
*கடமையில் கவனம் தேவை!*
*காசுகள் விரயமாகும்!*
*உடமையால் சொத்து சேரும்!*
*உடல் நலம் அச்சுறுத்தும்*
*தடம்புரளாமல் வாழத்*
*தைரியம் கைகொடுக்கும்!"*

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது.

அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது, விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் குரு விரயத்தை ஏற்படுத்தி விடுவாரோ என்று நீங்கள் பயப்படலாம். விரயம் சுப விரயமாகவும் இருக்கலாம், வீண் விரயமாகவும் இருக்கலாம். உடல் நலத்தில் ஏதேனும் தொல்லைகள் வந்தால், உடனுக்குடன் கவனித்துக் கொள்வது நல்லது. பிறரிடம் நம்பி ஒப்படைத்த பொறுப்புகள் மீண்டும் உங்களிடம் வந்து சேரலாம்.

**விதியை மாற்றியமைக்கும் வியாழனின் பார்வை!**

"குருவே! நீ பார்த்தால், போதும்! கோடியாய் நன்மை சேரும்!" என்ற சான்றோர்களின் வாக்கை மெய்ப்பிக்கும் பொருட்டு, குருவின் பார்வை பலத்தால் 4, 6, 8 ஆகிய இடங்கள் புனிதமடைந்து, அந்தந்த இடங்களுக்குரிய செயல்பாடுகளை தீவிரப்படுத்துவதோடு, தித்திப்பான பலனையும் உங்களுக்கு வழங்கப்போகிறது.

பொதுவாக "பொன்னவன் பன்னிரெண்டில் சஞ்சரித்தால், பூமியுடன் வீட்டுமனை வாங்கும்யோகம் மின்னலென வந்திடுமாம்" என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது. நான்காமிடத்தில் பதியும் குருவின் பார்வை பலத்தால், மனை கட்டும் யோகம் இந்த குருபெயர்ச்சியால் பதியும் குருவின் பார்வை பலத்தால், மனை கட்டும் யோகம் இந்த குருபெயர்ச்சியால் உங்களுக்கு செயல்படப் போகிறது. அவ்வாறு வீடு கட்டும்பொழுது, உங்கள் குடும்பத்தில் யாருடைய ஜாதகத்தில் செவ்வாய் பலம் பெற்று இருக்கிறதோ, அதற்கேற்ற குபேர திசை பார்த்து வாயில்கள் அமைத்துக் கொண்டால், வசதிகள் பெருகும். வருமானம் அதிகரிக்கும்.

12ஆம் இடம் விரய ஸ்தானம் என்பதால், எந்தெந்த வழிகளில் எல்லாம் விரயம் செய்ய விருப்பப்படுகிறீர்களோ, அந்தந்த வழிகளில் எல்லாம் நீங்கள் விரயம் செய்யத் தயாராக இருக்க வேண்டும்.

உத்தியோகத்தில் உடன் இருப்பவர்களால் ஏற்பட்ட தொல்லை அகலும். மேலதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வதோடு, உங்கள் குரலுக்கும் செவிசாய்ப்பார்கள். தொழில் மாற்றம், ஊர்மாற்றம் செய்ய நினைத்தவர்களுக்கு அது கைகூடும். உத்தியோகத்தில் விருப்ப ஓய்வு பெற நினைப்பவர்களின் விருப்பம் நிறைவேறலாம். ஒரு கடனை அடைக்க மற்றொரு கடனை வாங்கி சங்கிலிப் பின்னல் போல, தொடர்ந்த கடன்சுமையைக் குறைக்க ஒரு முக்கிய முடிவெடுப்பீர்கள். நண்பர்கள் சேர்க்கையில் நல்லவர் யார்? கெட்டவர் யார்? என்று அறிந்து கொண்டு செயல்படுவீர்கள்.

எட்டாமிடத்தைக் குரு பார்ப்பதால், நீங்கள் காரியத்தை செய்யத் தொடங்கினால், பணம் தானே வந்து சேரும். பெண் குழந்தைகளின் சடங்கு நிகழ்ச்சி முதல் பெரிய குழந்தைகளின் திருமண நிகழ்ச்சி வரை இக்காலத்தில் ஒன்றன் பின் ஒன்றாக இல்லத்தில் நடைபெறப் போகிறது.

அத்தியாவசியப் பொருட்கள் முதல் ஆடம்பரப் பொருட்கள் வரை வாங்கிச் சேர்க்க விரும்புவோருக்கு உன்னதமான காலமாகும். முன்னோர் வழிச் சொத்துக்களில் முறையான வருமானம் கிடைத்து, அதை முறையாக செலவிடும் சூழ்நிலை அமையும். குடும்பத்திலும் சரி, நண்பர்கள் மத்தியிலும் சரி நீங்கள் விட்டுக் கொடுத்துச் செல்வதன் மூலம் வியக்கும் விதத்தில் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளலாம்.

பன்னிரெண்டாம் இடம் பயண ஸ்தானம் என்பதாலும், பயணங்கள் அதிகரிக்கும். காசி முதல் ராமேஸ்வரம் வரை செல்லும் புனித பயணமும், சம்பாதிப்பதற்காகச் செல்லும் அந்நிய தேசப் பயணமும் கைகூடும். குரு பார்வை பலத்தால் வீடு, தொழில், சொந்தம், சுற்றம், சுகம், கொடுக்கல் - வாங்கல் உத்தியோகம், தாய்வழி ஒத்துழைப்பு, வாகன யோகம் ஆகிய அனைத்து வழிகளிலும் நல்ல பலன்கள் உங்கள் இல்லம் தேடி வரப்போகின்றன.

பெற்றோர் வழியில் பிரியம் கூடும். மாமன், மைத்துனர்களின் ஒத்துழைப்புகள் வீட்டில் மங்கல நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கு உறுதுணையாக இருக்கும். சாமி துணையோடு, சகல காரியங்களிலும் வெற்றி பெறப் போகும் உங்களுக்கு பூமி யோகமும் இப்பொழுது வந்து சேரப்போகிறது.

**உக்ர குணத்தை மாற்ற வேண்டிய வக்ர காலம்!**

மேஷ இராசியில் சஞ்சரிக்கும் குரு 18.08.2011 முதல் 15.12.2011 வரை வக்ர கதியில் இயங்குகிறார். உங்கள் ராசியைப் பொறுத்தவரை குரு 8, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியாக குரு விளங்குவதால், வக்ர காலத்தில் சில நல்ல காரியங்களையும் முடித்துக் கொடுப்பார்.

அஷ்டமாதிபதி வக்ரம் பெறும் பொழுது, ஆச்சரியப்படத்தக்க வகையில் நல்ல பலன்களையும் நீங்கள் சந்திக்க நேரிடும். அரசு வழியில் நீண்ட நாட்களாக எதிர்பார்த்த கடனுதவிகள் கிடைக்கும். ஆயினும், ஒரு கடனை அடைக்க மற்றொரு கடனை வாங்கி சங்கிலித் தொடர் போல, கடன்களை வரவழைத்துக் கொள்வீர்கள். இதனால், நிம்மதி குறையலாம்.

அதேநேரத்தில், பதினொன்றாமிடத்திற்கு அதிபதியாகவும் குரு விளங்குவதால், பயணங்கள் அதிகரிக்கும். கடல் பயண வாய்ப்புகள் போல் தோன்றி, கடைசி நேரத்தில் கைநழுவிச் செல்லலாம். இன்பங்களை மட்டுமே நீங்கள் வரவழைத்துக்கொள்ள, இருகரம் கூப்பி குருவை நீங்கள் வழிபட வேண்டிய நேரமிது.

மூத்த சகோதரத்தை நீங்கள் அனுசரித்துச் செல்வதன் மூலம் உங்கள் முன்னேற்றத்திற்குரிய முட்டுக்கட்டைகள் அகலும். வாகனப் பழுதுச் செலவும், வரும் விருந்தினர்களால் தொல்லைகளும் உருவாகலாம். இந்த நேரத்தில்

சிவல்புரி சிங்காரம்


விரதங்களும், வழிபாடுகளும் உங்களுக்கு கைகொடுக்கும்.

இந்த குருப்பெயர்ச்சி விரயங்களை அதிகம் கொடுக்கும் விதத்தில் விரய ஸ்தானத்தில் அல்லவா சஞ்சரிக்கிறது. எனவே, குடும்பத்தினர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். கொடுக்கல் - வாங்கல்களில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. படிப்படியாக முன்னேறிவந்த நீங்கள், பரம்பரைச் சொத்துக்களைக் கூட விற்கும் சூழ்நிலை உருவாகலாம். கணவன் - மனைவிக்குள் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும். உடன்பிறப்புகளின் ஒத்துழைப்போடு கூட்டுத் தொழிலை ஏற்று நடத்த முன்வருவீர்கள்.

உங்கள் இராசிநாதனைப் பலப்படுத்த வெள்ளி தோறும் சாந்த ரூப அம்பிகையை வழிபடுவது நல்லது. குறிப்பாக, யோகபலம் பெற்ற நாளில் தெட்சிணாமூர்த்தியை வழிபட்டால், திரவிய இலாபம் கிட்டும்.

*(தொடரும்)*

# அரசின் இனத்துவப் பாகுபாட்டுச் சிந்தனையால்
# தமிழ் தொழிலாளர் வாழ்வில் வசந்தம் ஏற்படவில்லை



உலக சமூகங்கள் ஒன்று சேர்ந்து உழைக்கும் மக்களின் உயர்வுக்காகவும் உரிமைக்காகவும் புரட்சிக்கும் இந்நாளில் எங்கள் தேசத்தின் உயர்வுக்காய் உழைத்துவரும் தொழிலாளச் சகோதரர்களுக்கு எமது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம். உழைத்தல் என்பது ஓர் உன்னதமான செயற்பாடு. உழைத்தல் மூலம் பெறப்படுகின்ற பயன் விளைவுகள் மனித மேம்பாட்டையும் மகிழ்ச்சியையும் மாத்திரமின்றி சமூகத்தின் வலிமையையும் பிரதிபலிப்பன. உழைத்தலுக்கூடாகப் பெறப்பட்ட பெறுபேறுகளே ஒவ்வொரு சமூகங்களையும் அரசுகளையும் பொருளாதார மேன்னிலை உடையதாக வளர்த்து வந்திருக்கிறது. இத்தகைய உழைப்புகளுக்கான முயற்சிகளின் போது உழைப்பாளர்கள் எதிர்கொண்ட சவால்கள் சாதாரணமானவையல்ல.

தொழிற்புரட்சிகள் ஊடாக ஏகாதிபத்தியங்களிடமிருந்து தொழிலாளர்கள் விடுவிக்கப்பட்டு விட்டதாகவும் தொழிலாளர் நலன்களும் நலனோம்புப் பட்டயங்களும் பாட்டாளிகளின் உணர்வுகளையும் உரிமைகளையும் உறுதிப்படுத்துவதாக பறை சாற்றப்படுகின்றது.

ஆனால், அரசியல் ஆதிக்க எண்ணங்களும் முதலாளித்துவ சார்புநிலைகளும் பொருளாதாரத் திட்டமிடல் குறைவும் நவ பொருளாதாரச் சுரண்டல்களுமாக உலகத் தொழிலாளர் சமூகம் வேதனைகள் மத்தியிலேயே தமது சாதனைகளைப் புரிந்து வருகின்றனர். இவை எல்லாவற்றையும் கடந்து தாம் சார்ந்துள்ள சமூகத்தின் நிலைபேற்றிற்காகவும் அதன் பொருளாதார மேன்னிலைக்காகவும் உழைப்பதன்மூலம் தமது உரிமைகளையும் உறுதிப்படுத்தி தமது தேசங்களின் பலத்தையும் வளத்தையும் தொழிலாளர் வர்க்கம் வெளிப்படுத்தி வருவது மகிழ்வு கொள்ளத்தக்கதாகும்.

எங்களுடைய இலங்கைத் தீவைப் பொறுத்தவரையில் அது தன்னகத்தே கொண்டிருக்கும் மனிதவளம் என்பது அதன் முதன்மையான சொத்தாகும். பரந்துபட்ட இயற்கை வளங்களும் மனித வளப்பயன்பாடும் இணைந்த அறிவுபூர்வமான பொருளாதாரக் கொள்கையே எமது சமூகத்தின் வலிமையான அடிப்படையாக விளங்கும். இருந்த போதிலும் துரதிர்ஷ்டவசமாக அரசு கடைப்பிடித்து வருகின்ற இனரீதியான பாகுபாட்டு அணுகுமுறைகள் பாரபட்சமான தொழில் வாய்ப்புக்கள் மற்றும் சமவாய்ப்புக்களும் சமவுரிமைகளும் மறுக்கப்படுதல் என்பவை தமிழ்பேசும் தொழிலாளர்களுடைய வாழ்வில் வசந்தத்தை ஏற்படுத்தத் தவறி வருகிறது.

உற்பத்திக்கான நிலம், தமிழர்களுடைய கடல் வளப் பயன்பாடு, வணிகம், அறிவியல், அரசசேவை என்பவற்றின் தொழில்துறைத் தீர்மானங்களைத் தமிழ்பேசும் தொழிலாளர்கள் எடுக்கமுடியாத நிலையே நீடித்து வருகிறது. மலையகத் தமிழ்த் தொழிலாளர்கள் நியாயமான நாட்கூலியைக் கூடப் பெறமுடியாதுள்ளனர். குறைந்த ஊதியமும் கூடிய உழைப்பும் வாழ்க்கைத் தரத்தைக் குறைவடையச் செய்திருக்கிறது. அரசியல் அதிகாரப் பகிர்வும் நல்லாட்சிக்கான நவீன அணுகுமுறைகளும் அரசிடம் இல்லாமையால் தமிழ் பேசும் தொழிலாளர் வர்க்கத்தின் துயரங்கள் தொடர்ந்த வண்ணமே இருக்கிறது. இருந்த போதிலும் அவர்களின் உழைத்தலும் உழைத்தலுக்கான போராட்டங்களும் தொடர்ந்த வ'ண்ணமேயுள்ளன. எத்தகைய து ர்விலும் அவற்றை எதிர்கொண்டு உழைத்து வளம்பெறுகின்ற எமது தொழிலாளர்களின் பலம் தமிழ் நிலத்திற்குத் தெம்பூட்டுகின்றது நம்பிக்கையளிக்கின்றது.

அலைகடல் தாண்டி வாழ்ந்த போதும் தமிழர் பொருளாதாரத்தின் தாங்குநிலை சக்தியாக இருக்கின்ற உழைப்பாளர்கள் படையே நிலத்தில் வாழ்கின்ற எமது சகோதரத் தொழிலாளர்களின் நம்பிக்கைத் தளமாக இருக்கின்றது. எமது சமூகத்தின் இருத்தல் கேள்விக்குள்ளாக்கப்பட்டு எமது தொழிலாளர்கள் நிர்க்கதி நிலைக்குத் தள்ளப்பட்டபோது அவர்கள் மீண்டு எழுவதற்கும் அவர்களின் பொருளாதார முயற்சிகளுக்கும் உதவிவரும் புலம்பெயர் தமிழ் சமூகத்திற்கும் எமது வாழ்த்துக்கள். புலம்பெயர் தொழிலாளர்களும் நிலம் வாழ் தொழிலாளர்களும் இணைந்து செயற்படும் போக்கு தமிழர்களின் பொருளாதார வலிமையையும் எதிர்காலம் பற்றிய நம்பிக்கையையும் உணர்த்தி நிற்கிறது.

**சிவஞானம் சிறிதரன்,**
**நாடாளுமன்ற உறுப்பினர்,**
**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.**

எதிர்காலத்தில் எமது தொழிலாளர்கள் சுயதீர்மானங்களின் அடிப்படையில் தொழில்களைப் புரியக் கூடிய தொழிற்சுதந்திரமும் பாதுகாப்புப் பலமும் உடைய அரசியல் சமூகம் ஒன்றில் உழைப்பால் உயர்வு பெற்ற சமூகநிலை பெறுவதற்கும் தொழிலாளர்களுடைய வாழ்வு வளம் பெறவும் இன்றைய நாளில் உங்களை வாழ்த்துவதில் பெருமிதம் அடைகின்றோம்.

## ஐ.நா. அறிக்கையை வாபஸ்பெற கோரி சுதந்திர மக்கள் ஒன்றியம் உண்ணாவிரதம்

(கொழும்பு)

நிபுணர்குழுவின் அறிக்கையை வாபஸ் பெற்றுக்கொள்ளக்கோரி ஸ்ரீலங்கா சுதந்திர தமிழர் ஒன்றிய உறுப்பினர்கள் சிலர் நேற்று முன்தினம் காலை முதல் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இலங்கையில் நிலைகொண்டிருந்த யுத்தம் நிறைவ்டைந்துள்ள நிலையில் ஐ.நா. ஆலோசனைக்குழுவின் அறிக்கையானது, இலங்கை ஜனாதிபதியை குற்றவாளியாக இனம் காட்டியுள்ளதாக உண்ணாவிரதத்தில் ஈடுபட்டவர்கள் குறிப்பிடுகின்றனர்.

எனவே, அவர்கள் ஜனாதிபதியை குற்றவாளியாக்கி முன்வைக்கவுள்ள குற்றப்பத்திரிகையை வாபஸ்பெறவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

30 வருடகால யுத்தத்தை முடிவிற்குக் கொண்டு வந்ததன் மூலம் ஜனாதிபதி இலங்கையில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்திக் கொடுத்துள்ளதாகவும் இன்று சகல மக்களும் சகல இடங்களுக்கு அச்சமின்றி சென்று வரக்கூடிய நிலைமையை ஏற்படுத்திக் கொடுத்துள்ளதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

இவ்வாறான ஒரு சிறந்த தலைவனைச் சர்வதேச குற்றவாளிக் கூண்டில் ஏற்றுவதற்கு ஐ.நா.செயலாளர் மேற்கொள்ளும் முயற்சிகளை தடுத்து நிறுத்த இன, மத, ஜாதி பேதமின்றி அனைவரும் அணிதிரள வேண்டும் எனவும் அவர்கள் கேட்டுக்கொண்டனர். (2)

## அடையாள அட்டை மோசடியில் ஈடுபட்ட வர்த்தக நபர் கைது

(கொழும்பு)

வெவ்வேறு நபர்களின் பெயர்களிலான 35 தேசிய அடையாள அட்டைகளை வைத்திருந்த தமிழ் வர்த்தகர் ஒருவர் வவுனியாவில் கைது செய்யப்பட்டுள்ளார்.

தனியார் தொலைத் தொடர்பு நிறுவனமொன்றை நடாத்தி வரும் அவர் ஏனையவர்களின் பெயர்களிலான தேசிய அடையாள அட்டைகளைக் கொண்டு குற்றவாளிகள் மற்றும் சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுவோருக்கு கையடக்கத் தொலைபேசிகளுக்கான சிம் கார்ட்டுகளை பெருந்தொகைப் பணம் பெற்றுக்கொண்டு விநியோகித்திருப்பது விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ளது.

அவரிடமிருந்த தேசிய அடையாள அட்டைகள் நாட்டின் பல பகுதிகளையும் சேர்ந்த தமிழ், சிங்களம், முஸ்லிம் நபர்களின் பெயர்களில் காணப்பட்டிருந்தன. ஆயினும் அவை அவருக்கு எந்த வழியில் கிடைக்கப் பெற்றது என்பது குறித்த தகவல்களை இதுவரை வெளியிடாமல் மறுத்து வருகின்றார்.

பிரஸ்தாப நபர் அடையாள அட்டைகளின் பெயரில் விநியோகிக்கப்பட்டுள்ள சிம் கார்ட்டுகள் தொடர்பில் விசாரணை அறிக்கையொன்றை நீதிமன்றத்துக்குச் சமர்ப்பிக்கும்படி வவுனியா நீதவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். (2)








யாழ்.கல்வி கோட்ட தமிழ் தின போட்டி நேற்றைய தினம் யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற்றது. இந் நிகழ்வில் மாணவிகள் இறைவணக்கம் செலுத்துவதையும், யாழ். கோட்ட கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ்.சிவபாலன் தமிழ் தின போட்டி தொடர்பாக விளக்கமளிப்பதையும், கலந்து கொண்ட

(படங்கள்–என்.குமார்)



# கவிதைக் கலசம்

## சங்குநாதம்

### அம்மா

பூ மனதைக் கொண்ட
பூவுலகின் தெய்வம்
தாள் பணிந்து தொழுதாலும்
தடுத்து நிற்கும் உருவம்
ஆழ் மனதில் பாசமென்ற
'பா' வடிக்கும் கீதம்
ஆருயிராய் அருகிருந்து
எமை அரவணைக்கும் உறவு
எம் வாழ்விருக்கும் காலம் மட்டும்
எம் தாயவளே
என்றும் எம் மனதில் தெய்வம்

பா.பொன்நிலவன்

### காத்திருப்பு

இறுதிவரை
காத்திருப்பேன்
உனக்காக
என் விழிகளை
மூடாமலே

புலோலியூர் இனியன்

### காலச்சுவடு

சிலுவை இருக்கும் என் தோளில்
மீண்டும் தூக்கி வைக்கிறார்கள்
சிலுவைகளை
நான் உறவுகளை
இழந்த பிறகும்
ஒடிக்கப் பார்க்கிறார்கள்
என் சிறகுகளை
இவன் வாழ்க்கை கிண்ணத்தில்
தண்ணீரை அல்ல
அள்ளி வார்க்கிறார்கள்
கண்ணீரைத் தான்
இவன் எழுந்து நடப்பது அல்ல
இவன் விழுந்து கிடப்பதே
இவர்கள் நெஞ்சுக்குள்
பெரிய ஆனந்தம்

உயிரோவியன்

### நந்தவனம்

அன்பே என் ஜீவனே
முகம் தெரியாத
உன் காதல்-என்
மனதில் நந்தவனமாகி விட்டதே

எம்.கார்த்திகா
விசுவமடு

### அவரவர் பார்வையில்

பாடசாலை நாட்கள்
மறக்க முடியாத
ஒரு கனவு
**இன்பம்**
இருண்ட வாழ்க்கையில்
வெளிச்சத்தைக்
கொடுக்கும் தென்றல்
**ஆசிரியர்கள்**
எம்வாழ்க்கைக்கு
வழிகாட்டும்
பெரிய மகான்கள்
**கவிதை**
எமது சோகங்களை
எழுதித் தீர்க்கும்
ஓர் மடல்

கு.குலமகள்
யாழ்ப்பாணம்

### மே நாள்

கூனிக் குறுகி கும்பிடுபோட்டு
எத்தனை காலம்
எங்களை மாய்ப்பது
வறுமைச் சக்கரங்களில்
வாழ்க்கையை ஓட்டி வாழ்வதும்
எங்களின் வாழ்க்கையா?
சிறுமை எமக்கு சீதனமா?
அடிமையே எங்கள் வாழ்நிலையா?
அடக்கு முறையாளர்கள்
கோடரிக் காம்புகளுடன்
முதலாளி வர்க்கத்துக்கும்
முடிவுரை எழுதிட
உழைக்கின்ற மனிதன்
வயிறார உணவுண்ண
முடியாத போது
ஏய்க்கின்ற மனிதன்
சுகபோக வாழ்வில்
எங்களின் உழைப்பால்
உயருது நாடு
எங்களின் வாழ்வோ
வறுமையின் கோடு
பாமர மக்களும் சுகம் காணுமொரு
காலத்தை மாற்றிட
தொழிலாளர் நாமெல்லாம்
எழுவோம் அணியணியாய்!

எம்.சந்திரகலா
யோகபுரம்

### இமயம் தொட...

உன்னால் எது
தொடங்கப்படுகிறதோ
அதனை இறைவனே
முடித்து வைக்கின்றான்
நல்லதைத் தொடங்குவாயாயின்
நன்மையிலேயே முடியும்
தீயதை தொடர்வாயாயின்
தீமையிலேயே முடியும்
ஆடும் பொம்மைகள் நாம்
நூல் அவனிடமல்லவா!

மாவை. நா.கஜேந்திரா

### சொந்தம்

ரோஜாத் தோட்டத்தில்
பூத்துக் குலுங்கும்
அழகிய மலர்களே
நம் சொந்தங்கள்

### விதவை


நம் நாட்டினில்
களை பிடுங்கிய
அறுவடை செய்தபின்
எஞ்சிய கட்டைகள்

ப.சுகிர்தா, சுழிபுரம்

### அக்கா

பரிவோடு சோறு ஊட்டுகிறாய்
பாசத்தோடு பழகுகிறாய்
தாய்மை அடையாமலே
தாயாகி விட்டாய்!

த.நேக்கா



## மௌனத்தின் தேடல் – 68

### சந்ததி நிலைக்குமா?

இறுதி யுத்தம்
மனிதர்களை தான்
மாய்த்தது என்றால்
மரங்களையுமா?
மழை இல்லா-இப்
பாலை நிலத்தில்
எம் இனம் தழைக்குமா?
எம் சந்ததி நிலைக்குமா?

பொ.ஞானகலை
பருத்தித்துறை

### யாருக்காக?

நல்லார் கொண்ட பூமியிலே
நன்மழை பொழிந்திடுமாம்
இது என்ன?
கொல்வார் கொண்ட பூமியா?

ஜெ.லெசி, பருத்தித்துறை

### பசியுடன்

அடிமண் அனலால்
வெடியுண்ட பின்னும்
ஆற்றங்கரை நீர்
ஆவியாகி
ஆகாயத்தில்
அழகிய
கோலமிடுகின்றன

மீரா

### யார்?

மாறிவரும் காலநிலை
வடிவிழக்கும் பூமிப்பந்து
காரணம் தான்
யார்?

எஸ்.தர்சன்

### சாட்சி

எம்மவரின்
வாழ்வியலை
எடுத்தியம்புகின்றனவோ
இவைகள்

புலோலியூர்
இனியன்

### கருணையின்றி

வனப்புடன் கூடிய
வளாகம்
வடிவிழந்து
நிற்கின்றது
வானத்தின்
கருணையின்றி...

தர்சிகா
பருத்தித்துறை

### காலத்தின் கோலம்

பசுமையாய் நிற்கையில்
பலரும் வந்தனர் பயன்நாடி
இன்று பட்டுப்போய்த்
தனிமையாய் நிற்கையில்
வாரி வழங்கும் மேகமும்
கடந்து போகின்றதே

சிவா

### இன்று...?

வனப்புடனே செழித்து
நின்றோம் அன்று!
வாழ்விழந்து நிற்கிறோமே
கேட்பார் அற்று இன்று!

எஸ்.டாவின்சி

### மாதிரியோ?

மானிடன் புவிக்கு
அளிக்கபோகும்
பரிசின் மாதிரியோ?

எஸ்.சிவா
ஆத்தியடி.

### நாங்கள்

பண்புள்ள நிலங்கள்
புண்பட்டு போனதால்
மண்பற்று போன
பட்டறிந்த மரங்கள்

இணுவில் வாசீசன்

### கிடைக்குமா?

தானியம் விளையும் தரைக்கு
இறைவனிடம்
மானியம் கொடுத்தாவது
மழை கேட்போம்

ஜே.சீர்த்தனன்

### பட்டபின்பு

கதிரவனின் சீற்றம்
வரட்சியின் தோற்றம்
மருட்சியோடு எழுச்சிபெற
புரட்சி காட்டினாலும்
பட்டபின்
ஞானம் பெறுமா...?

பிரியா
யாழ்ப்பாணம்


### வெறுமை

இக் கலியுகத்தில்
பிறந்த பாவத்திற்காக
நீங்களும் செயலிழந்து
விட்டீர்களா?

பொ.இளவரசி
பருத்தித்துறை

## சங்குநாதம் மௌனத்தின் தேடல் – 69

**அன்பு வாசகர்களே !**



உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.
எனும் முகவரிக்கு 06.05.2011 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளிற்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

# தாருஸ்மான் அறிக்கையானது அபிவிருத்தி நடவடிக்கைக்கு முட்டுக்கட்டையாகும்

## ஜீ.எல்.பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

**தாருஸ்மான் அறிக்கை இலங்கையின் சமாதான செயற்பாடுகள் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டையாக அமைந்துள்ளதாக வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.**

தாருஸ்மான் அறிக்கை குறித்து அரசின் நிலைப்பாடு தொடர்பில் அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் நேற்று முன்தினம் வெளிநாட்டு இராஜ தந்திரிகளுக்கு விளக்கமளித்தார்.

கொழும்பிலுள்ள வெளிவிவகார அமைச்சில் நடைபெற்ற இந்நிகழ்விலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதில் இலங்கை அரசு தாருஸ்மான் அறிக்கையை ஐ.நா.வின் ஓர் ஆவணமாக பார்க்கவில்லை.

இந்த அறிக்கை ஐ.நா. செயலாளர் நாயகத்திற்காக தனிப்பட்ட முறையில் தயாரிக்கப்பட்டதாகும். அத்துடன் இந்த அறிக்கை தயாரித்த குழு தவறாக வழிநடத்தப்பட்டுள்ளது. இவ்வாறே இலங்கை அரசு இந்த அறிக்கையை பார்க்கிறது என்று அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் சுட்டிக்காட்டினார். இதன்போது அமைச்சர் மேலும் கூறியதாவது,


இலங்கையில் யுத்தம் முடிவடைந்ததும் நாட்டை மீளக்கட்டியெழுப்பும் பணியில் அரசு ஈடுபட்டது. மூன்று தசாப்த முரண்பாடுகளுக்குப் பின் சமாதான செயற்பாடுகளை அரசு வெற்றிகரமாக முன்னெடுத்து வந்தது. யுத்தத்தில் ஏற்பட்ட வடுக்களை அகற்றும் பணியில் அரசு மும்முரமாக ஈடுபட்டு வந்தது. அதேபோன்று யுத்தத்தினால் இடம்பெயர்ந்தோரை மீளக்குடியமர்த்துவதில் அரசு வெற்றிகரமாக முன்னெடுத்து வந்தது.

அத்தோடு புலிகளின் சிறுவர் படையணியில் இணைந்திருந்தோரையும் புனர்வாழ்வளித்து சமூகத்துடன் இணைப்பதில் வெற்றி பெற்றுள்ளோம். நாம் வலுவான அடித்தளத்தோடு முன்னகர்ந்து வருகின்றோம். ஆனால் தாருஸ்மான் அறிக்கையில் இது குறித்து எந்த தகவலும் வழங்கப்படவில்லை.

ஆனால் இந்த அறிக்கையின் மூலம் எமது சாதகமான பயணத்திற்கு தடங்கல் ஏற்பட்டுள்ளது. அதேபோன்று நாட்டைச் சீர்குலைப்போருக்கு சாதகமாகவே இந்த அறிக்கை அமைந்துள்ளது.

தாருஸ்மான் குழுவின் சட்ட ரீதியான தகைமை குறித்து அரசு கேள்வி எழுப்புகிறது. இந்த குழுவில் உண்மைத் தன்மை மற்றும் புலனாய்வு குறித்து எந்த கட்டமைப்பும் இல்லை.

அத்துடன் தாருஸ்மான் அறிக்கையில் விடுதலைப்புலி அமைப்பினர் ஒழுக்கமான தேசியவாதம் கொண்ட அமைப்பாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அந்த அமைப்பு பெரும்பாலான தமிழ்-சிங்கள தலைவர்களைக் கொன்று குவித்துள்ளது. அதே



போன்று கடைசிக் கட்ட யுத்தத்தின் போது அவர்கள் தமிழ் மக்களுக்கு எதிராக மனித விரோதச் செயல்களில் ஈடுபட்டனர். ஆனால் தனிப்பட்ட முறையிலும் இராணுவ வீரர்கள் தமிழ் மக்களை காப்பதற்காக போராடினர் என்று அமைச்சர் குறிப்பிட்டார். (2-3)

# விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குட்பட்ட குருநகர் 11 பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவிற்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய் தடுப்பூசி வழங்கப்படவுள்ளது.

இதற்கமைய நாளை திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் மதியம் 12.30 மணிவரை திருநகர் மாணவர் படிப்பகத்திலும் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் மதியம் 12.30 மணிவரை திருநகர் மாதா கோவிலடியிலும் வைத்து ஏற்றப்படவுள்ளது.

எனவே இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தமது வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர்நோய் தடுப்பூசியினை ஏற்றிக் கொள்ளுமாறு யாழ்.மாநகர சபை வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் அறிவித்துள்ளார். (2)

# மே தினத்தை முன்னிட்டு விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள்

(கொழும்பு)

மே தினத்தை முன்னிட்டு விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

எண்ணாயிரத்துக்கும் மேற்பட்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் கடமைகளில் ஈடுபடுத்தப்படுவார்கள் என்று பொலிஸ் ஊடக பேச்சாளரும் பொலிஸ் அத்தியட்சகருமான பிரசாந்த ஜயக்கொடி தெரிவித்துள்ளார்.

இது தவிர மே தினக்கூட்டங்கள் மற்றும் பேரணிகள் நடைபெறவுள்ள பிரதேசங்களில் விசேட வாகன போக்குவரத்து திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறினார்.

இதேவேளை சுற்றாடலை சுத்தமாக பேணுவது குறித்தும் கவனம் செலுத்தப்பட வேண்டுமென மே தினக்கூட்டங்கள் மற்றும் பேரணிகளில் கலந்துகொள்ளும் மக்களிடம் பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (2-3)

# மருந்தக சோதனை நடவடிக்கையின் போது அபராதப்பணம் அறவீடு

## சுகாதார அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

கடந்த ஆண்டில் தனியார் மருந்தகங்களில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் போது முப்பத்தொரு இலட்சத்து71ஆயிரத்து 300ரூபா அபராதம் அறவிடப்பட்டதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

தேசிய ஔடதங்கள் அதிகார சபையின் அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது இந்த அபராதத் தொகை அறவிடப்பட்டுள்ளது.

அனுமதிப் பத்திரம் இல்லாமல் நடத்திச் செல்லப்பட்ட மருந்தகங்கள் மற்றும் வைத்திய அதிகாரிகளின் சிபாரிசு இன்றி மருந்துப் பொருட்களை விநியோகம் செய்த தனியார் மருந்தகங்களின் உரிமையாளர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

அனுமதி பத்திரங்கள் இல்லாத 69 மருந்தகங்களும் வைத்தியர்களின் ஆலோசனையின்றி மருந்து வகைகளை விநியோகித்த 83 மருந்தகங்களும் கடந்த வருடம் கண்டு பிடிக்கப்பட்டதாக அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (2-3)

# தொழிலாளர் ஓய்வூதியக் கொடுப்பனவு வழக்கு நீதிமன்றில் ஒத்திவைப்பு

(கொழும்பு)

தொழிலாளர்களது ஓய்வூதிய கொடுப்பனவு நிதியம் தொடர்பான சட்ட மூலம் அரசியல் சீர்திருத்தத்திற்கு எதிரானது என தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரதம நீதியரசர் அசோக டி சில்வா தலைமையிலான மூன்று நீதியரசர்களைக் கொண்ட நீதியரசர் குழாம் இந்த விசாரணைகளை நாளை திங்கட்கிழமை வரை ஒத்தி வைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தனியார் ஊழியர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதற்கான சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையில் இதற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை இந்த மனு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி வங்கியின் தொழில் சங்கத்தினால் தாக்கல் செய்யப்பட்டது.(2-3)

# கடும் மழை காரணமாக இரத்தினபுரி மாவட்டத்தில் வெள்ளப்பெருக்கு

## 16 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதிப்பு

(கொழும்பு)

நாட்டின் பல பாகங்களிலும் மழை பெய்யக்கூடும் என காலநிலை அவதான நிலையம் எதிர்வு கூறியுள்ளது.

இதேவேளை நீர்ப்பாசன திணைக்களத்திற்கு கீழ் இயங்கும் 60 குளங்களில் 10 குளங்களது நீர்மட்டம் உயர்ந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு கடும் மழை காரணமாக இரத்தினபுரி மாவட்டம் உள்ளிட்ட மாவட்டங்கள் சிலவற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.


இரத்தினபுரி, களுத்துறை, காலி, மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் கடும் மழை பதிவாகியுள்ளதாகவும் இரத்தினபுரி மற்றும் களுத்துறை மாவட்டங்களிலே வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடும் மழை காரணமாக ஏற்பட்ட அனர்த்தங்கள் காரணமாக மூவர் பலியாகியுள்ளனர்.

அதேவேளை இரத்தினபுரி மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கு காரணமாக அந்த மாவட்டத்தைச் சேர்ந்த 9 பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 16 ஆயிரத்து 606 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில் 56 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் இடம் பெயர்ந்துள்ளனர்.

இதுதவிர இரத்தினபுரி, பாணந்துறை பிரதான வீதியின் போக்குவரத்துக்களுக்கு பாதிப்பு ஏற்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-3)



மயிலணி அண்ணமகேஸ்வரர் ஆலய குருக்கள் சிவஸ்ரீ செந்தில்நாத சுகுமாரன், ஆலய மஹா கும்பாஷேக விஞ்ஞாபனக் கிரியைகளை திறம்பட செய்தமைக்காக ஆலய நிர்வாகம் சார்பாக பிரதிஷ்ட வித்தியாசாகரன் எனும் சிறப்பு பட்டம் வழங்கப்பட்டது. இப்பட்டத்தினைப் ஜோதிட பூஷணம் சிவஸ்ரீ கெங்காதரன் குருக்கள் வழங்குவதை படத்தில் காணலாம்.

# சிங்கப்பூர், இலங்கையிலுள்ள இந்தியன் வங்கி ஒரு பில்லியன் டொலர் கடன் வழங்கவுள்ளது

## பொருத்தமான கடன் திட்டங்கள் குறித்து ஆராய்வதாக யாழ். கிளை முகாமையாளர் கே.சிறிதர் தெரிவிப்பு



இந்திய அரசாங்கத்திற்கு சொந்தமான இந்தியன் வங்கி இலங்கை மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் உள்ள தனது வங்கிக் கிளைகள் மூலம் ஒரு பில்லியன் டொலர் பெறுமதியான கடன் தொகையினை வழங்குவதற்குத் தீர்மானித்திருக்கிறது.

இரண்டு கட்டங்களாக முன்னெடுக்கப்படும் இந்த திட்டத்தின் கீழ் எதிர்வரும் ஐந்தரை ஆண்டு காலப் பகுதியில் இந்தக் கடன்திட்டம் முன்னெடுக்கப்படும் என இந்தியன் வங்கியின் நிறைவேற்றுப் பணிப்பாளர் வி.ராமகோபால் சென்னையில் செய்தியாளர்களிடம் கூறியிருக்கிறார். இந்தத் திட்டம் 3 மாத காலப் பகுதிக்குள் ஆரம்பிக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

103 ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட இந்த வங்கி இலங்கையில் கடந்த 30 ஆண்டுகளாகச் செயற்பட்டு வருகிறது. வேகமாக வளர்ச்சி கண்டுவரும் இந்தியன் வங்கி கடன்தொகை வழங்குவதை அதிகரிக்கும் எனக் கூறப்படுகிறது.

இந்தியன் வங்கியினது இலாபம் மார்ச் 31ஆம் திகதியுடன் முடிபடைந்த 12 மாத காலப் பகுதியில் 10 சதவீதத்தினால் அதிகரித்திருக்கிறது என இந்தியன் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர் ரி.எம். பாசின் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் பொருளாதார அபிவிருத்தியினை நோக்காகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டு வரும் உட்கட்டுமான அபிவிருத்திப் பணிகளுக்காக கடனைப் பெறவேண்டிய தேவை அதிகமுள்ளது.

இலங்கை பொருளாதாரம் 2010ஆம் ஆண்டில் 8 சதவீதம் அதிகரித்துள்ளது. இந்நிலையில் இந்தியாவின் பல முன்னணி நிறுவனங்கள் இலங்கையில் முதலீடுகளைச் செய்து வருகின்றன.

இதேவேளை இவ்விடயங்கள் குறித்து இந்தியன் வங்கியின் யாழ்ப்பாணக் கிளை முகாமையாளர் கே.சிறிதர் வலம்புரிக்கு தகவல் தருகையில்,

இத் திட்டம் குறித் து பூரணமான தகவல்கள் தமக்கு கிடைக்கவில்லை வும் முறைப்படியான தகவல் கிடைத்தும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இந்தியன் வங்கியின் செயல்பாடு எவ்வாறு உள்ளது எனக் கேட்டபோது அவர் தெரிவிக்கையில்,

கடந்த ஜனவரி 23-ம் திகதி யாழ்ப்பாணத்தில் வங்கிக்கிளை ஆரம்பிக்கப்பட்டது. அன்றிலிருந்து வாடிக்கையாளர் எண்ணிக்கை சீரான விகிதத்தில் அதிகரித்து வருகிறது. தற்போது 500இற்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்களைக் கொண்டுள்ளோம். இலங்கை மத்திய வங்கியின் சட்டதிட்டங்களுக்கு ஏற்ப பிறிதொரு இலங்கையின் வங்கி ஒன்றைப் போலவே எமது செயற்பாடுகள் உள்ளன என்றார்.

அத்துடன் இந்தியாவிற்கு பணப் பரிமாற்றங்களை மேற்கொள்ள விரும்புபவர்கள் எமது வங்கியினூடாக ஒப்பீட்டளவில் இலகுவாக மேற்கொள்ள முடியும்.

வங்கி ஒரு திட்டத்தைக் கொண்டுள்ளது. அதாவது தற்போது வங்கிச் சேவை கிடைக்காத ஒரு கிராமத்தைத் தெரிவு செய்து அங்கு ஒரு தொழில் முயற்சி சாத்தியமாக இருக்க வேண்டும். அவ்வாறான கிராமத்தைத் தெரிவு செய்து (தத்தெடுப்பது போல) இத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். அதன் மூலம் அம்மக்களின் வாழ்க்கைத் தரம் உயர வேண்டும். வருமானம் அதிகரிக்க வேண்டும். இதைக் கருத்தில் கொண்டு எமது நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. இன்னும் 3 அல்லது 4 வாரங்களில் இத்திட்டம் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும்.

இது இந்தியாவில் நடைமுறைப்படுத்தி வெற்றிகண்ட முறைமை.

அத்துடன் சமுதாயப் பொறுப்புணர்ச்சியுடன் செயற்படும் வங்கிச் சேவையில், நுண்நிதி கடன் சேவையில் எமது கவனம் தற்போது அதிகளவில் உள்ளது.

மக்களுக்கு சிறு கடன்களைக் கொடுத்து அதன்மூலம் அவர்களுக்கு அதிகப்படியான வருமானத்தை ஏற்படுத்த வேண்டும்.

விவசாயம், மீன்படி, கோழி வளர்ப்பு என எந்த முயற்சியாயினும் சரி அத்திறமை இருந்து அதற்கான நிதி கிடைக்காதவர்களுக்கு கடனுதவி செய்து அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நடவடிக்கையில் வங்கி தற்போது கவனம் செலுத்துகிறது எனவும் அவர் தெரிவித்தார்.





வடக்கு கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்தியை கருத்தில் கொண்டு இலங்கை மத்திய வங்கி மற்றும் முதலீட்டு நிறுவனங்கள் இணைந்து கடன் திட்டமொன்றை அறிமுகப்படுத்தியுள்ளன. 'பிரபோதினி' என்ற இந்த கடன் திட்டத்தை அறிமுகப்படுத்தும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை கொழும்பு மத்திய வங்கி பிரதான அலுவலகத்தில் இடம்பெற்றது. இதன்போது மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் யாழ்ப்பாண மக்களுடன் கலந்துரையாடுவதை படங்களில் காணலாம்.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 109.02 | 110.78 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 180.76 | 185.13 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 160.69 | 165.24 |
| சுவிஸ் பிராங் | 123.65 | 128.13 |
| கனேடிய டொலர் | 113.61 | 117.45 |
| அவுஸ்திரேலிய டொலர் | 117.93 | 121.91 |
| சிங்கப்பூர் டொலர் | 88.24 | 90.90 |
| ஜப்பான் யென் | 1.32 | 1.36 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.48 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 29.90 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி




## ஏப்ரல் பணவீக்கம் 9.8 சதவீதமாக உயர்வு

தொகை மதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களத்தால் கணிக்கப்படும் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணினால் அளவிடப்பட்டவாறான ஏப்ரல் மாத பணவீக்கம் 9.8 சதவீதமாக அதிகரித்துள்ளது. இது 26 மாதங்களின் பின் ஏற்பட்ட உயர் பணவீக்கமாகும்.

அதேவேளை, சர்வதேச சந்தையில் ஒரு பீப்பாய் கச்சா எண்ணெய் 112 அமெரிக்க டொலராக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கம்பியூட்டருக்கு வழிகொடுத்து விடைபெற்றது டைப்ரைட்டர்

உலகின் கடைசி டைப்ரைட்டிங் நிறுவனமான கோத்ரெஜ் அன்ட் பாய்ஸ் மும்பையிலுள்ள தனது உற்பத்தி மையத்தை மூடியுள்ளது. உலகம் முழுவதும் ஒரு காலத்தில், அலுவலகம் மற்றும் வீடுகளில் அதிகளவில் பயன்படுத்தப்பட்ட டைப்ரைட்டிங், கம்பியூட்டரின் வருகையால் கணிசமாக குறைந்தது. மேற்கத்திய நாடுகளில் 10 ஆண்டுகளுக்கு முன்பே ,தட்டச்சு காணாமல்போனது. இந்தியா மற்றும் இலங்கையில் டைப் ரைட்டிங் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வருகிறது. இதையடுத்து தட்டச்சு தயாரிப்பு நிறுவனங்கள் பல மூடப்பட்டன. இந்நிலையில் உலகின் கடைசி டைப்ரைட்டிங் தயாரிப்பு நிறுவனமாக இருந்த கோத்ரெஜ் அன்ட் பாய்ஸ் நிறுவனமும் வேறு வழியின்றி தனது உற்பத்திப் பிரிவை மூடியுள்ளது.

## ஆப்பிள் மீது சாம்சங் வழக்கு

தனது தயாரிப்புக்களை பிரதியடிப்பதாக ஆப்பிள் நிறுவனம் வழக்குத் தொடர்ந்த சில மணி நேரத்தில் பதிலடியாக அதே குற்றச்சாட்டில் ஆப்பிள் மீது சாம்சங் வழக்குத் தொடர்ந்துள்ளது.

அமெரிக்காவைச் சேர்ந்த ஆப்பிள் நிறுவனம் ஸ்மார்ட்போன் உயர் தொழில்நுட்ப கைத்தொலைபேசித் தயாரிப்பில் பிரபலம். இந்நிலையில் இதற்கு இணையான தொழில்நுட்பத்துடன் ஸ்மார்ட்போன்களை கொரியாவின் சாம்சங் நிறுவனம் வேகமாக அறிமுகம் செய்துவருகிறது.

## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 7356.97 | 7456.82 ⇧ |
| மிலங்கா விலைச்சுட்டி | 6822.77 | 6947.11 ⇧ |

விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) 8,267.6

*உயர்வடைந்த பங்குகள்(ரூ.):* செரண்டிப் லாண்ட்(1350.00), பரஹன்(1900.00), லங்கா அசோக்.(6000.00), ஹரிச்சந்திர(2181.30), பேருவள வோலக்இன்(239.50).

*சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):* லங்கீம் டெவலப்.(30.90), பியூப்பிள்ஸ் லீசிங் பைன்.(47.40), சிங்கலங்கா(1026.40), சம்சன் இன்ரனட்(110.30), ஹலமசு(2000.00).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

## வியாபாரம் செய்யும் வழிகாட்டி நூலை ம.வங்கி வெளியிட்டது

இலங்கை மத்திய வங்கி 'இலங்கையில் வியாபாரத்தினை மேற்கொள்வதற்கான படிப்படியான வழிகாட்டல்' என்ற பெயரிலான வெளியீட்டின் திருத்தப்பட்ட பதிப்பினை வெளியிட்டுள்ளது.

இந்நூலானது, தொழில் முயற்சியாளர் ஒருவர் வியாபாரத்தினை தொடங்கி அதன் தொழிற்பாடுகளை மூடிவிடுவதுவரையிலுள்ள வெவ்வேறு கட்டங்களில் அவர் மேற்கொள்ள வேண்டிய அனைத்து முக்கியமான நடவடிக்கை தொடர்பான தகவல்களையும் கொண்டுள்ளது.

வியாபரத்தினை பதிவு செய்தல், முதலீட்டு சபை ஒப்புதலைப் பெற்றுக் கொள்ளல், சொத்தினைப் பதிவு செய்தல், பூர்வாங்க திட்டமிடல் அங்கீகாரச் சான்றிதழைப் பெற்றுக் கொள்ளல், ஊழியர் சேமலாப நிதியம், ஊ.ந.நிதியம் ஆகியவற்றை செலுத்துதல், பொது மக்களுக்கு பங்குகளை வழங்குதல், ஏற்றுமதி, இறக்குமதி மேற்கொள்ளல் போன்ற முக்கிய நடவடிக்கைகளுடன் தொடர்புடைய 28 தலைப்புகளின் கீழ் தொகுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் வர்த்தக நடவடிக்கைகளுக்கு தேவையான மேலும் பல தகவல்களையும் இந்நூல் உள்ளடக்கியுள்ளது. இதன் பிரதி ஒன்றின் விலை 500 ரூபாயாகும்.

### ஆண்டறிக்கை


இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்பட்ட 2010ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கையை வங்கியின் யாழ்ப்பாணத்திலுள்ள வடமாகாண அலுவலகத்தில் நாளை மறுதினத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம் என மத்திய வங்கி வட்டராங்கள் தெரிவித்தன.

## சம்பத் வங்கி கடந்த வெள்ளி 10 கிளைகள் திறப்பு

சம்பத் வங்கி கடந்த வெள்ளிக்கிழமை திருநெல்வேலி உட்பட நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் மொத்தமாக 10 கிளைகளை ஒரே நாளில் திறந்து வைத்து இலங்கை வங்கித்துறை வரலாற்றில் ஒரு மைல்கல்லை பதிவுசெய்தது. இதன்படி வங்கியின் கிளைகள் எண்ணிக்கை தற்போது 188 ஆக அதிகரித்துள்ளது.

இக்கிளைகள் ஏ.ரி.எம்., ஈ-வங்கி வசதிகள் உட்பட முழுமையான வங்கியியல் சேவைகளை வழங்கும் அத்துடன் சமூகப் பொறுப்புணர்வு திட்டத்தின் கீழ், தனது கிளைகள் அமைந்திருக்கும் பகுதிகளின் அபிவிருத்தியில் சம்பத் வங்கி பங்களிப்பை வழங்கும் என வங்கி தெரிவித்துள்ளது.

# எது புனிதத்தலம்?



## ஆன்மீகம் 05

எனவே 'துறவு' என்று நாம் சொல்லும்போதும் 'ஆசிரமத்தில் வாழ்வது' என்று நாம் சொல்லும் போதும் எல்லாவற்றையும் விட்டு விட்டீர்கள் என்று பொருள் அல்ல. வாழ்வின் ஒவ்வொரு அம்சத்திலும் அதேதீவிரத்தோடு அதேபுனிதத் தன்மையோடு ஈடுபடக்கூடிய தகுதியுடையவர் என்றே பொருள்.

இதற்கு இரண்டு வழிகள் உள்ளன. ஒவ்வொன்றையும் முழு முட்டாள்தனமானவை என்று பார்ப்பது அல்லது ஒவ்வொன்றையும் புனிதமாகப் பார்ப்பது. ஒன்றைப் புனிதமென்றும் மற்றொன்றை முட்டாள்தனம் என்றும் பார்க்கும்போது நீங்கள் அனைத்தையும் தவறவிடுகிறீர்கள். ஒவ்வொன்றையும் முழு முட்டாள்தனம் என்றும் ஒவ்வொருவரையும் முழுமுட்டாள்களாகவும் நீங்கள் பார்த்தீர்கள் என்றால் பின்னர் நீங்கள் மக்கள் மத்தியில் வாழமாட்டீர்கள். அது ஒரு வழி. அல்லது ஒவ்வொன்றையும் ஒவ்வொருவரையும் புனிதமாகப் பார்ப்பது. அது மற்றொரு வழி. ஆனால், இந்த வழியில் நீங்கள் மக்கள் மத்தியில் வாழமுடியும். ஒன்று உங்கள் உடல் மற்றும் உங்கள் மனம் உட்பட எதனோடும் முழுமையாக ஈடுபடுவதில்லை அல்லது நீங்கள் ஒவ்வொன்றுடனும் எந்தப் பாகுபாடுமின்றி முழுமையாக ஈடுபடுகிறீர்கள். இந்த இரண்டு வழியுமே அற்புதமாக வேலைசெய்யும். ஆனால் தற்போதைக்கு உங்கள் மனநிலையையும் நீங்கள் வாழும் சமூக சூழ்நிலையையும் பார்க்கும்போது ஒவ்வொன்றையும் முட்டாள்தனம் என்று பார்ப்பதைவிட ஒவ்வொன்றையும் புனிதமாகப் பார்ப்பதே சிறந்தது.

இரண்டுமே உண்மையானவை. இரண்டுமே அற்புதமானவழிகள். ஆனால் எதற்கு நாம் தயாராக இருக்கிறோமோ அதைத்தான் நாம் தேர்ந்தெடுக்கவேண்டும் இல்லையா? ஒவ்வொன்றையும் முழுமுட்டாள்தனம் என்று நீங்கள் பார்த்தால் பின்னர் எதனோடும் உங்களுக்கு ஈடுபாடு இருக்காது. உங்கள் உடல், உங்கள் மனம் மற்றும் உங்கள் உணர்ச்சி ஆகியவற்றுடன் கூட உங்களுக்கு ஈடுபாடு இருக்காது. எதற்கும் முக்கியத்துவம் தரமாட்டீர்கள் அல்லது பிரபஞ்சத்தில் உள்ள ஒவ்வொன்றுக்கும் மிகுந்த முக்கியத்துவம் தருவீர்கள். மண்ணுக்கும் வைரத்திற்கும் வேறுபாடு பார்க்கமாட்டீர்கள். இரண்டு விழிகளிலும் அது வேலை செய்கிறது. ஆனால் ஆசிரமத்தில் ஒவ்வொன்றையும் புனிதமாகப் பார்க்கும் வழியைத்தான் நாங்கள் தேர்ந்தெடுக்கிறோம். ஏனெனில் மக்களுடன் சேர்ந்துவாழ அதுதான் சிறந்தவழி.

எனவே துறவு என்பது உங்களுக்கு வசதியில்லாததை விட்டுவிடுவதல்ல. எப்படியும் முழுஉலகமும் அதைத்தான் செய்கிறது இல்லையா? முழு உலகமும் தங்களுக்கு வசதியில்லாததை விட்டுவிட விருப்பம் கொள்கிறது. தான் விரும்பாததை ஒவ்வொருவரும் துறக்கிறார். ஒவ்வொருவரும் தனக்கு வசதியில்லாததை தனக்கு முக்கியமற்றதை தன் வாழ்க்கையில் அர்த்தமற்றதைத் துறந்துவிடுகிறார். இப்படிச் செய்வது ஆன்மீகத்தைப் பொறுத்தவரையில் எந்த அர்த்தமும் இல்லாதது.

ஒரு முறை இங்கு நுழைந்து விட்டால் இரண்டு நாட்களுக்கு மட்டும் என்னுடன் உட்கார்ந்தாலும் சரி அல்லது மீதி உள்ள உங்கள் வாழ்க்கை முழுவதும் என்னுடன் உட்கார்ந்தாலும் சரி நீங்கள் தவறு செய்துவிட்டீர்கள். நீங்கள் என்னுடன் உட்காரும் தவறைச் செய்துவிட்டால், பிறகு நீங்ளகள் ஆன்மீகப் பாதையில் இருக்கிறீர்கள். விருப்பத் துடனும் ஆனந்தத்துடனும் வரலாம். அல்லது அழுது கொண்டும் புலம்பிக்கொண்டும் வரலாம். எப்படி



யும் நாம் உங்களை இழுத்துக் கொண்டு போவோம். நீங்கள் ஆனந்தத்துடன் வருவது அனைவருக்கும் நல்லது. நீங்கள் அப்படி வருவது உங்களைச் சுற்றியுள்ள அனைவருக்கும் இனிமை பயப்பதாக இருக்கும். ஆனால் நீங்கள் புலம்பக்கூடியவராக இருந்தாலும் நாங்கள் உங்களைப் பொறுத்துக் கொள்வோம். ஆனால் உங்களை இழுத்துக்கொண்டு செல்ல வேண்டியிருக்கும்.

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

(தொடரும்)

# இலங்கையில் ஊடகவியல் கல்விப் போக்கும் நோக்கும்

**04**

வெகுஜன ஊடகத்துறையானது உலகளாவிய ரீதியில் தமக்கெனத் தனித்துவமான இடத்தினை பெற்றிருப்பதோடு பல்வேறுபட்ட துறைகளிலும் தனது செல்வாக்கினைச் செலுத்தியும் வருகின்றது. இதன் காரணமாக அதன் போக்குகளும் தன்மைகளும் சமூகத்தில் நேரடியாகவும் மறைமுகமாகவும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றது. ஆகவே மக்கள் உகந்தவற்றைப் பின்பற்றவும் ஏனையவற்றை அதன் தன்மைகளுக்கேற்ப ஏற்றுக்கொள்ளவும் அல்லது புறந்தள்ளவும் தெரிந்து கொள்ளவேண்டிய நிலையில் உள்ளனர்.

விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக புதிய பரிமாற்றம் பெற்றுவரும் வெகுஜன தொடர்பு சாதனங்கள், மக்கள்மீது தமது வீச்சை பாரியளவில் செலுத்தி வருகின்றன. அதனால் மக்களின் பார்வைகளையும் கருத்துக்களையும் வடிவமைப்பதில் பாரிய தாக்கத்தை இவை ஏற்படுத்துகின்றன. உலகைப் பற்றிய தகவல்களை அளிப்பதோடு நிறுத்திக் கொள்ளாமல் உலகை எப்படிப் பார்க்கவேண்டும் புரிந்து கொள்ளவேண்டும் என்பதையும் இவை சொல்கின்றன.

வெகுஜன தொடர்பு சாதனங்கள் மக்களுக்காக நிகழ்வுகளை, கலை பண்பாட்டுஅம்சங்களை, நடையுடை பாவனைகளை, தேர்ந்தெடுத்துத் தருகின்றன. வெகுஜன தொடர்பு சாதனங்கள் எவற்றை தேர்ந்தெடுக்கின்றன, எவற்றை விலக்கிவிடுகின்றன என்பதன் மூலம் எவை முக்கியமானவை, எவை முக்கியமற்றவை என்பதை மக்களுக்குத் தெரிவிக்கின்றன. இதன் வலுவான சக்தி நிகழ்வுகளை மக்கள் பார்க்கும் விதத்தை மட்டுமல்ல நிகழ்வுகளைக் கூட மாற்றி விடுகின்றன.

பலருக்குத் தொடர்பு சாதனங்கள்

> **"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"**

அங்கீகரிக்கும் விடையங்கள்தான் நிஜமாகத் தோன்றுகின்றன. தொடர்பு சாதனங்கள் ஒதுக்கி விடுபவைகளை மக்களும் கண்டு கொள்வதில்லை. அதனால் இவை மக்கள்மீது செல்வாக்குச் செலுத்துவதோடல்லாமல் அவையே மக்களின் கலாசாரமாகவும் மாறும் நிலை உருவாகியள்ளது.

மேற்குறித்த நோக்கங்களையும் பணிகளையும் இவை பிரதானமாக கொண்டிருக்கின்ற போதிலும் தமது செயற்பாட்டு இடம் மற்றும் சூழல் என்பவற்றுக்கு ஏற்ப இவற்றின் செயற்பாடுகள் சில மாற்றமுறும். அதேபோன்று இவற்றின் மீது பல்வேறுபட்ட தரப்புகளின் சார்புநிலை மற்றும் தணிக்கை என்பனவும் செல்வாக்குச் செலுத்துகின்றன.

### உலகளவில் ஊடகக்கல்வி

ஊடகங்களின் நோக்கமும் பணியும் பற்றி ஆராய்கையில் அவை மனித சிந்தனை, மனித வாழ்வியல் ஆகியவற்றின் சகலமட்டங்களிலும் தமது பாரிய தாக்கத்தை ஏற்படுத்துவதனை அறிய முடிகிறது. இந்நிலையில் ஊடகக்கல்வி என்பது சமூக அறிவியல், கலையியல், தொல்நுட்பம் ஆகியவற்றுடனான மனித ஊடாட்டங்கள் கொண்டமைந்த தகவல் தொடர்பியல்சார் ஊடகங்களின் பன்முகப்பட்ட கல்விமுறையாகும்.

அந்த வகையில் இது மக்கள் தொடர்பியல் சார்ந்த துறைகளான சமூகவியல்,மானிடவியல், உளவியல், அரசறிவியல், மொழியியல், கல்வியியல், கலையியல், அறிவியல், தொழிநுட்பம் தொடர்பான பல துறைகளையும் தொடர்புபடுத்திய கல்விமுறை என்பது தெளிவான தொன்றாகும்.

ஆகவே ஊடகக் கல்வி பற்றி அறிய முற்படும்போது மேற்சொன்ன கல்வித்துறைகளும் தொடர்புபடுத்திப் பார்க்கப்பட வேண்டியது கட்டாயமானதாகும் அதுமட்டுமன்றி ஊடகக்கல்வி என்பதும் இவற்றிலிருந்துதான் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

மேற்சொன்ன கல்வித் துறைளில் காணப்படும் தகவல் தொடர்பியல் தொடர்பான விடயங்களைப் பற்றி பல அறிஞர்கள் ஆய்வுகளை மேற்கொண்டுள்ள போதிலும் தகவல்தொடர்பியல்

**எஸ். மோசேஸ்**

என்பதனை தனியொரு துறையாக்கி அதற்கென தனியொரு இடத்தினை உருவாக்கியவர் 'வில்பர்ஸ்ரேம்' எனும் அறிஞரேயாவார். எனவே இவரே ஊடகக்கல்வியின் பிதா எனவும் சொல்லப்படுகிறார். (இது தொடர்பான ஆய்வுகள் மேலும் செய்யப்பட்டு வருகின்றன. ஆய்வுகளின் அடிப்படையில் இக்கருத்து மாற்றமடையலாம்.

(தொடரும்)

# கொழும்பிலுள்ள வெளிநாட்டுத் தூதுவர்களுடன் அமெரிக்கத் தூதுவர் இரகசிய சந்திப்பு

(கொழும்பு)

**ஐ.நா.வின் நிபுணர்குழு அறிக்கை தொடர்பாக கொழும்பிலுள்ள வெளிநாட்டுத் தூதுவர்கள் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் அமெரிக்கத் தூதுவர் இரகசியமான முறையில் ஆலோசனை நடத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.**

இச்சந்திப்பு நேற்று முன்தினம் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதுவர் பற்றீசியா புட்டினீஸ் அதிகாரபூர்வ வதிவிடத்தில் இடம்பெற்றுள்ளது. ஆனால், இச்சந்திப்பு இடம்பெற்றது தொடர்பில் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் உறுதிப்படுத்தவோ மறுக்கவோ இல்லை.

அத்துடன் அமெரிக்கத் தூதுவரின் சந்திப்புக்கள் அல்லது அதில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் என்பன கொள்கை சார்ந்தவை என்பதனால் அதுபற்றி கருத்து வெளியிட முடியாது என்று அமெரிக்கத் தூதரக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கத் தூதுவர் பற்றீசியா புட்டினீஸின் அழைப்பின் பேரிலேயே இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளதாக தேசிய சமாதானப் பேரவையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜெஹான் பெரேரா உறுதிப்படுத்தியுள்ளார்.

இந்தியா, பிரித்தானியா, ஐரோப்பிய ஒன்றியம், நெதர்லாந்து, பிரான்ஸ், கனடா, அவுஸ்திரேலியா, ஐ.நா, ஜப்பான், நோர்வே, தென்னாபிரிக்கா, தென்கொரியா, சுவிற்ஸர்லாந்து, இத்தாலி ஆகிய நாடுகளின் முக்கிய தூதுவர்கள் இந்த இரகசிய சந்திப்பில் கலந்து கொண்டுள்ளனர். அத்துடன் உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்கள் சிலவற்றின் முக்கிய பிரமுகர்களும் இந்தச் சந்திப்புக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

ஐ.நா.வின் போர்க்குற்ற அறிக்கை தொடர்பாகவும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு இந்த அறிக்கையை எவ்வாறு ஒரு கருவியாகப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பது பற்றியும் இதில் கலந்துரையாடப்பட்டதாகவும் ஜெஹான் பெரேரா தெரிவித்தார்.

வெளிநாட்டுஇராஜதந்திரிகளுடன் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து, செரின் சேவியர், வெலியமுன, சுதர்சன குணவர்த்தன, சுனிலா அபேசேகர ஆகியோரும் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (2)

# தெய்வீகப் பேருரை

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் தெற்கு அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் ஆலயத்தில் வருடாந்த அலங்கார உற்சவப் பெருவிழா கடந்த 20 ஆம் திகதி ஆரம்பமாகி எதிர்வரும் மே மாதம் 4 ஆம் திகதி வரை தொடர்ந்து 14 தினங்கள் நடைபெற்று வருகின்றது.

இவ் உற்சவ காலங்களில் தினமும் மாலை 6 மணிமுதல் 7 மணிவரை ***தேவி மகத்துவம்*** எனும் தலைப்பில் தொடர் தெய்வீகப் பேருரையினை ஸ்ரான்லிக் கல்லூரி ஆசிரியர் மதுரகவி காரை எம்.பி. அருளானந்தன் நிகழ்த்தி வருகின்றார். (2)

# புலம்பெயர் தமிழர்களையும் அரச சார்பற்ற அமைப்புக்களையும் தனது வழிக்குக் கொண்டுவர வெளிவிவகார அமைச்சு முயற்சி

(கொழும்பு)

அரசாங்கத்துக்கு எதிராக புலம்பெயர் தமிழர்களையும் அரச சார்பற்ற அமைப்புக்களையும் தனது வழிக்குக் கொண்டு வருவதற்கான இராஜதந்திர நடவடிக்கைகளை வெளிவிவகார அமைச்சு முன்னெடுத்துள்ளது.

அதற்காக வெளிவிவகார அமைச்சின் கீழ் இரண்டு பிரிவுகள் புதிதாக உருவாக்கப்பட்டுள்ளன.ஒரு பிரிவு புலம்பெயர் தமிழர்களை அரசாங்கத்தின் பக்கம் ஈர்த்தெடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதுடன் இரண்டாவது பிரிவு இலங்கை அரசாங்கத்தின் தவறுகளை அனைத்துலக மட்டத்திற்கு கொண்டு செல்லும் அரச சார்பற்ற நிறுவனங்களை சமரசப்படுத்தும் முயற்சிகளை இராஜதந்திர மட்டத்தில் மேற்கொள்ளவுள்ளது.

அதன்மூலம் இலங்கை அரசாங்கத்துக்கு எதிரான சர்வதேச பரப்புரைகளை ஓரளவுக்கேனும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விட முடியும் என அந்த அமைச்சு எதிர்பார்க்கின்றது.

மேற்படி இரண்டு பிரிவுகளுக்கும் இலங்கையின் வெளிநாட்டுச் சேவையில் மிகுந்த அனுபவம் வாய்ந்த முன்னாள் இராஜதந்திரிகள் விசேட ஏற்பாடுகளின் கீழ் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர். (6)

# நிபுணர் குழு அறிக்கைக்கு எதிராக ஐரோப்பிய நகரங்களில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் நிபுணர் குழு அறிக்கைக்கு எதிராக ஐரோப்பிய நகரங்களில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்க வெளிநாட்டமைச்சின் மூலம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

ஐரோப்பிய நகரங்களில் வாழும் இலங்கையரை ஒன்று திரட்டி ஐக்கிய நாடுகள் நிபுணர் குழுவின் அறிக்கைக்கு எதிராக பாரிய ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்வதன் மூலம் அந் நாடுகளை இலங்கை அரசாங்கத்திற்குச் சாதகமாகத் திருப்பிக் கொள்ள முடியும் என்று இலங்கை அரசாங்கம் நம்புகின்றது.

அதன் ஒரு கட்டமாக வெளிநாட்டமைச்சின் இராஜதந்திரிகள் மூலமாக அதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு பணித்துள்ளதுடன் அரசாங்கத்திற்கு அதில் தொடர்பில்லாதிருப்பது போன்று காட்டிக் கொள்வதற்கும் பணிப்புரைகள் விடுவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் மே மாதம் 14,15 ஆம் திகதிகளில் பிரஸ்தாப ஆர்ப்பாட்டங்கள் ஐரோப்பாவின் சில நகரங்களில் முன்னெடுக்கப்படவுள்ளன. அதன் முதற்கட்ட கலந்துரையாடல்கள் நேற்று இத்தாலியிலுள்ள இலங்கைத் தூதரகத்தில் நடைபெற்றதுடன் ஜனாதிபதியின் முன்னாள் ஊடகப் பணிப்பாளர் சந்திரபால லியனகே அதனை முன்னெடுத் திருந்தார். (2-6)

# வடக்கு - கிழக்கு பிரதேசங்களில் தொல்பொருள் ஆராய்ச்சி முன்னெடுப்பு

(கொழும்பு)

வடக்கு- கிழக்குப் பிரதேசங்களில் உள்ள தொல்பொருட்கள் காணப்படும் இடங்கள் பற்றிய தகவல்களைத் திரட்டும் பணிகள் முடிவடைந்தவுடன் அது தொடர்பிலான ஆராய்ச்சிகள் முன்னெடுக்கப்படும் என தேசிய மரவுரிமைகள் அமைச்சர் கலாநிதி ஜகத் பாலசூரிய தெரிவித்துள்ளார்.

இரண்டு மாகாணங்களிலும் தொல்பொருட்கள்காணப்படும் இடங்கள் தொடர்பிலான தகவல்களை பட்டியலிடும் பணிகளுக்கு தேசிய மரவுரிமைகள் அமைச்சுக்கு ஒத்துழைப்பு வழங்க கனேடிய பல்கலைக்கழகமொன்று இணக்கம் தெரிவித்துள்ளது.

இந்த நடவடிக்கையுடன் தொல்பொருள் ஆராய்ச்சித் திணைக்களமும் இணைந்துள்ளது.

கனேடிய பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் உள்ளிட்ட குழுவினர் இலங்கையின் தொல்பொருள் அமைந்துள்ள இடங்களை பார்வையிட்டதன் பின்னர் தேசிய மரபுரிமைகள் அமைச்சருடன் இது தொடர்பில் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளனர்.

இதன்போது கனடாவிலும் இலங்கையிலும் தொல்பொருள் பிரிவில் உயர் கல்வியைத் தொடரும் மாணவர்களின் பங்களிப்பை இந்த திட்டத்திற்கு பெற்றுக் கொள்வதென தீர்மானிக்கப்பட்டுள்ளதோடு வடக்கு-கிழக்கு மாகாணங்களில் தொல்பொருள் ஆராய்ச்சி நடவடிக்கை அடுத்த வருடம் மேற்கொள்ளப்படவுள்ளது. (2-3)

# ஐ.நா.நிபுணர் குழு அறிக்கைக்கு எதிராக இரத்தத்தில் கையொப்பமிடும் போராட்டம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் நிபுணர் குழு அறிக்கைக்கு எதிர்ப்பு வெளியிடும் வகையில் பொதுமக்கள் தொடர்பு அமைச்சர் மேர்வின் சில்வா இரத்தத்தில் கையொப்பமிடும் போராட்டமொன்றை ஆரம்பித்துள்ளார்.

களனி ரஜமஹா விஹாரையில் இந்த எதிர்ப்பு போராட்டம் நடைபெற்றது.

அமைச்சர் மேர்வின் சில்வாவின் புதல்வர் மாலக சில்வா, அனர்த்த நிவாரண பிரதி அமைச்சர் துலிப் விஜேசேகர, கம்புருகமுவ வஜிர தேரர் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

இரத்தத்தைக் கொண்டு கையொப்பமிடும் இந்தப் போராட்டத்திற்கு மருத்துவப் பணியாளர்கள் ஒத்துழைப்பு வழங்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்தோடு இரத்தத்தைக் கொண்டு கையொப்பமிட்டு எதிர்ப்பை வெளியிடும் இந்தப் போராட்டம் கம்பஹா மாவட்டம் முழுவதிலும் மேற்கொள்ளப்படவுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

இதற்காக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ள எதிர்பார்ப்பதாக அமைச்சர் தெரிவித்துள்ளார். (2-3)

# தொழிலாளர்களின் உரிமைகளை அடக்குமுறை செய்ய அரசு முயற்சி

## எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

தொழிலாளர்களின் உரிமைகளை அடக்குமுறைக்கு உட்படுத்துவதற்கு அரசாங்கம் முயற்சித்து வருவதாக எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

உழைக்கும் வர்க்கத்தின் உரிமைகளுக்காக பாடுபடக்கூடிய ஓர் அரசாங்கத்தை உருவாக்குவதற்கு அனைத்து தொழிலாளர்களும் அணிதிரள வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

உலகத் தொழிலாளர் தினத்தை முன்னிட்டு எதிர்க்கட்சித் தலைவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் இந்த விடயங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

ஊழியர் சேமலாப நிதி மற்றும் நம்பிக்கை நிதி ஆகியவற்றைப் பயன்படுத்தி ஊழியர்களுக்கு ஓய்வூதியம் வழங்க அரசாங்கம் முயற்சித்து வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான அடக்குமுறைகளை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

கோதுமை மாவின் விலை உயர்வினால் பெருந்தோட்டத்தொழிலாளர்கள் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

சம்பள உயர்வு வழங்குவதனை அரசாங்கம் மறந்து விட்டதாக அவர் தெரிவித்துள்ளார். (2)


மலேசியா

தமிழ் பேசும் பெண்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு

மலேசியாவில் உள்ள தமிழ் VIP வீடுகளுக்கு தமிழ் பேசும் பணிப் பெண்கள் தேவை

மாதாந்த சம்பளம் RM 850
இலங்கைப் பெறுமதிக்கு ரூபா. 28,000

* கடவுச்சீட்டு (Passport) - இலவசம்
* மெடிக்கல் (Medical) - இலவசம்
* இன்சூரன்ஸ் (Insurance) - இலவசம்
* விமான டிக்கட் (Air Ticket) - இலவசம்
* தங்குமிடவசதி (Accomodation) - இலவசம்
* உணவு (Food) - இலவசம்
* 2 வருட கால ஒப்பந்தம் (2 Years Contract)

பாஸ்போட் இல்லாதவர்கள் உரிய ஆவணங்கள் கொடுத்தால் இலவசமாக பாஸ்போட் செய்து தரலாம் - முற்றும் இலவசம்

Labour Licence No. 2516
GOODLINE MANPOWER SERVICES
38/3, (3rd Floor), Symonds Road, Maradana, Colombo-10.
Tel : 011 3091521 Hotline : 077 3179592

## ஐ.நா.நிபுணர்குழுவின் அறிக்கையை வைத்து தலைவர்களை கைது செய்யலாம்

### விஜேதாச ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் நிபுணர் குழுவின் அறிக்கையினைக் கொண்டு இலங்கைத் தலைவர்களை கைது செய்ய முடியும் என ஜனாதிபதி சட்டத்தரணி விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் நிபுணர் குழுவின் அறிக்கையினைத் தயாரித்தவர்கள் அதிகாரங்கள் இல்லாதவர்களாக இருக்கலாம். ஆனால் அறிக்கை மிகவும் சக்திவாய்ந்ததொன்றாக இருக்கிறது.


இந்த அறிக்கையினைக் கொண்டு வெளிநாடுகளில் உள்ள மனித உரிமை அமைப்புகள், உள்ளூர் நீதிமன்றங்களின் உதவியுடன் பிடியாணை பிறப்பிக்க முடியும்.

அவ்வாறு பிடியாணை பிறப்பித்தால் இலங்கையின் அரசியல் தலைவர்கள், மூத்த அமைச்சர்கள், அதிகாரிகள் என்போர் வெளிநாடுகளுக்கு செல்லும்போது கைது செய்யப்படலாம். அதற்கான சக்தியினை நிபுணர்குழுவின் அறிக்கை கொண்டுள்ளது என்று விஜேதாச ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில் எதிர்காலத்தில் இலங்கையின் அரசியல் தலைவர்கள், அதிகாரிகளுக்கு வெளிநாடு செல்வது சவாலான தொன்றாகவே காணப்படும் என்றும் பிபிசி சிங்கள சேவைக்கு அவர் மேலும் தெரிவித்தார். (2)

## யுத்தம் நடைபெறுமிடத்தில் மக்கள் கொல்லப்படுவது சாதாரண விடயம்

### டியூ குணசேகர கூறுகிறார்



(கொழும்பு)

யுத்தமொன்று நடைபெறும்போது சாதாரண மக்களும் கொல்லப்படுவது சாதாரணமான ஒரு விடயம் என மனிதவள மற்றும் சிரேஷ்ட அமைச்சர் டியூ குணசேகர குறிப்பிடுகின்றார்.

இலங்கை வரலாற்றை எடுத்துப் பார்த்தால் முதலாம், இரண்டாம், மூன்றாம் ஈழப் போரின் போதும் 71 ஆம் மற்றும் 88, 89 ஆம் ஆண்டுகளிலும் மக்கள் கொல்லப்பட்டதாக குறிப்பிடும் அமைச்சர், ஆனால் நடைபெற்று முடிந்த நான்காம் கட்ட ஈழப் போரின் போது மக்கள் கொல்லப்பட்ட மையை சர்வதேசம் தூக்கி பிடித்துக் கொண்டு பிரச்சினையை ஏற்படுத்துவதாகவும் தெரிவிக்கின்றார்.

தற்போது பல அழுத்தங்களைக் கொடுக்கும் சர்வதேசமோ ஐ.நா.வோ சர்வதேச ஊடகமோ ஏன் உள்நாட்டு ஊடகமோ 88 ,89 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற மனித படுகொலைகளின் போது வாய்திறக்காமல் மௌனமாக இருந்ததாகவும் அவர்குறிப்பிட்டார்.

உலகத்திலேயே மிகவும் கொடிய பயங்கரவாத அமைப்பாக கருதப்பட்ட விடுதலைப் புலிகள் அமைப்பு ஐ.நா.குழு சமர்ப்பித்துள்ள அறிக்கையின் படி உலகத்தில் மிகவும் கண்ணியமான போராட்ட அமைப்பாக நற்பெயர் பெற்றுள்ளதாக புனரமைப்பு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சில் நடைபெற்ற வைபவத்தில் கலந்து கொண்டபோதே சிரேஷ்ட அமைச்சர் டியூ குணசேகர இவ்வாறு தெரிவித்தார். (2)

## மஹா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

மாதகல் சம்பில்த்துறை ஸ்ரீ நரசிங்க சித்தர் சம்பு நாதேஸ்வரர் தேவஸ்தான மஹாகும்பாபிஷேகம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெறும். (6)

## ஊழியர் ந. நிதிய உறுப்பினர்களின் பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில்

### ஜனாதிபதியால் நேற்று கையளிப்பு

(கொழும்பு)

2010 ஆம் ஆண்டின் 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபையின் உறுப்பினர்களின் பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு நேற்று அலரி மாளிகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் இடம்பெற்றது.

5 ஆம் ஆண்டு புலமைப் பரீட்சையில் மாவட்ட அடிப்படையில் அதிக புள்ளிகளைப் பெற்ற ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபையின் உறுப்பினர்களின் பிள்ளைகள் 5ஆயிரம் பேர் புலமைப்பரிசில் பெறுவதற்கு தகைமை பெற்றுள்ள அதேநேரத்தில் 400 பேர் ஜனாதிபதியிடம் புலமைப் பரிசில்களை பெற்றுக் கொண்டனர்.

புலமைப் பரிசில் பெறுகின்ற ஒரு பிள்ளைக்கு 15 ஆயிரம் ரூபா பணம் வழங்கப்படுகின்ற அதேநேரத்தில் இத்தொகை மக்கள் வங்கியில் சிசு உதான கணக்கில் வைப்பிலிடப்படும்.

ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபையின் உறுப்பினர்களின் பிள்ளைகளை ஊக்குவிக்கும் நோக்கில் 1994 ஆம் ஆண்டில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தொழில் அமைச்சராக இருந்தபோது இப் புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. (ஸ்ரீ-2)

## 2011.05 01 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★1328- ஸ்கொட்லாந்தைத் தனிநாடாக இங்கிலாந்து அங்கீகரித்தது. ஸ்கொட்லாந்து விடுதலைப் போர் முடிவுக்கு வந்தது.

★1707- இங்கிலாந்து மற்றும் ஸ்கொட்லாந்து இணைக்கப்பட்டு பெரிய பிரித்தானியா என்ற ஒரு நாடாகியது.

★1778- அமெரிக்கப் புரட்சி பென்சில்வேனியாவின் ஹாட்பரோ என்ற இடத்தில் பிரித்தானியப் படையினர் பென்சில்வேனியா துணை இராணுவத்தினர் மீது திடீர்த் தாக்குதலை நிகழ்த்தி 26 பேரைக் கொன்று 58 பேரைக் கைது செய்தனர்.

★1834- பிரித்தானியக் குடியேற்ற நாடுகள் அடிமைத் தொழிலை நிறுத்தின.

★1840- உலகின் முதலாவது அதிகாரபூர்வ ஒட்டக்கூடிய தபால்தலை பென்னி பிளாக் ஐக்கிய இராச்சியத்தில் வெளியிடப்பட்டது.

★1851- லண்டனில் பெரும் பொருட்காட்சி விக்டோரியா மகாராணியினால் திறந்து வைக்கப்பட்டது.

★1886- ஐக்கிய அமெரிக்காவில் 8 மணிநேர வேலை நாளை அறிவிக்க வேண்டி வேலைநிறுத்தம் ஆரம்பமானது. இந்நாள் பின்னர் மே நாள் எனவும் தொழிலாளர் நாள் எனவும் உலகெங்கும் கொண்டாடப்பட்டு வருகிறது.

★1891- பிரான்சில் தொழிலாளர்களின் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தின்போது படையினர் சுட்டதில் 9 பேர் கொல்லப்பட்டு 30 பேர் காயமுற்றனர்.

★1898- அமெரிக்கக் கடற்படையினர் மணிலா விரிகுடாவில் ஸ்பானிய கடற்படைக் கப்பலை தாக்கியழித்தனர்.

★1900- ஐக்கிய அமெரிக்காவின் யூட்டா மாநிலத்தின் ஸ்கொஃபீல்ட் என்ற இடத்தில் இடம்பெற்ற சுரங்க விபத்தில் 200 பேர் கொல்லப்பட்டனர்.

★1915- ஆர்.எம்.எஸ். லூசித்தானியா என்ற கப்பல் தனது 202 ஆவதும் கடைசியுமான பயணத்தை நியூயோர்க் நகரில் இருந்து ஆரம்பித்தது. இது புறப்பட்ட ஆறாவது நாள் அயர்லாந்துக் கரைக்கருகில் மூழ்கியதில் ஆயிரத்து198 பேர் கொல்லப்பட்டனர்.

★1925- சீனாவில் அனைத்து சீன தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. இதுவே இன்று 134 மில்லியன் உறுப்பினர்களுடன் உள்ள உலகின் மிகப்பெரிய தொழிற்சங்கம் ஆகும்.

★1930- புளூட்டோவின் பெயர் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

★1931- நியூயோர்க் நகரில் எம்பயர் ஸ்டேட் கட்டடம் திறந்து வைக்கப்பட்டது.

★1940- கோடை கால ஒலிம்பிக் போட்டிகள் போர் காரணமாக நிறுத்தப்பட்டன.

★1941- இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியப் படைகள் கிரேக்க தீவான கிறீட் மீது மிகப் பெரும் வான் தாக்குதலை நிகழ்த்தினர்.

★1945- சோவியத் இராணுவத்தினர் பேர்லினில் நாடாளுமன்றக் கட்டடத்தில் சோவியத் கொடியை ஏற்றினார்கள்.

★1946- மேற்கு அவுஸ்திரேலியாவில் பில்பாரா என்ற இடத்தில் அவுஸ்திரேலியக் பழங்குடிகள் மனித உரிமை, போதுமான சம்பளம் போன்ற கோரிக்கைகளை முன்வைத்து 3 ஆண்டுகள் வேலை நிறுத்தப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

★1948- கொரிய மக்கள் ஜனநாயகக் குடியரசு அமைக்கப்பட்டது. கிம் உல்-சுங் அதன் முதலாவது ஜனாதிபதியானார்.

★1950- குவாம் ஐக்கிய அமெரிக்காவின் பொதுநலவாயத்தில் இணைக்கப்பட்டது.

★1956- இளம்பிள்ளைவாத நோய்த் தடுப்பு மருந்து அறிமுகப்படுத்தப்பட்டது.

★1956- இளம்பிள்ளை வாத நோய்த் தடுப்பு மருந்து அறிமுகப்படுத்தப்பட்டது.

★1960- மகாராஷ்டிரா மாநிலம் அமைக்கப்பட்டது.

★1961- கியூபாவை சோசலிச நாடாகவும் தேர்தல் முறையை ஒழித்தும் அதன் பிரதமர் பிடெல் காஸ்ட்ரோ அறிவித்தார்.

★1977- தொழிலாளர் நாள் நிகழ்வின் போது துருக்கியின் இஸ்தான்புல் நகரில் 36 பேர் கொல்லப்பட்டனர்.

★1978- ஜப்பானியரான நவோமி யூமூரா தன்னந்தனியாக வட முனையை அடைந்த முதல் மனிதரானார்.

★1987- இரண்டாம் உலகப் போரின் போது அவுஷ்விட்ஸ் வதை முகாமில் கொல்லப்பட்ட யூதப் பெண்மதகுரு ஈடித் ஸ்டெயின் பாப்பரசரால் புனிதப்படுத்தப்பட்டார்.

★1993- இலங்கை ஜனாதிபதி ஆர்.பிரேமதாசா மே தினப் பேரணியில் வைத்து மனிதக் குண்டுத்தாக்குதலின் மூலம் கொல்லப்பட்டார்.

★2004- சைப்பிரஸ் செக் குடியரசு எஸ்தோனியா, ஹங்கேரி, லாத்வியா, லித்துவேனியா, மால்ட்டா, போலந்து, சிலவாக்கியா, சிலவேனியா ஆகியன ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைந்தன.

★2006- புவேர்ட்டோ ரிக்கோ அரசு நாட்டின் பணவீக்கம் காரணமாக பாடசாலையும் அரசு நிறுவனங்களையும் மூடியது.

#### பிறப்புக்கள்

★1951- கோர்டன் கிரீனிட்ச், மேற்கிந்தியத் தீவுகளின் முன்னாள் துடுப்பாளர்.

★1971- அஜித்குமார், தமிழ்த் திரைப்பட நடிகர்.

#### இறப்புக்கள்

★1965- ஜி. என். பாலசுப்பிரமணியம், கர்நாடக இசைப் பாடகர், நடிகர் (பி.1910)

★1993- ரணசிங்க பிரேமதாசா, இலங்கை முன்னாள் ஜனாதிபதி (பி.1924)

#### சிறப்பு நாள்

★மே நாள்- உலகத் தொழிலாளர் நாள்

★இத்தாலி- தேசிய நாள் (Giorno dei Lavoratori)

★செக் குடியரசு- தேசிய காதல் நாள்

# தனியார் பேருந்து கட்டண அதிகரிப்பு தீர்மானம் விரைவில் அறிவிக்கப்படும்

## கெமுனு விஜேரத்ன தெரிவிப்பு

(கொழும்பு)

பேருந்துக் கட்டணங்களை அதிகரிப்பதற்கான கட்டாயத் தேவை நிலவுவதாக இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் தெரிவிக்கின்றது.

இவ்விடயம் தொடர்பாக எதிர்வரும் 4 ஆம் திகதி புதன்கிழமை இறுதித் தீர்மானம் அறிவிக்கப்படவுள்ளதாக அந்தச் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன குறிப்பிட்டார்.

தமது சங்கத்தின் கோரிக்கைகளுக்கு அரசாங்கத்திடம் இருந்து இதுவரை சாதகமான பதில் கிடைக்கவில்லை என்றும் அத்தோடு மூன்று வாரங்களுக்கு முன்னதாக பேருந்து கட்டண அதிகரிப்பு தொடர்பான ஐந்து கோரிக்கைகளை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் அரசாங்கத்திடம் முன்வைத்துள்ளது.

அரசாங்கத் தரப்பில் இருந்து எதுவித பதிலும் இதுவரை கிடைக்காத நிலையில் எதிர்வரும் 4 ஆம் திகதி தமது சங்கம் இறுதித் தீர்மானமொன்றை மேற்கொள்ள விருப்பதாக அவர் தெரிவித்தார்.

பேருந்து கட்டண அதிகரிப்பு தொடர்பான சதவிகிதங்கள் மற்றும் கட்டண உயர்வு அமுலாக்கப்படும் திகதி என்பன குறித்து அனை;றய தினம் அரசாங்கத்திற்கும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிற்கும் அறிவிக்கப்படவுள்ளதாக தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் மேலும் குறிப்பிட்டார். (2)

# பிற்போடப்பட்டுள்ள உள்ளூராட்சிமன்ற தேர்தலை இம்மாதம் நடத்த ஏற்பாடு

பிற்போடப்பட்டுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களை இம்மாத இறுதியில் நடத்த அரசாங்கம் ஆலோசித்து வருகின்றது.

வேட்புமனு தாக்கலின் போது ஏற்பட்ட பல்வேறு சிக்கல்கள் மற்றும் நீதிமன்றத் தீர்ப்புக்கள் என்பன காரணமாக மொத்தமாக 67 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் தற்போதைக்கு தேர்தல் ஆணையாளரினால் ஒத்திவைக்கபட்டுள்ளன.

அதற்கிடையே தேர்தல் நடத்தப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து நீதிமன்றில் தொடரப்பட்டுள்ள வழக்குகளுக்கான தீர்ப்பு இம்மாதம் ஐந்தாம் திகதி வழங்கப்படவுள்ளது.

அதனையடுத்து பிற்போடப்பட்டுள்ள அனைத்து உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களை இம்மாதம் 30 ஆம் திகதி ஒரே தடவையில் நடத்துவது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தி வருகின்றது.

ஆயினும் அதற்கும் நீதிமன்ற அனுமதியை பெறவேண்டும் என்ற நிலை காணப்படுகின்றதாக தேர்தல் ஆணையாளர் அலுவலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (2-3)

# இலங்கையின் 33 ஆவது பிரதம நீதியரசர் ஜனாதிபதியால் நியமனம்

(கொழும்பு)

நாட்டின் அடுத்த பிரதம நீதியரசராக கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்கவை நியமிப்பதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார்.

18 ஆவது திருத்தச் சட்டத்தின்மூலம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் பிரஸ்தாப நியமனம் தன்னால் மேற்கொள்ளப்படவுள்ளதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பாராளுமன்றக்குழுவுக்கு அறிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் அறிவிப்புக் குறித்த விடயத்தை ஆராய்ந்த பின் ஒரு வாரகாலத்துக்குள் பாராளுமன்றக்குழு தன் முடிவை அறிவிக்கும்.

தற்போதைய பிரதம நீதியரசர் அசோக டி சில்வா இம்மாதம் 17 ஆம் திகதி தனது பதவியிலிருந்து ஓய்வு பெற்றுச் செல்லவுள்ளார்.

அவர் கடந்த 2009 ஆம் ஆண்டின் ஜூன் மாதத்தில் பிரதம நீதியரசர் பதவிக்கு ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டிருந்தார்.

இலங்கையின் 33 ஆவது பிரதம நீதியரசராக நியமிக்கப்படவுள்ள கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்க இலங்கையின் முதலாவது பெண் பிரதம நீதியரசருமாவார்.

அத்துடன் அவர் பல தடவைகள் பதில் பிரதம நீதியரசராக கடமையாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (2)

# திருமலையில் புராதன நாகரிக எச்சங்கள் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

திருகோணமலை கோமரன்கடவல பிரதேசத்தில் புராதன நாகரிகம் ஒன்றின் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இதுவரைக்கும் ஆயிரத்து 500 வருடங்களுக்கு முன்னரான காலப்பகுதியைச் சேர்ந்த மட்பாண்ட உபகாரணங்கள் சில குறித்த பிரதேசத்தில் இருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளதாக தொல்பொருள் ஆராய்ச்சித் திணைக்களத்தின் திருகோணமலை மாவட்ட பொறுப்பதிகாரி எல்.ஜீ.ரஞ்ஜித் கூறினார்.

இந்த மட்பாண்ட பாத்திரங்கள் தானியங்களை களஞ்சியப்படுத்தி வைப்பதற்காக பயன்படுத்தப்பட்டுள்ளமை ஆய்வுகளின் மூலம் கண்டறியப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.


சமுர்த்தி உத்தியோகத்தர்கள் சிலரால் குறித்த இடத்தில் மேற்கொள்ளப்பட்ட சிரமதான நடவடிக்கையின் போது புரதான காலத்துக்கு சொந்தமான மட்பாண்டமொன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தமக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து தொல்பொருள் ஆராய்ச்சித் திணைக்களத்தின் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு இது குறித்து அறிவிக்கப்பட்டதாக திருகோணமலை மாவட்ட பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

இதனையடுத்து குறித்த இடத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் போது மேலும் சில எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டார். (2)

# சுன்னாகம் - ஸ்ரீ கதிரமலைச் சிவன் கோவில் தேர்த் திருவிழா சிறப்புமலர் - 01.05.2011





## உடுவில் பிரதேச செயலரின் வாழ்த்துச் செய்தி

சுன்னாகம் கதிரமலை சிவன் ஆலயத்தின் தேர்த் திருவிழாவான இன்று சொர்ணாம்பிகா சமேத பொன்னம்பலவாணேஸ்வரர் தேரிலே ஆரோகணித்து அருட்காட்சி தருகிறார்.

மஹோற்சவத்தில் இரதோற்சவம் அழித்தலைக் குறிப்பதாகும். ஆகவே எம்பெருமான் இன்று இரதத்திலே எழுந்தருளி அக்கிரமங்களையும் அநியாயங்களையும் அழித்தொழிக்கப் புறப்படுகிறார். அவரது பொற்பாத கமலம் பணிந்து எல்லோரும் நலமுடன் வாழ வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

இன்றைய நன்னாளில் அடியார் பெருமக்கள் அனைவரும் எம்பெருமானின் அருளால் சேமமுறப் பிரார்த்தித்து ஆசி நல்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

**திருமதி ச.மஞ்சுளாதேவி,**
**பிரதேச செயலர்,**
**உடுவில்.**

## ஆலய குருவின் ஆசிச்செய்தி



கதிரமலை இராட்சியத்தின் வரலாற்றுச் சிறப்புடைய சுன்னாகம் ஸ்ரீ கதிரமலைச் சிவன் தேவஸ்தானத்தில் இன்று விநாயகர், சுப்பிரமணியர் சகிதம் அன்னை சுவர்ணாம்பிகா தேவி சமேதராக ஸ்ரீ பொன்னம்பலவாணர், சோமஸ்கந்தர் ஆகிய மூர்த்திகள் மூன்று தேரில் ஆரோகணித்து தேர் உலாவரும் திருநாளாகும். இக்காட்சி மூலம் துன்பங்கள் நீங்கி, மாயைகள் அகன்று, புனிதத்துவமும், உண்மையும் பெறுமாறு தேவரும் முனிவரும் வந்து வாழ்த்தி, வடம்பிடிக்கும் அடியவர்கள் திருவருள் பெறும் சிறப்பு நாளாகும். அண்டசராசரங்கள் அருள் புரிந்து காக்கும் இறைமை, தேர் ஆரோகணித்து நடமாடக் கோவில் என்றும் பதத்திற்கு ஏற்ப எம்முடன் கூடவே வருவது போன்ற பெருநிலையை உணர்த்துவது தேர் உலாவாகும். அனைவரும் மகிழ்வுடனும், நிறைவுடனும் வாழ ஸ்ரீ பொன்னம்பலவாண சுவாமியை பிரார்த்தித்து ஆசீர்வதிக்கின்றோம்.

முத்தமிழ்க் குருமணி சகலாகமசங்கிரகர்
**சிவஸ்ரீ நா.சர்வேஸ்வரக்குருக்கள்,**
**ஸ்ரீ கதிரமலைச் சிவன் தேவஸ்தானம்,**
**சுன்னாகம்.**

## மஹோற்சவ பிரதம குருவின் ஆசிச்செய்தி



வெள்ளிமலை என்னும் பொருள்படும் சுன்னாகம் நகரில் கதிரமலை என்னும் புனித பதியில் பல்லாண்டுகால வரலாற்றையும் மேன்மையையும் கொண்டு பில்வ விருட்சத்தை தல விருட்சமாகவும் சுவர்ணாம்பிகை தாயை இடப்பாகம் கொண்டும் மனம், வாக்கு காயங்களினால் திரிகரண சுத்தியுடன் வழிபடும் அடியவர் தமை ஆட்கொண்டு நல்லருள் புரியும் பொன்னம்பலவாணப் பெருமான் இன்று 01.05.2011 ஞாயிற்றுக்கிழமை விநாயகப் பெருமான், பாலமுருகப் பெருமான் சகிதம் சோமஸ்கந்த மூர்த்தியாக சித்திரத்தேரில் ஆரோகணித்து நல்லருள் பாலிக்கவுள்ளார். விநாயகர் அருளால் வினை நீக்கமும் தெளிந்த நல்லாசியும் முருகனருளால் பிள்ளைச் செல்வமும் தாயினருளால் தீர்க்கசுமங்கலியான வாழ்வும் பொன்னும் பொருளும் பொன்னம்பலவாண பெருமானின் திருவருளால் எண்ணுகின்ற அனைத்தும் இனிதே முத்தேர் தரிசனம் செய்த புண்ணியத்தினால் கிடைக்கப்பெற்று வாழ வாழ்த்தி பெருமான் கழல் இறைஞ்சி ஆசிர்வதிக்கின்றோம்.

சிவாச்சார்ய ரத்னம்
**சிவஸ்ரீ.சோம.ஸ்ரீகரக்குருக்கள்,**
**மகோற்சவ பிரதமகுரு.**


## எமது குலதெய்வம்



எமது குலதெய்வமாகிய ஸ்ரீ கதிரமலைநாதர், பொன்னம்பலவாண சுவாமிகள் இன்று முத்தேரில் ஆரோகணித்து வருவது அனைவருக்கும் அருளும் பெருமையும் தரும் நல்ல காட்சியாகும். தேர்விழா சிறப்புறவும் எமது குலகுருமார்கள், உபயகாரர்கள், அடியார்கள், தொண்டர்கள் பணிசிறப்புறவும் குலதெய்வமாகிய பொன்னம்பலவாண சுவாமி பாதம் பணிந்து போற்றுகிறேன்.

**திரு.ச.வசந்தப்ரியன்,**
**சிரேஷ்ட விரிவுரையாளர்,**
**இலங்கை சப்பிரகமுவ பல்கலைக்கழகம்.**

(த-3096)





கனடா வாழ் ஆனந்தி றஞ்சன் தம்பதியரின் அனுசரணையுடன் உரும்பிராய் இலக்குமி முன்பள்ளி மழலைகளின் வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டி உரும்பிராய் வடக்கு சரஸ்வதி சனசமூக நிலைய முன்றலில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட மக்கள் வங்கியின் யாழ்.பல்கலைக்கழக கிளை முகாமையாளர் ஆ.சத்தியமூர்த்தி, சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட யா/கொக்குவில் இந்துக் கல்லூரியின் ஓய்வுபெற்ற அதிபர் அ.பஞ்சலிங்கம் மற்றும் முன்பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் நிற்பதனையும் மாணவர்களின் உடற்பயிற்சி நிகழ்வு இடம்பெறுவதையும் படங்களில் காணலாம்.

# யாழ். போதனா வைத்தியசாலையில் தங்குமிட வசதியின்றி மக்கள் அவதி

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் நோயாளர்களை பார்வையிட வருபவர்கள் தங்குமிட வசதிகள் இன்றி வெயிலிலும் மழையிலும் பெரும் அவதிப்படுகின்றனர்.

நோயாளர்களை பார்வையிடுவதற்கு அனுமதிக்கப்பட்ட நேரத்திற்கு முன்பாக வைத்தியசாலைக்கு வருபவர்களே இவ்வாறு அவதிப்படுகின்றனர்.

தினமும் நண்பகல் வேளைகளில் விடுதிகளில் தங்கவைக்கப்பட்ட நோயாளர்களுக்கு உணவு கொண்டு வருபவர்கள் வைத்தியசாலை பின் வாயிலில் மழையிலும் வெயிலிலும் வீதியில் நிற்கின்றனர்.

தங்கி நிற்பதற்கு ஏற்றவாறு வைத்தியசாலை வளாகத்தில் தங்குமிடங்களை அமைத்து தர வேண்டும் என நோயாளர்களை பார்வையிட வருபவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

நோயாளர்களை பார்வையிட வருபவர்களை அனுமதிக்க வேண்டிய நேரத்திற்கு முன்பாக வைத்தியசாலை வளாகத்திற்குள் வர கடமையில் உள்ள காவலாளிகள் அனுமதி வழங்குவதில்லை.

இதனால், காவலாளிகளுக்கும் நோயாளர்களை பார்வையிட வருபவர்களுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்படுவது வழமையாகிவிட்டது.

உறவினர்களை பார்வையிட வருபவர்கள் நீண்ட நேரமாக தடுத்து வைக்கப்படுவதால் மன ரீதியாக பாதிப்படைகின்றதோடு வெயிலிலும் மழையிலும் நிற்பதால் நோய் வாய்ப்பட வேண்டியும் ஏற்படுகின்றது.

குறித்த நேரத்திற்கு முன்பாக உட் செல்ல அனுமதிக்க முடியாது என கடமையில் உள்ள காவலாளிகளும் உட் செல்ல அனுமதித்துத்தான் ஆக வேண்டும் என நோயாளர்களை பார்வையிட வந்த உறவினர்களும் தெரிவிப்பதனாலேயே இந்த முறுகல் நிலை ஏற்படுகிறது.

மேலும் பின்வாயிலில் ஒருவர் பின் ஒருவராகவே வைத்தியசாலை வளாகத்தில் செல்ல அனுமதிக்கப்படுகின்றனர். இதனால் சினமடைந்த நிலையில் மக்கள் செல்வதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

வயோதிபர்கள் முதற்க்கொண்டு,கைக் குழந்தைகளை தாங்கிய தாய்மார்கள் வரை இவ்வாறு கால் கடுக்க வீதியில் அவதிப்படுகின்றனர்.

வைத்தியசாலையின் பல பாகங்கள் பல கோடி ரூபா செலவில் புனரமைத்து வரும் நிலையில் இவ்வாறு அவதிப்படும் மக்களின் நிலையை கருத்தில் கொண்டு நோயாளர்களை பார்வையிட வருபவர்கள் தங்கி நின்று பார்வையிடக்கூடிய தங்குமிடங்களை அமைத்து தர வேண்டும் என பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (6)

## மாகம்புர துறைமுகத்தில் கப்பல் போக்குவரவு பயிற்சிகள்

அம்பாந்தோட்டை- மாகம்புர துறைமுகத்திற்கு நேற்று மேலும் ஒரு சர்வதேச கப்பல் வந்துள்ளதாக துறைமுக மற்றும் பெருந் தெருக்கள் பிரதியமைச்சர் ரோஹித்த அபேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

இதன்படி ஸ்கை எபலோ என்ற இந்திய கப்பல் சென்னையிலிருந்து அம்பாந்தோட்டை துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

மாலுமிகளினால் கப்பல்களை செயற்படுத்துவதற்கான பயிற்சி நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்ற நிலையில் சர்வதேச கப்பல்கள் அதற்காக ஈடுபடுத்தப்படுகின்றன.

இந்த நிலையில் ஒத்ரெல் டுபாய் என்ற கப்பல் இன்றைய தினம் கொச்சின் துறைமுகத்தில் இருந்து அம்பாந்தோட்டையை வந்தடையவுள்ளது. (2)

# ஆலோசனைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்திற்கு தெரிவான துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணத்திற்கு தென்மராட்சி கல்விச் சமூகத்தினரால் நடாத்தப்படவுள்ள கௌரவிப்பு நிகழ்வு சம்பந்தமான ஆலோசனைக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஆர்வலர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டுக் குழுவினர் அறிவித்துள்ளனர். (3-29)

# சேலை வடிவமைப்பு பயிற்சி நிலையம் சங்கானையில் விரைவில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

கைத்தறி சேலைகள் உற்பத்தி பயிற்சி மற்றும் சேலைகளுக்கான வேலைப்பாடுகளுடன் கூடிய வடிவமைப்பு பயிற்சிகளை வழங்கும் வகையில் யாழ். சங்கானையில் பயிற்சி நிலையமொன்றை மகேஸ்வரி நிதியத்தினூடாக இன்னும் இரு வாரங்களில் ஆரம்பிப்பதற்கு பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை எடுத்துள்ளார்.

இப் பயிற்சி நிலையத்தின் மூலம் உரிய பயிற்சிகள் வழங்கப்படுவதுடன் பயிற்சி காலத்தில் பயிற்சியாளர்களுக்கு போக்குவரத்து செலவினங்களுக்கான கொடுப்பனவுகளும் வழங்கப்படும். அத்துடன் பயிற்சியின் பின்னர் உடனடி வேலை வாய்ப்புக்களுக்கும் ஏற்பாடு செய்து கொடுக்கப்படும்.

இதன் பிரகாரம் இப் பயிற்சி நெறிகளுக்கென முதற்கட்டமாக 200 பயிற்சியாளர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

அதேநேரம் யாழ். குடாநாட்டில் கைத்தறி சாறிகளை உற்பத்தி செய்வோர்களது நலன் கருதி அவர்களது உற்பத்திகளுக்கு நல்லதொரு சந்தை வாய்ப்பினைப் பெற்றுக் கொடுப்பதற்கும் அமைச்சர் நடவடிக்கை எடுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

மேற்படி தொடர்ந்து பயிற்சியைப் பெற்று வேலைவாய்ப்புக்களில் ஈடுபட விரும்புகின்ற 18 வயதிற்கும் 35 வயதிற்கும் இடைப்பட்ட பெண்கள் மட்டும் இப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்களை எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்பதாக சாறி வடிவமைப்பு பயிற்சி நெறி, மகேஸ்வரி நிதியம்,110, 4 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். (2)

## கலந்துரையாடல்

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலய பாடசலைகளில் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கான நேர்முகப்பரீட்சைக்கு தோற்றியோருக்கான கலந்துரையாடல் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இதில் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (3-29)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

## அமரர் இராமலிங்கம் சிவபாக்கியம்

தோற்றம் 15.04.1937

மறைவு 01.04.2011



எமது குடும்பத்தின் குலவிளக்காய் ஒளி தந்து நேர் வழிகாட்டி சீரும் சிறப்புமாய் எம்மை வளர்த்த அன்னையே! நீங்கள் எம்மை விட்டு நீங்கி 31 நாட்களாகிவிட்டன. ஆனாலும் எம் நெஞ்சமதில் உங்கள் நினைவுகள் நிலைத்திருக்கும். உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி எங்கள் கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

அன்னாரது அந்தியேட்டிக் கிரியைகள் 01.05.2011 அன்று காலை 7.00 மணியளவில் புற்றளை பிள்ளையார் கோயிலில் நடைபெற்று தொடர்ந்து வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் வீட்டில் காலை 10.00 மணியளவில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள்அனைவரையும் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.

புற்றளை, புலோலி தெற்கு,
புலோலி.

குடும்பத்தினர்

நமது உண்மை நங்கூரம் பாய்ச்சிய கப்பலைப் போல அமைதியுடன் இருக்கவேண்டும்.

- புத்தர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## கூட்டமைப்பின் சிந்தனையில்தான் அறிக்கையின் பலமும், பலவீனமும் உள்ளது

அரசாங்கத்திற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையிலான பேச்சுவார்த்தைத் தொடரின் ஐந்தாவது கட்டம் நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளது.

இரு தரப்பிற்கும் இடையில் நடந்த இப் பேச்சுவார்த்தையின்போது அதிகாரப் பகிர்வு குறித்துப் பேசப்பட்டதாக கூறப்படுகின்றது.

இதுவரை அடிப்படைப் பிரச்சினைகள் பற்றி பேச்சு நடத்தப்பட்டதாகக் கூறப்பட்ட நிலையில்– அவ்வாறு அடிப்படைப் பிரச்சினைகள் பற்றிப் பேசிய போது, புனர்வாழ்வு முகாம்களில் உள்ளவர்களின் விவகாரம் மற்றும் தடுப்பு முகாம்களில் உள்ளவர்களின் பெயர் விபரங்கள் என்பன குறித்து பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தன.

தடுப்பு முகாம்களில் உள்ளவர்களின் பெயர் விபரங்களை வெளியிடுதல்– புனர்வாழ்வு முகாம்களில் உள்ளவர்களை விடுவித்தல்– சிறைகளில் அடைக்கப்பட்டிருப்பவர்கள் தொடர்பில் சட்டரீதியான நடவடிக்கைகளை எடுத்தல் என்பன தொடர்பில் திகதிகள் குறித்து இணக்கம் காணப்பட்டிருந்தன.

ஆனால் இணக்கம் காணப்பட்ட விடயங்கள் சார்ந்து எதுவுமே நடக்கவில்லை. இது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு "அரசு எங்களை ஏமாற்றி விட்டது" என அறிக்கை விட்டதும் தெரிந்ததே.

அரசு ஏமாற்றினால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்னசெய்ய முடியும்? அது விடயத்தில் கூட்டமைப்பில் குறைகாண முடியாது. அரசு எங்களை ஏமாற்றி விட்டதெனப் பகிரங்கப் படுத்துவதை மட்டுமே அவர்கள் செய்யமுடியும்.

ஆனால் நேற்று முன்தினம் அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின்போது மாகாண சபைகளுக்கான அதிகாரப் பகிர்வு பற்றிப் பேசப்பட்டதாகக் கூறப்படுவது,

ஓ! இங்குதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூட்டை மாற்றி ஓடுகின்றது என்பதை தெளிவுபடுத்துகின்றது.

தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளான மீள் குடியேற்றம், தடுப்பு முகாம்களில் இருப்பவர்களை அறிதல், புனர்வாழ்வு முகாம்களிலிருந்து விடுவித்தல், சிறைகளில் வாடும் தமிழ் இளைஞர்களின் விடுதலையில் கவனம் செலுத்துதல் என்ற நிலைமைகளுக்கு இன்னமும் முடிபுகாணாமல் அதிகாரப்பகிர்வு பற்றிப் பேசுவதானது தாலிகட்டியபிறகு பொருத்தம் பார்ப்பது போன்றது.

ஐ.நா. நிபுணர் குழு அறிக்கை வெளியிட்டிருக்கும் வேளையில் அதனை ஆதரிப்பதாக கூட்டமைப்பு அறிக்கை விடுத்திருக்கும் சந்தர்ப்பத்தில், மிகவும் நிதானமாக நடக்கவேண்டிய தலையாய பொறுப்பு கூட்டமைப்பிற்கு உண்டு.

நாம் இவற்றைக் கூறும்போது, யானையைப் பார்த்த குருடர்கள் போல எம்மைப் பார்ப்பவர்களும் இருக்கவே செய்வர்.

அதற்காக எங்கள் தலையில் நாங்களே மண்ணை அள்ளிக் கொட்டக் கூடாதென்பதற்காக இதனைப் பிரஸ்தாபித்தாக வேண்டும்.

ஏனெனில் ஐ.நா. நிபுணர் குழு விடுத்த அறிக்கையின் பின்னால் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களின் மரணங்கள், பேரழிவுகள், அவஸ்தைகள் எனப் பல்வேறு இழப்புக்கள் உள்ளன.

ஐ.நாவின் அறிக்கைக்காக தமிழர்கள் கொடுத்தவை மனித மொழிகளில் கூறக்கூடியவை அல்ல. ஆகையால் நிதானம் அவசியம். இதுபோன்ற சந்தர்ப்பம் முன்பு ஏற்பட்டதுமில்லை, இனிமேலும் ஏற்படப் போவதுமில்லை.

ஆகையால், இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுக்கு இது உகந்த காலமா? என்று ஒருகணம் சிந்தியுங்கள். உங்கள் சிந்தனையில்தான் அறிக்கையின் பலமும், பலவீனமும் தங்கியுள்ளது.

# மே தினத்தன்று ஐ.நா.ஊழியர்களுக்கு பாதுகாப்பளிப்பது இலங்கை அரசின் பொறுப்பு

## பர்ஹான் ஹக் தெரிவிப்பு

(கொழும்பு)

**மே தினத்தை முன்னிட்டு இன்று கொழும்பில் ஆர்ப்பாட்டம் நடத்த திட்டமிட்டுள்ளதால் இலங்கையிலுள்ள ஐ.நா. ஊழியர்களுக்கு பாதுகாப்பளிக்க வேண்டியது இலங்கை அரசாங்கத்தின் பொறுப்பாகும் என்று ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிப் பேச்சாளர் பர்ஹான் ஹக் தெரிவித்துள்ளார்.**

ஐ.நா. நிபுணர்குழுவின் அறிக்கைக்கு எதிராக இலங்கை மக்களின் எதிர்ப்பைக் காண்பிக்கும் வகையில் மே தினத்தன்று பாரிய ஆர்ப்பாட்டப் பேரணிகளை நடத்துவதற்கு அரசாங்கம் திட்டமிட்டிருந்தது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர்கள் கூட்டத்தில் இவ்விடயம் குறித்து ஆராயப்பட்டிருந்தது. ஐ.நா. நிபுணர்குழுவின் அறிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் நாளாக மே தினம் அமைய வேண்டும் என்றும் கருத்து தெரிவிக்கப்பட்டிருந்தது.

அத்துடன் பொலிஸ் மா அதிபரும் மே தினத்தன்று கொழும்பிலுள்ள ஐ.நா. அலுவலகத்திற்கு விசேடமாக பாதுகாப்பு வழங்க முடியாது எனவும் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையிலேயே ஐ.நா. வின் பேச்சாளர் கடந்த 28ஆம் திகதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நியூயோர்க்கில் கடந்த 28ஆம் திகதி நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவித்த ஐ.நாவின் பிரதிப் பேச்சாளர் பர்ஹான் ஹக் ஐ.நா. அமைப்பின் பணிகள் எவ்வித தடங்கல்களும் பாதுகாப்பு அச்சுறுத்தல்களும் இன்றி தொடர்வதை உறுதிப்படுத்துவதற்காக ஐ.நா.ஊழியர்களுக்கும் சொத்துக்களுக்கும் பாதுகாப்பளிக்க வேண்டிய பொறுப்பு இலங்கை அரசாங்கத்துக்கு உள்ளது.

கடந்த 2010ஆம் ஆண்டு யூலையில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றதைத் கருத்திற்கொண்டு இலங்கையிலுள்ள ஐ.நா.அலுவலகங்களின் வழமையான நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படுவதைத் தடுக்க தவறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று தெரிவித்துள்ளார்.

ஐ.நா.வின் பேச்சாளர் இவ்வாறு தெரிவித்துள்ள போதிலும் கொழும்பிலுள்ளஐநா.அலுவலகம்தமக்குஇலங்கை அரசாங்கத்தினால் அளிக்கப்பட்டுள்ள பாதுகாப்பு தொடர்பாக மகிழ்ச்சியடைவதாக இணையத்தளமொன்றுக்கு தெரிவித்துள்ளது.

இதேவேளை மேதினத்தன்று ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கைக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களையோ கிளர்ச்சிகளையோ நடத்தும் எண்ணம் எதுவும் அரசாங்கத்திடம் இல்லையென்று வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் கடந்த 28 ஆம் திகதி தெரிவித்திருந்தார். கொழும்பிலுள்ள வெளிநாட்டுத் தூதுவர்களைச் சந்தித்து விளக்கமளித்தபோதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறியிருந்தார்.

நிபுணர்குழுவின் அறிக்கையை ஐக்கிய நாடுகள் சபையின் ஆவணமென்ற ரீதியில் இலங்கை அரசாங்கம் பார்க்கவில்லை என்றும் அவர் இந்தச் சந்திப்பின் போது எடுத்துக் கூறியுள்ளார்.(2)

# மாகாணசபை முறைமையானது பல்வேறு அழுத்தங்களால் உருவானது

## பசில் ராஜபக்ஷ தெரிவிப்பு

மாகாணசபை முறைமையானது பல தரப்பட்ட அழுத்தங்கள் மற்றும் வேறு சில காரணிகளால் உருவானதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மாகாணசபைகள், பிரதேசசபைகள் மற்றும் மத்திய அரசாங்கம் ஆகிய 3 பிரிவுகளில் ஒரே விடயத்தை மேற்கொள்கின்றமை அநாவசியமான விடயம் என தெரிவித்துள்ளார்.

தகுந்த முறையில் நடவடிக்கைகளை பாகுபடுத்தி மேற்கொள்வது சிறந்தது என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இடபெற்ற 28 ஆவது முதலாமைச்சர்கள் மாநாட்டின் போதே அமைச்சர் இந்த கருத்தை வெளியிட்டார்.

சர்சைக்குரிய தாருஸ்மான் அறிக்கைக்கு ஏகமனதாக ஆட்சேபனை தெரிவிப்பதற்கு மாகாணசபை முதலாமைச்சர்கள் தீர்மானித்துள்ளனர்.

நேற்று முன்தினம் 28ஆவது முதலமைச்சர்களின் மாநாட்டிலேயே இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வடமத்திய மாகாண முலைதமைச்சர் பர்டி பிரேமலால்திசாநயக்க தெரிவித்துள்ளார்.

இதே வேளை மாகாண சபைகளில் நிலவும் நிர்வாக சேவை நெருக்கடி தொடர்பில் பல முடிவுகளை எடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

முதலாமைச்சர்களின் மாநாட்டின் பின்னர் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இந்த கருத்துக்களை வெளியிட்டார். (2)

# உயிர்ப்பின் நாயகனோடு நாம் உடனிருப்போம் (யோவான் 20:19–31)

இன்று நற்செய்தி உயிர்ப்பு விழாவின் உன்னத மையச்செய்தி அழகாகக் கூறுகின்றது எனலாம். நம்பிக்கை கொண்டோருக்கு அமைதி வாக்களிக்கப்படுகிறது. அவர்களுக்கு ஒரு பணிப் பொறுப்பு அளிக்கப்படுகிறது. இங்கு தூய ஆவியின் ஆற்றல், பாவமன்னிப்பு, ஆழ்ந்த நம்பிக்கை என்பன எடுத்துக் காட்டப்படுகின்றன. இன்றுநற்செய்தியில்நாம் இரண்டு பகுதிகள் பார்க்கலாம்.

இயேசு உயிர்த்த நாள் மாலையில் காட்சியளித்ததையும் ,எட்டாம் நாள் மீண்டும் காட்சியளித்ததையும் விளக்குகின்றன. இதில் இயேசு உயிர்த்தெழுந்த அதேநாளிலேயே தூய ஆவியைச் சீடருக்கு அளித்து அவர்களுக்குப் பணிப் பொறுப்பும் வழங்குகிறார்.

உயிர்த்த இயேசு சீடர்களுக்கு தோன்றி 'உங்களுக்கு அமைதி உரித்தாகுக' என்று வாழ்த்தினார். இந்த வாழ்த்து அன்று யூதர்கள் ஒருவர் ஒருவரைச் சந்திக்கும் போது கூறுகின்ற வாழ்த்து (shalom) ஆகும். இதையே இஸ்லாமியர் salaam என்கின்றனர். ஆனால் மரணத்தை வென்று உயிர்த்த இயேசுவின் இவ் வாழ்த்திற்கு ஓர் ஆழ்ந்தபொருள் உண்டு. வெற்றியடைந்த இயேசு, மெசியா காலத்தில் நிறைவேறுவதாக இருந்த அமைதியையும் மகிழ்வையும் சீடரோடு பகிர்கின்றார். தூய ஆவியைக் கொடையாக அளித்த தன் வழியாகப் முன்புரைக்கப்பட்ட இறைவாக்குகளை நிறைவு செய்தார். 'அந் நாட்களில் தான் நான் யூதா ,எருசலேம் ஆகியவற்றின் துன்ப நிலைமையை மாற்றி முன்பு இருந்த நிலைமைக்கே கொண்டு வருவேன்' உலகத் தின் தொடக்கத்தின்போது நீரின்மீது அசை வாடிக் கொண்டிருந்தது கடவுளின் ஆவி(தொ.

நூ:2); அரசர்களையும் குருக்க ளையும் இறைவாக்கினரையும் துன்பு றும் ஊழியரையும்' அருள்பொழிவால் உறுதிப்படுத்தியதும் அதே ஆவி. அந்த ஆவியால் தான் இயேசு தம் சீடருக்கு ஆற்றலும் துணிவும் அளித்தார்; அருள்பொழிவால் அவர்களை உறுதிப்படுத்தி னார்.

சீடரோடு உண்டு , பழகி , நடமாடி , பின்பு துன்புற்று சிலுவையில் இறந்த இயேசுவும் சாவுக்குப் பின் உயிர் பெற்று எழுந்து மாட்சிமை அடைந்து , தூய ஆவியைக் கொடையாகத் தருகின்ற இயேசுவும் ஒருவரே என்பதை யோவான் கோடிட்டுக்காட்டுகிறார். இயேசு தம் கைகளிலும் விலாவிலும் ஏற்பட்டி ருந்த தழும்புகளை காட்டுகிறார். உயிர்த்தெழுந்த இயேசு உடலைவிட்டுப் பிரிந்து போய் உலாவுகின்ற ஆவி போலல்லாமல், உண்மையிலேயே மனிதஇயல்பு உடையவராகவும் இறையியல்பு கொண்டவராகவும் உள்ளார் என்பதை இணைத்துக் காட்டுகிறார். உயிர்ப்பு என்பதுஒரு சவால் , ஓர் அறை கூவல். அதை நம்புவதற்கு இறைவனின் சிறப்பான ஆசி தேவை. இயேசு தோமாவின் நம்பிக்கை இன்மையைச் சாடுகின்றார். காணாமலே நம்புவோர், பேறுபெற்றோர் என்று உரைத்தார். பின்பு தோமா இயேசுவில் நம்பிக்கை கொண்ட வரலாறு அழ காக விபரிக் கப்படுகிறது என்று கூறினாலும் மிகை யாகாது.

இயேசு தோமாவை அழைத்துத் தம் கைகளையும் விலாவை யும் தொட்டுப் பார்க்கச் சொல்கிறார். இயேசு காட்சியளிக்கது ஒரு மாயக் தோற்றமல்ல, பகல் கனவும் அல்ல ,மாறாக உண்மையா கவே இயேசு தம் சீடர்களின் முன் தோன்றி நின்றார். இவ்வாறு அழைத்தபின் தோமா இயே சுவை அணுகி அவரைத்தொட் டுப் பார்க்க வில்லை . அதற்கு முன் னரே அவர் இயேசுவின் கால்களில் விழுந்து விட் டார். 'ஐயம் தவிர்த்து நம்பிக்கை கொள்' என்று கூறிய இயேசுவின் வார்த்தைகளே அவருக்குப் போதுமாயிற்று.



ஆனால் ஐயத்தைத் தவிர்த்து நம்பிக்கை கொள்ள வேண்டும் என்னும் இயேசுவின் அழைப்பு நம் இதயச் செவிகளில் ஒலித்துக் கொண்டே இருக்கிறது. தோமா இயேசுவைத் தம் 'ஆண்டவர்' என்றும் 'கடவுள்' என்றும் அறிக்கையிட்டார் (யோவா20:28). அதுபோல் நாமும் இயேசுவை நம் மீட்பாராக ஏற்று , அவருடையவழியில்நடந்துசென்றிட அழைக்கப்படுகின்றோம். தோமாவைப் போல் இயேசுவின்பால் 'நீரே என் ஆண்டவர்! நீரே என் கடவுள்' என சரணாகதியடைந்து உடனிருக்கும்போது உண்மையிலேயே நாமும் 'பேறுபெற்றோராவோம்'.

## பரமபிதா காட்டிய பாதை

ம. பிரான்சிஸ்,
கத்தோலிக்க சுதந்திர,
பத்திரிகையாளர்.

# மருந்துக்கு உதவும் விலங்குகள்

மருந்தாகப் பயன்படுத்தக்கூடிய ஒரு புரதத்தைக் கண்டுபிடிப்பது சுலபமான காரியம் தான். ஆனால் அதைப் பெருமளவில் உற்பத்தி செய்வது மிகவும் சிரமமாக இருக்கிறது.

மருந்துகளாகச் செயற்படக்கூடிய புரதங்களால் பெரும்பாலானவை பெரியவையாகவும், சிக்கல் நிறைந்தவையாகவும் இருப்பதால் அவற்றை மரபியல் மாற்றம் செய்யப்பட்ட பக்றீரியாக்களின் உதவியுடன் உற்பத்தி செய்வது முடியாத காரியமாகவே இருக்கிறது. எனவே விஞ்ஞானிகள் விலங்கு செல்களின் உதவியை நாடியிருக்கிறார்கள்.

மனிதப் புரதங்களை பாலூட்டிகளின் செல்களை வளர்க்கக்கூடிய (Cultures) வைத்து உற்பத்தி செய்ய முடியும். ஒரு புரதத்தை உருவாக்கும் சங்கேதக் குறிப்புக்கள் அடங்கிய ஜீன்களை விலங்குச் செல்களுக்குள் புகுத்தி, அவற்றைச் சத்துப்பொருட்கள் அடங்கிய வளர் ஊடகக் கரைசல்களில் கலந்து விடுவார்கள்.

அவை, பெரும் உலோகப்பீப்பாய்களில் நுரைத்துக்கொண்டிருக்கும். அவற்றுக்கு உயிரியில் வினைக் கலங்கள் (Bio reactors) என்று பெயர். ஆனால், இத்தகைய கலங்களில் செல்கள் மிகச்சிறிய அளவுகளிலேயே புரதங்களை உற்பத்தி செய்கின்றன. அத்துடன் பாலூட்டி விலங்குச் செல்கள் வளர் ஊடகங்களில் விரைவாகப் பல்கிப் பெருகுவதில்லை. மேலும், இத்தகைய உயிரியல் வினைக்கலங்களை நிறுவுவதற்கும், இயக்குவதற்கும் பெருஞ் செலவு ஏற்படுகிறது.

பயனுள்ள சில மனிதப்புரதங்களை உற்பத்தி செய்ய விஞ்ஞானிகள் இரண்டு புதிய உத்திகளை உருவாக்கியிருக்கிறார்கள். ஒன்றில் வைரஸ்களும், மற்றதில் ஆடுகளும், பசு மாடுகளும் உதவுகின்றன.

குச்சி வைரஸ்களில் (Baculo Viruses) 30 க்கும் மேற்பட்ட மனிதப் புரதங்களுக்கான உற்பத்திக் குறிப்புக்களைப் புகுத்துவதில் வெற்றி ஏற்பட்டிருக்கிறது. "மைக்ரோ ஜெனிசியஸ்" என்ற அமெரிக்க நிறுவனம் இம்முறையைப் பயன்படுத்தி எஸ்ட்ஸுக்கான தடுப்பு மருந்தைக் கண்டுபிடிப்பதில் குறிப்பிடத்தக்க வெற்றி பெற்றிருக்கிறது.

சுண்டெலிகளின் உடலில், "திசு பிளாஸ்மினோஜென் தூண்டி" (சுருக்கமாக "டி.பி.ஏ") என்ற மனிதப் புரதத்தை உற்பத்தி செய்வதில் இன்னொரு குழு வெற்றி பெற்றிருக்கிறது. ஆனால் சுண்டெலிகளின் உடம்பிலிருந்து அதிக டி.பி.ஏ. வைப் பெறமுடியாது.

எனவே, இன்டக்ரேட்டட் ஜெனிடிக்ஸ் என்ற நிறுவனம் இப்போது அதே உத்தியை ஆடுகளில் செயற்படுத்த முயன்று வருகிறது. அந்த முயற்சி வெற்றி பெற்றால் ஒரு லீற்றர் ஆட்டுப்பாலில் இருந்து சுமார் 10 கிராம் டி.பி.ஏ.வைப் பெற முடியும்.

ஆடுகளை விடப் பசுமாடுகள் பத்து மடங்கு அதிகமான பாலைத் தருகின்றன. ரோரர்பார்மசூட்டிக்கல்ஸ் என்ற அமெரிக்க மருந்து உற்பத்தி நிறுவனம், பசுமாடுகளின் மடியில் மனிதப் புரதங்களை உற்பத்தி செய்ய முயன்று வருகின்றது.

## வெப்பம் உண்டாக்கும் கருவி

வெப்பப் பிரதேசத்தில் உள்ள நாம் எப்படி குளிர் சாதனங்களை நாடுகிறோமோ, அப்படிக் குளிர்ப் பிரதேசங்களில், வெப்பம் உண்டாக்கும் கருவிகளை நாடுகிறார்கள். அங்கு வெப்பம் உண்டாக்கப்படும் முறைகளைப் பார்க்கலாம்...

வெப்பக் கடத்தல்- வெப்பப்பொருளிலிருந்து உஷ்ணம் எரிபொருட்களுக்குக் கடத்தப்படுகிறது. இது மூன்றுமுறைகளில் கடத்தப்படுகிறது. மிகச் சூடாக இருக்கும் பொருளின் மீதுமற்றொரு பொருள் படும் போதோ அல்லது அந்தப் பொருளை ஒரு பழுக்கக் காய்ச்சிய கம்பி மூலம் சுடவைக்கும்போதோ உஷ்ணம் ஒரு பொருளிலிருந்து மற்றொரு பொருளுக்குக் கடத்தப்படுகிறது.

திரவம் அல்லது வாயு சுடவைக்கப்படும் போது, அந்தத் திரவம் அல்லது வாயுவிலிருந்து வெப்பம் வெளியேற்றப்படுகிறது. வீட்டில் உள்ள ஹீட்டரில் தொட்டியில் பொருத்தப்படும் கம்பி, உஷ்ணப்படுத்தப்பட்டு அது மூ கியிருக்கும் நீரைச் சுட வைகிறது. இது "கன்வெக்ஷன்" எனப்படும். அந்த வெப்பம், வேறொரு பொருளை வெப்பப்படுத்தும். கதிர் வெப்பம் என்பது "ரேடியேஷன்" மூலம் ஏற்படுவதாகும்.மத்திய வெப்பப் பரவல் (Central heaters) ஒரு குறிப்பிட்ட வெப்பமானியில் இருந்து வரும் வெப்பம்,ஒரு கட்டடம் அல்லது அறைமுழுவதையும் உஷ்ணப்படுத்துவதற்கு மத்திய வெப்பப் பரவல் முறை என்று பெயர். குளிர் அதிகமுள்ள இங்கிலாந்து,அமெரிக்கா போன்ற வெளிநாடுகளில் எல்லா வீடுகளிலும் "சென்டர் ஹீட்டர்கள்" பொருத்தப்படுகின்றன.

Enlighten Your Career
முதன் முதலாக யாழ்மண்ணில்
சர்வதேச பல்கலைக்கழகங்களினூடான
பொறியியல்மானி, விஞ்ஞானமானிக்கற்கைநெறிகள்
BEng. From Unversity of Wolverhampton UK
BSc. International Transportation Management and Logistics
From Dalian Maritime University (DMU)
Call Now : 011 4 486 486 / 0214 925 925
CINEC
Jaffna Campus
BRANCH OF CINEC MARITIME CAMPUS
KKS Road, Maruthanarmadam, Jaffna.
ADinnovations






# இலங்கை பிரிமியர் லீக்குக்கு 7 அணிகள்!

# வடக்குக்கு விக்டோரி அணித்தலைவர்

## யூலையில் குதூகல ஆரம்பம்

(கொழும்பு)

எதிர்வரும் யூலை மாதம் பிராந்திய அணிகளுக்கிடையிலான 20 ஓவர் கிரிக்கெட் சுற்றுப்போட்டி யொன்று நடைபெறவுள்ளது. இப்போட்டியில் வடக்கு அணிக்கு நியூசிலாந்தின் டானியல் விக்டோரியும், கிழக்கு அணிக்கு பாகிஸ்தானின் சஹிட் அப்ரிடியும் தலைமை தாங்கவுள்ளனர்.



இலங்கை இருபது- 20 பிரிமியர் லீக் (SL-T20-PL) எனப் பெயரிடப் பட்டுள்ள இச் சுற்றுப்போட்டி சமர்செட் எண்டர்டைமென்ட் வென்சர்ஸ் என்னும் அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ளது. 7 அணிகள் இப்போட்டியில் பங்குபற்றவுள்ளனர்.



ஜுலை 15ஆம் திகதி ஆரம்பமாகும் இச் சுற்றுப்போட்டி 18 நாட்கள் நீடிக்கும். மொத்தமாக 24 போட்டிகள் நடைபெறும். இறுதிப் போட்டி ஆர். பிரேமதாஸ அரங்கில் நடைபெறும்.

இப்போட்டிகளில்மேற்கு அணிக்கு திலகரட்ண டில்சான் தலைமை தாங்கவுள்ளார். கந்துரட்ட (மலையக) அணிக்கு குமார் சங்கக்காரவும் றுகுணு (தெற்கு) அணிக்கு சனத் ஜயசூர்யவும் தலைமை தாங்குவர். வயம்ப (வடமேற்கு) அணிக்கு மஹேல ஜெயவர்தனாவும் ஊவா அணிக்கு சமிந்த வாஸும் தலைமை தாங்குவர்.





போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கு பிராந்திய அணிகளுக்கு வெளிநாட்டு வீரர்கள் அணித் தலைவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இதன்படி வடக்கு அணிக்கு நியூசிலாந்தின் டானியல் விக்டோரி தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். கிழக்குப் பிராந்திய அணிக்கு பாகிஸ்தான் அணித்தலைவர் சகிட் அப்ரிடி தலைமைதாங்கவுள்ளார்.

ஒவ்வொரு பிராந்திய அணியிலும் 5 வெளிநாட்டு வீரர்கள் பதிவு செய்யப்படலாம். ஆனால் ஒவ்வொரு போட்டியின்போதும் ஒரு அணியில் 4 வெளிநாட்டு வீரர்கள் மாத்திரமே விளையாட முடியும். இப்போட்டிகளில் இளம் வீரர்களுக்கு வாய்ப்பளிக்க இலங்கைக் கிரிக்கெட் சபையும் தேசிய கிரிக்கெட் தேர்வாளர்களும் இணங்கியுள்ளனர். சுமார் 70 இலங்கைக் கிரிக்கெட் வீரர்கள் இப் போட்டிகளில் விளையாட பதிவு செய்யப்படவுள்ளனர்.





அத்துடன் மேற்கிந்திய அணியின் கிறிஸ் ஹெயில், டரன் பிராவோ, இந்திய அணியின் இர்பான் பதான், யூசுப் பதான், தென்னாபிரிக்காவின் ஹேர்சல் கிப்ஸ், டேவிட் வோர்னர், ஷோன் ரைட் மற்றும் பாகிஸ்தான் வீரர்களும் இப் போட்டிகளில் விளையாடவுள்ளனர்.

சுழற்பந்துவீச்சு ஜாம்பவான் முத்தையா முரளிதரன் இப் போட்டியில் விளையாடுவாரா என்பது இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை.



2011 கிண்ணத் தொடரில் சுற்றுப் போட்டி முகாமையாளராக பணியாற்றிய மிலிந்த் ரெஜி இலங்கை பிரிமியர் லீக் தொடரில் கிரிக்கெட் தொடர்பான சகல விடயங்களுக்கும் பொறுப்பாளராக இருப்பார். இவர் இந்தியாவின் ரஞ்சிக் கிண்ணப் போட்டிகளில் மும்பை அணித் தலைவராக விளங்கியவர் என்பது குறிப்பிடத்தக்கது.


வாடிக்கையாளர்களின் நன்மதிப்பைப் பெற்றது



சிறி நதியா

நகை மாளிகை

"அக்ஷய திருதியை"



06.05.2011 வெள்ளிக்கிழமை அன்று தங்கப்பவுண் வாங்கும் விசேட தினமாகும். அன்றைய தினம் தங்க நகைகள் வாங்கும் வாடிக்கையாளர்களுக்கு எமது நிறுவனங்களில் விசேடமாக அன்பளிப்புக்கள் வழங்கப்படும் என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகிறோம்.

அழகிற்கு அழகு செய்யும் தங்க நகைகளுக்கு

மிகச்சிறந்ததும் கைராசியானதுமான நிறுவனம்

சிறி நதியா நகை மாளிகை

01,கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே:-021 222 2709

கிளை:- 56,கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே:- 021 222 6744

# ஐ.நா. நிபுணர்குழுவின் அறிக்கையை வாய்ப்பாக பயன்படுத்துவோம்

## தமிழ் தேசிய மக்கள் முன்னணி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஒடுக்குமுறையிலிருந்து விடுபட ஐ.நா. அறிக்கையை தமிழ் மக்கள் வாய்ப்பாகப் பயன்படுத்த வேண்டும் என தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் மேதின அறைகூவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மே தினம் என்பது சர்வதேச தொழிலாளர்கள் தமது உரிமைகளை வென்றெடுத்த நாளாகும். ஒவ்வொரு வருடமும் அதே தினம் தொழிலாளர்கள் ஒன்று கூடி தமது உரிமைகளை சுதந்திரமாக வலியுறுத்துவதே மரபாக உள்ளது.

கடந்தகால மே தினங்களில், தமிழ் தொழிலாளர்கள் மட்டுமல்லாது தமிழ் தேசத்து மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து இன ஒடுக்குமுறைக்கு எதிராகவும், விடுதலையை கோரியும் குரல் கொடுத்துவந்த வரலாறு எமக்குண்டு. ஆனால் 2009 மே மாதத்தின் பின்னர் தமிழ் மக்கள் தமது உரிமைகளை இழந்து அடங்கி, ஒடுங்கி அடிமைகளாக வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

தமிழ் மக்கள் இலங்கை அரசினால், இன அழிப்புக்கு உள்ளடக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றனர் என்பதை மறைக்கவோ, மறுக்கவோ முடியாத சர்வதேச சாட்சியாக ஐ.நா. அறிக்கை அமைந்துள்ளது. இந்த அறிக்கை தமிழ் மக்களுக்கு ஆறுதலையும் எதிர்காலம் பற்றியதொரு நம்பிக்கையும் ஏற்படுத்தியுள்ளது.

ஆனால் இலங்கை அரசு அவ்வாறான ஓர் விசாரணை இடம்பெறாமல் தடுப்பதற்கான இராஜதந்திரப் போராட்டங்களில் ஈடுபடத் தொடங்கியுள்ளது.

ஐ.நா. வெளியிட்டுள்ள அறிக்கையானது ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டுள்ள தமிழ்த் தேசத்து மக்கள் உரிமைகளை பெறுவதற்கான வாய்ப்பான சூழலை உருவாக்கியுள்ளது. இந்த வாய்ப்பை உரிய முறையில் பயன்படுத்தி ஒடுக்கு முறையில் இருந்து விடுபட்டு உரிமைகளை வென்றெடுக்க தமிழ் மக்கள் அனைவரையும் ஒற்றுமையாக ஓரணியில் திரளுமாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தனது மேதின அறைகூவலை விடுக்கின்றது என்றுள்ளது. (எ)

## தமிழர்களிடம் பலவந்த...

தெரிவித்துள்ளார்.

கொழும்பில் வாழும் தமிழ் மக்களிடம் பலவந்தமான முறையில் கையொப்பங்கள் திரட்டப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பலவந்தமாக கையொப்பங்கள் திரட்டப்படுவதாக எமக்கு தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

யுத்தம் வெற்றியீட்டப்பட்ட காலப்பகுதியிலும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றது.

இவ்வாறான நடவடிக்கைகளின் மூலம் நாட்டில் தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாது என அவர் வலியுறுத்தியுள்ளார். (ச-5)

## ஐ.நாவின் அறி...

ளர்களை படுகொலை செய்த ஓர் அமைப்பிற்கு ஆதரவாக நிபுணர்குழு அறிக்கை வெளியிட்டுள்ளதாகவும் எனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கட்சி இந்த அறிக்கைக்கு கடும் எதிர்ப்பை வெளியிட வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ச-5)

## நாளை திங்...

விடுமுறை வழங்கப்படுமா? என பல்வேறு தரப்பினர் தம்மிடம் விசாரித்ததாக அவர் தெரிவித்தார்.

தொழிலாளர் தின நிகழ்வுக்காகவே மே முதலாம் திகதி விடுமுறை வழங்கப்படுகின்றது. இலங்கையில் உள்ள தொழிலாளர்கள் இன்று நிகழ்வுகளில் கலந்துகொள்ள முடியும். இந்நிலையில் நாளை திங்கட்கிழமை விடுமுறை வழங்குவது தொடர்பில் அரசாங்கம் இதுவரை எந்தவித தீர்மானத்தையும் எடுக்கவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (ச-5)

## அரசாங்கப் பிரதிநிதி...

அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் அரசாங்கத்தின் குறித்த சில அமைச்சர்கள் அமெரிக்க குடியுரிமையை கொண்டிருப்பதை சுட்டிக்காட்டிய அவர்கள் அந்தந்த நாடுகளில் வைத்துக் கைது செய்யப்படலாம் எனக் கூறியுள்ளார்.

அத்துடன் அந்தந்த நாடுகளிலுள்ள ராஜதந்திர செயன் முறைகளையே இதனைத் தீர்மானிக்கும் என விஜயதாச ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனினால் நிபுணர்கள் குழு நியமிக்கப்பட்டமையானது சட்டத்துக்கு முரணானது என குறிப்பிடும் இவர், ரோம் சட்டத்தில் இலங்கை ஒரு தரப்பாக இல்லையென்பதால் கொழும்புக்கு எதிராக விசாரணைகளை மேற்கொள்ள முடியாதெனவும் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்திற்கெதிராக ஐக்கிய நாடுகள் சபை தொடர்ந்து நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனில் பாதுகாப்பு பேரவையின் அனுமதியைப் பெறவேண்டும் எனும் ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஐக்கிய நாடுகள் சபை நிபுணர்குழு அறிக்கை தொடர்பில் ஐக்கிய தேசியக்கட்சியின் நிலைப்பாடு குறித்து எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கஎதிர்வரும் 3ஆம் திகதி அறிவிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. (ச-5)

# கொழும்பில் இன்று பேரணி தடுக்கக் கோருகிறார் சீமான்

(கொழும்பு)

இலங்கை அரசு போர்க்குற்றம் புரிந்துள்ளது என்று குற்றஞ்சாட்டி வெளியிடப்பட்ட ஐ.நா நிபுணர்கள் குழுவின் அறிக்கைக்கு எதிராகவும் இலங்கை அரசுக்கு ஆதரவாகவும் இன்று மே 1 ஆம் நாள் கொழும்பில் நான்கு இடங்களில் இருந்தும் ராஜபக்ஷவின் உத்தரவின் பேரில் பேரணிகள் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இது தொடர்பாக நாம் தமிழர் கட்சித்தலைவர் செந்தமிழன் சீமான் நேற்று அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார். அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கை அரசு போர்க்குற்றம் புரிந்துள்ளது என்று குற்றம்சாட்டி வெளியிடப்பட்ட ஐ.நா நிபுணர்கள் குழுவின் அறிக்கைக்கு எதிராகவும் இலங்கை அரசுக்கு ஆதரவாகவும் இன்று மே 1ஆம் நாள் கொழும்பில் நான்கு இடங்களில் இருந்தும் பேரணிகள் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்தப் பேரணி ஐ.நாவுக்கு எதிரானது என்பது மட்டுமல்ல, முக்கியமாகத் தமிழர்களுக்கு எதிரானது ஆகும். இந்தப் பேரணியின் மூலம் தமிழர்களுக்கு எதிரான மிகப் பெரிய கலவரத்தை நடத்த திட்டமிட்டுள்ளது.

தமிழர்களின் வணிக நிறுவனங்கள் மற்றும் வீடுகள் தாக்குதலுக்கு உள்ளாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் அங்குள்ள தமிழர்களின் உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாகவும் திட்டமிட்ட முறையில் இந்தக் கலவரத்தினைச் செய்ய சிங்கள ரவுடிகளுக்கும் சிறைக்கைதிகளுக்கும் குறிப்புகள் அளிக்கப்பட்டுள்ளன என்றும் அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் இந்தப் பேரணியில் கலந்துகொள்ளுமாறும் மறுத்தால் கொலை செய்யப்படுவீர்கள் என்றும் தமிழர்கள் மிரட்டப்பட்டு வடகிழக்கில் இருந்து அழைத்து வரப்பட்டுள்ளனர்.

இவ்வாறு திட்டமிட்டு நிகழ்த்தப்படும் பேரணி மற்றும் வன்முறையின் மூலம் தனக்கு எதிரான எதிர்ப்புக்குரல் உலகெங்கிலும் உள்ள தமிழர்களிடம் இருந்து எழுவதை அச்சுறுத்தி தடுக்க வேண்டும் என்ற நோக்கத்திலும் வடகிழக்கில் இருந்து தமிழர்களை விரட்டியதைப் போல கொழும்பு நகரத்தில் இருந்தும் விரட்ட வேண்டும் என்னும் நோக்கிலும் அரசு செயல்படுகிறது.

இந்தப் பேரணியினால் ஐ.நா. அலுவலகமும் அதன் ஊழியர்களுமே அச்சத்தில் இருக்கும் பொழுது அங்கிருக்கும் அப்பாவித் தமிழர்கள் நிலை பற்றிச் சொல்ல வேண்டியது இல்லை.

ஏற்கனவே சமீபகாலமாக கொழும்பில் வெறித்தனமாக அலைந்து திரியும் சில பேரினவாதக் கும்பல்களால் தமிழ் மக்கள் பெரும் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றனர்.

ஆகவே இந்தப் பேரணி தடுக்கப்பட வேண்டியது ஒன்று ஆகும். ஏற்கனவே கொழும்பில் 1983ஆம் ஆண்டு நடைபெற்ற பேரணியில் தமிழர்களுக்கு எதிரான மிகப் பெரிய கலவரம் நடைபெற்றது. அது போன்ற சம்பவம் மீண்டும் தொடர அனுமதிக்கக் கூடாது.

ஆகவே இந்தியா இதில் உடனடியாகத் தலையிட வேண்டும். லட்சக்கணக்கான தமிழர்களை கொலை செய்ய சிங்கள அரசுக்கு அனைத்து உதவிகளையும் செய்த இந்தியா கொழும்பில் வசிக்கும் பெருவாரித் தமிழ்நாட்டுத் தமிழர்கள் நலன் கருதியாவது உடனே தலையிட வேண்டும்.

அங்கு வாழும் தமிழர்களின் உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்புக்கு உரிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். இதனையும் மீறி தமிழர்கள் அங்கு தாக்கப்பட்டால் தொடர்ந்து தமிழன் அடிவாங்கிக்கொண்டு மட்டும் இருக்க மாட்டான் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன் என்றுள்ளது. (எ-6)

# வில்லியம்ஸின் மனைவியுடன் தமிழ்க் குடும்பத்துக்கு நட்பு

(லண்டன்)

பிரித்தானிய இளவரசர் வில்லியம்ஸின் காதல் மனைவி கேட் மிடில்டனுக்கும் இலங்கைத் தமிழ் குடும்பம் ஒன்றுக்கும் இடையிலான ஒரு தொடர்பு அண்மைய நாட்களில் வெளியில் தெரியவந்துள்ளது.

கேட் மிடில்டனின் தாய் கரோல் எலிசபெத், இவர் லண்டனின் உள்ள சவுத்ஹோல் என்கிற இடத்தில் கிளேரன்ஸ் வீதியில் உள்ள 53ஆம் இலக்க வீட்டில் பிறந்தவர். 12 வயது வரை இவ் வீட்டில்தான் வாழ்ந்து இருக்கின்றார். கேட் மிடில்டனின் மூன்று தலைமுறையினர் இவ்வீட்டில் வசித்து வருகின்றனர்.

ஆனால் இவ் வீட்டை 2001ஆம் ஆண்டு இலங்கைத் தமிழரான இராஜகுமாரன் என்பவர் வாங்கி இருக்கின்றார். இவர் மனைவி மற்றும் மூன்று பிள்ளைகள் ஆகியோருடன் இவ்வீட்டில் வசித்து வருகின்றார். இவ் வீட்டுக்கும் பிரிட்டிஷ் அரச குடும்பத்துக்கும் இடையில் ஏற்பட்டு இருக்கும் தொடர்பு இராஜகுமாரன் குடும்பத்துக்கு அதிர்ச்சி கலந்த மகிழ்ச்சியை கொடுத்து உள்ளது. (ச-5)

## 4, 700 புலி உறுப்பினர்...

புலிகளுடனான இறுதிக்கட்ட யுத்தம் முடிவுற்றதைத் தொடர்ந்து மொத்தமாக பதினோராயிரத்து அறுநூற்றி தொண்ணூற்றி ஆறுபேர் தடுப்புக்காவல் உத்தரவுடன் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டனர்.

அவர்களில் பெருபாலானவர்கள் தற்போதைக்கு விடுவிக்கப்பட்டுள்ளனர். இன்னும் நான்காயிரத்து எழுநூறு பேர் மட்டுமே எஞ்சியுள்ளனர்.

அவ்வாறு எஞ்சியுள்ளவர்கள் தற்போதைக்கு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அமைந்திருக்கும் ஒன்பது புனர்வாழ்வு நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டு புனர்வாழ்வுக்குட்படுத்தப்படுகின்றனர் என்றும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

## ஐ.நாவின்...

நிபுணர்கள் குழுவின் அறிக்கை தொடர்பில் அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ பதிலுக்காக தொடர்ந்தும் ஐக்கிய நாடுகள் சபை காத்திருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நிபுணர்கள் குழு அறிக்கை வெளிடப்படும் போது அதற்கு சமாந்தரமாக இலங்கை அரசாங்கத்தின் பதில் அறிக்கையையும் வெளியிடுவதற்கு ஐக்கிய நாடுகள் சபை உத்தேசித்திருந்தது.

எனினும் அரசாங்கம் இதுவரை எவ்வித பதிலையும் உத்தியோக பூர்வமாக வெளியிடவில்லை.

அத்துடன் இவ் அறிக்கை தொடர்பில் உறுப்பு நாடுகள் கருத்துக்களை வெளியிட முடியும்.

இந்த விடயத்தை உன்னிப்பாக அவதானித்து உறுப்பு நாடுகள் கருத்து வெளியிடும் என ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் பான் கீ மூன் எதிர்பார்ப்பதாகவும் அவரது பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

MBBS / MD - DENTISTRY (English Medium)
Study in UKRAINE East Europe & obtain World Class Degree
CREMEA STATE MEDICAL UNIVERSITY
LUGANSK STATE MEDICAL UNIVERSITY
• உயர்தரமான தங்குமிட வசதி, நூலக வசதி அத்துடன் இன்னும் பல வசதிகளுடன் குறைந்த செலவில் பாடநெறிக்கட்டணம்
• Just 3 A/L passess (Biology, Chemistry & Physics)
Srilanka Medical Council (SLMC)
World Health Organization (WHO)
General Council of Medicine (UK)
Eligible for Licensing Examination (US) and PLAP TEST (UK)
ஆகிய நிறுவனங்களால் அங்கீகரிக்கப்பட்டது.
• மிக குறைந்த செலவில் விரைவாக நுழைவுச்சீட்டுடன், விசாவும் உங்கள் இல்லங்களுக்கு நேரே கொண்டுவர உறுதியளிக்கின்றோம்.
• ஆவணப்படுத்தல் செயற்பாடுகளுக்கான கட்டணங்களை மாத்திரம் எம்மிடம் செலுத்துவது போதுமானது.
Other Courses are also available :-
Aero Space Engineering, Computer Engineering, Computer Science and Many more.
மேலதிக விபரங்களுக்கு உத்தரவாதம் தரக்கூடிய இலங்கையில் அதிகாரம்பெற்றுள்ள உண்மைப்பிரதிநிதியை தொடர்பு கொள்ளவும்:-
DR. G. SRIKANTHAN - 077-7266570
Sricares Overseas Consultancy - Colombo-13. E-mail drsri50@yahoo.com

இறைச்சிக் கோழி விற்பனை
CSI
மொத்தமாக -280/=
சில்லறை -300/=
(4826)
வரணி மிஷன் பாம், வரணி
தொடர்புகளுக்கு: 0777715367

விசேட கட்டணச்சலுகையில் கணினிக்கற்கை நெறிகள்
அங்கீகரிக்கப்பட்ட கணனி டிப்ளோமா சான்றிதழ்கான கற்கைநெறிகள்.
Diploma in Microsoft Office
Adv. Dip. in Hardware & Networking
Dip. in Pre-Press Desktop Publishing
Dip.in Web Designing & Development
Dip. in Computerized Accounting
AutoCAD
Internet and E-mail
பல்கலைக்கழக HNDA, HNDM, aat, A/L, மாணவர்கள் மற்றும் கணக்கியல் துறையில் ஆர்வமுடைய வர்களுக்கான
Tally Dip. in Computerized Accounting
*Quick Books * Accpack * MYOB
முழுமையானதும் தரமானதுமான கணினிக்கல்வி
DMI COMPUTER EDUCATION
நவீன தொழில்நுட்பங்கள், Advanced Video Editing நுணுக்கங்களையும் உள்ளடக்கிய தமிழ் மொழி விளக்கங்களுடனான முழுமையான Video Editing கற்கை நெறி
Diploma in Video Production & Multimedia
Int. to Digital Video, Adobe Premiere CS4, Particlelllusion, Photoshop CS5 Pinnacle Studio HD 14, COOL 3D Studio, Adobe After Effects, & Nuendo.
Free: Title CDs, Effects CDs, Background DVDs, &Software DVDs
DMI COMPUTER EDUCATION
No.113, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். Tel.: 021-222 4403
M.M.V. வீதி, நெல்லியடி. Tel. : 021-226 2470
No.174, கண்டி வீதி, சாவகச்சேரி. Tel. :021-227 0243

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.05.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.